வாரப்பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194, ஏ. பண்டாரநாயக்க மாவத்த கொழும்பு-12.

திறம் சலவைக்கு
மில்க் வைற் சோப்

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

புத்தகம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 1991 வைகாசி திங்கள் 30-ம் நாள் (12—6—60) ஞாயிற்றுக்கிழமை துல்ஹஜ் 16 | இதழ் 2

படைத் தலைவர்களை ஏவிவிட்டார் டட்லி

பொலீஸாரைக் கண்காணிக்க!

தேர்தல் கூட்டங்களில் மறைந்து இருந்து விஷயம் அறியவும் ஆக்ஞை

ஜூன் 2-ல் இரகசியக் கூட்டம் கூட்டிச் செய்யப்பட்ட ஏற்பாடுகள்

(சுதந்திரன் ஒற்று நிருபர்)

கடந்த இரண்டாந் தேதி இரகசியக் கூட்டம் ஒன்றைக் கூட்டினார் பிரதமர் டட்லி சேனநாயகா. தமக்கு வேண்டிய படைத் தலைவர்களை அழைத்தார். 'பொலீஸாரை ஜரூராகக் கண்காணியுங்கள்' என்று அவர்களைப் பணித்தார். அத்தோடு தேர்தல் கூட்டங்களுக்கு படையினரை மறைவாக அனுப்பி விஷயம் அறிந்து தமக்கு அவ்வப்போது அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் அவர்களுக்கு உத்தரவிட்டார் அவர்.

இந்த இரகசிய மாநாட்டில் டட்லி தமக்கு பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு அபயக்கூனில் நம்பிக்கை இல்லை என்று படைத்தலைவர்களுக்குத் தெரிவித்தார். திரு அபயக்கூன் பண்டாரநாயகாவால் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலாக நியமிக்கப்பட்டவர். அவர் எப்பொழுதும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு சாதகமாகவே நடக்கலாம். அதனால் அவரையும் அவரின் தலைமையில் இயங்கும் இலாகாவினரையும் எப்பொழுதும் உஷாராகக் கவனிக்க வேண்டும் என்று டட்லி படைத் தலைவர்களுக்கு சொல்லி வைத்தார்.

பொலீஸாரில் தமக்கு சந்தேகம் இருப்பதால் தேர்தல் கூட்டங்களையும் அவர்களின் பூரண பொறுப்பில் விடுவதில் பயனில்லை என்றும் அவற்றையும் படைத் தலைவர்கள் தமது வீரர்கள் மூலம் மேற்பார்வை செய்ய வேண்டும் என்றும் டட்லி கூறியிருப்பதாகத் தெரிகிறது.

தேர்தல் கூட்டங்களுக்கு படைத் தலைவர்கள் தமது வீரர்களை வேற்றுடையில் மறைவாக அனுப்பி விஷயம் அறிய வேண்டும் என்றும் அவ்வப்போது தமக்கு அறிக்கைகள் சமர்ப்பித்து நிலைமையைத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் டட்லி படைத் தலைவர்களுக்கு உத்தரவிட்டிருப்பதாகவும் அறிய வருகிறது.

உதவி நன்கொடை பெறும்

பாடசாலைகளும் அரசாங்கமும்

தமிழரசுக் கட்சி நிலை என்ன?

எஸ். ஜே. வி. அறிக்கை

"உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் வலுக்கட்டாயமாக எடுத்து நடத்துவதைத் தமிழரசுக் கட்சி ஆதரிக்கவில்லை" என்று தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் சுதந்திரனுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் கட்சியின் நிலைமையை மேலும் ஊர்ஜிதம் செய்திருக்கிறார்.

அந்த அறிக்கையில் அவர் தொடர்ந்து சொல்லியிருப்பதாவது:—

"பாடசாலைக்குப் போகும் வயது வந்த பெருந்தொகையான குழந்தைகள் போவதற்குப் பாடசாலைகள் இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குப் புதிய பாடசாலைகள் கொடுப்பதிலேயே அரசாங்கம் தனது கவனத்தைச் செலுத்த வேண்டும்; சக்தியைப் பிரயோகிக்க வேண்டும். மற்றப்படி உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை எடுத்து நடத்துவதில் அல்ல. உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுள் பல நன்றாக நிர்வகித்து நல்லபடியாக நடத்தப்படுகின்றன"—இவ்வாறு தமிழரசுத் தந்தை தமிழரசுக் கட்சி சார்பில் சுதந்திரனுக்கு விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருக்கிறார்.

'கைமுனு பெரமுனை' என்ற பெயரில் குண்டர் படை

பொதுத் தேர்தலை யொட்டி யு. என். பி. திரட்டி வருகிறது

(சுதந்திரன் நிருபர்)

'கைமுனு பெரமுனை' என்ற பெயரில் குண்டர்கள் படையொன்றினை யு. என். பி. திரட்டி வருவதாக அறியப்படுகிறது. எதிர்வரும் பொதுத் தேர்தலில் தோல்வியுற்றால் இந்த குண்டர்கள் படையைத் தூண்டிவிட்டு நாட்டில் கொந்தளிப்பையும் வகுப்புக் கலவரங்களையும் ஏற்படுத்துவதே யு. என். பி. யின் அந்தரங்க நோக்கம் என்றும் சொல்லப்படுகிறது.

தமிழர்களை அழிக்க வேண்டுமென்று கங்கணங்கட்டிக் கொண்டு செயலாற்றி வந்தவனும், அனுராதபுரத்தில் தர்ம அரசு நடத்திய தமிழ் அரசன் எல்லாளனைக் கொன்று சிங்கள இராச்சியத்தை நிறுவியவனுமாகிய சரித்திரகால சிங்கள மன்னன் துட்டகைமுனுவின் பெயரோடு ஐக்கிய தேசியக் கட்சி ஒரு குண்டர்கள் படையைத் திரட்டி வருகிறது.

இந்தப் படையில் சேருமாறு சிங்கள வாலிபர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கிறது. இதற்கான விண்ணப்பப் பத்திரங்களும் விவரங்களும் யு. என். பி. யின் சிங்கள வெளியீடான "சியரட்ட" என்ற பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள. ஆனால் இந்தக் குண்டர் படையைப் பற்றிய எந்தத் தகவலும் யு. என். பி. ஆங்கில வெளியீட்டில் தரப்படவில்லை.

1958ம் ஆண்டு வகுப்புக் கலவரத்துக்கு பெருமளவு தூண்டுகோலாயிருந்தது இந்த "சியரட்ட" பத்திரி

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ் மாநகர சபைக்கு விரைவில் புதிய மேயர்

பழைய மேயர் துரையப்பா பதவி நீக்கம் செய்யப்பட்டார்

(சுதந்திரன் யாழ் நிருபர்)

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு ஒரு புதிய மேயர் மிக விரைவில் தெரிவு செய்யப்படுவார். பழைய மேயர் திரு அல்பிரட் துரையப்பாமீது நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டுவிட்டதால் இந்த புதிய மாற்றம் ஏற்படவிருக்கிறது.

யாழ்ப்பாணம் பழைய மேயர் திரு அல்பிரட் துரையப்பாமீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை கடந்த திங்கட்கிழமைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுவிட்டது. பதினைந்து அங்கத்தவர்களைக் கொண்ட யாழ்ப்பாண மாநகர சபையில் பத்துப் பேர் மாஜி மேயர் துரையப்பாமீது நம்பிக்கையில்லையென்று வாக்களித்தனர். திரு துரையப்பா உட்பட ஏனைய ஐந்து அங்கத்தவர்களும் வெளிநடப்புச் செய்தனர். பிரேரணை நிறைவேறியது.

இரண்டு வாரங்களில் இப்பிரேரணை சட்டப்படி பரிபூரணத்துவம் பெறும். திங்

(9-ம் பக்கம் பார்க்க)

தொய்வு (ASTHMA) சங்காரி
ரிச்லெட்ஸ் பெக்டோரல்
(RICHELET'S PECTORAL)
* இடைவிடாத இருமல்
* இளைப்பு
* மூச்சுத் திணறல்
* கிர்ர் புர்ர் சத்தம்
* நெஞ்சு வலி
* தொண்டை வலி

இவைகளை ஒழித்துக் கட்டுவதில் இணையற்றது. ஈளை நோயினால் இன்னலுறுபவர்களுக்கு இது ஓர் வரப்பிரசாதம். சில டோஸ் சாப்பிட்டதுமே நிம்மதியளிக்கக் கூடிய இவ்வற்புத சஞ்சீவி.
எங்கும் கிடைக்கும்.
ஏக விநியோகஸ்தர்கள்:
வெஸ்டன் ஏஜன்சீஸ்,
63, பேங்ஷால் வீதி, கொழும்பு.
(போன் : 2885)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமஷ்டியும் ஒற்றை ஆட்சியும்

சுவிஸ் தேச அரசமைப்பின் சிறப்பு

ஐக்கிய அமெரிக்கா காட்டும் முன்மாதிரி

ஜனநாயகம் சிறந்த முறையில் இயங்கும் நாடுகளில் ஒன்று சுவிற்சர்லாந்து. மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு அளிக்கப் பட்டிருக்கும் பாதுகாப்பு, இந்நாட்டின் அரசியல் இனத்திற்கோ, மொழியினர்க்கோ, அல்லது சமயத்தினர்க்கோ அநீதி இழைத்து நாட்டின் ஒற்றுமையைக் குலைக்கக் கூடாது என்று சுவிஸ் அரசியல் சட்டம் திட்ட வட்டமாகக் கூறுகின்றது. சுவிஸ் மக்கள் பல்வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள். சமஷ்டி அரசியல் முறையே சிறந்தது என ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

ஐக்கிய அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் சமஷ்டி அரசியல் முறை இயங்குகிறது.

ஐக்கிய அமெரிக்கா

ஐக்கிய அமெரிக்கா பரந்த நிலப்பரப்பைக் கொண்டது. சுதந்திரமடையுமுன் பதின்மூன்று வெவ்வேறு இனத்தினர் அங்கு வாழ்ந்தனர். அவர்களிடையே சச்சரவுகள் ஏற்பட்டன. சமஷ்டி அரசியலமைப்பில் தான் யாவரும் ஒன்று பட முடியும் எனப் பின்னர் கண்டனர். அதன் பலன் தான் இன்றைய ஐக்கிய அமெரிக்கா.

சுவிஸ் தேசம்

சுவிஸ் தேசமும் இப்படித்தான் தோன்றியது. மலைகளால் பிரிக்கப்பட்டு தோட்டம் தோட்டமாக வாழ்ந்தனர். அங்கு வாழ்ந்தவர்கள் பல்வேறு இனத்தையும், சமயத்தையும் சார்ந்தவர்கள். வெவ்வேறு மொழிகளைப் பேசினர். பக்கத்திலுள்ள பலம் பொருந்திய ஓர் நாட்டினால் ஆபத்து ஏற்பட முடியும் என உணர்ந்தனர். ஆகையால் அவர்கள் ஒன்றுபட விரும்பினர். ஆனால் ஒன்று கூடினாலும் தத்தம் சுய நிர்ணயத்தை—சுதந்திரத்தை—இழக்க விரும்ப வில்லை. சுய நிர்ணயமும் அதே சமயம் பல்வேறு இனத்தின் ஒற்றுமையும் சமஷ்டி அரசியல் முறையில் தான் பெற முடியும் எனக் கண்டனர். அதனால் ஏற்பட்டது பட்டது தான் சுவிஸ் தேசம்.

அங்கு 71 வீதத்தினர் ஜெர்மனியர்கள்; 21 வீதத்தினர் பிரெஞ்சுக்காரர்; 6 வீதத்தினர் இத்தாலியர்கள். அங்கே ஜெர்மன், பிரெஞ்சு, இத்தாலிய பாஷைகள் பேசப்படுகின்றது.

அமைப்பு

சுவிற்ஸர்லாந்தில் 22 தொகுதிகள் உண்டு. அவை கான்றன்ஸ் (Cantons) எனப்படும். இவற்றில் மூன்று அரைவாசியாப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை Half Cantons எனப்படும். எல்லாத் தொகுதிகளுக்கும் சுய ஆட்சி உரிமை உண்டு. விரும்பினால் ஒன்றோடு ஒன்று இணைவதற்கு உரிமையுண்டு. ஆனால் அதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதி வேண்டும்.

இந்நாட்டின் சட்ட சபை பெடரல் அசெம்பிளி (Federal Assembly) எனப்படும். இது இரு சபைகளைக் கொண்டது. ஒன்று தேசிய சபை, (National Council) மற்றது இராச்சியங்களின் சபை, (Council of State). இச்சபைகளின் அங்கத்தவர்கள் கான்றன்களால் தெரிவு செய்யப்படுவார்கள்.

சட்ட நிர்வாகம் பெடரல் கவுன்ஸிலின் கையிலுண்டு. இக் கவுன்ஸில் மேலே குறிப்பிட்ட சபைகளால் ஏற்படுத்தப்படும். பெடரல் கவுன்ஸில் அங்கத்தவர்களில் ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவர். ஜனாதிபதி நாட்டின் தலைவர்.

நீதி நிர்வாகம்

நீதி நிர்வாகம் பெடரல் டிரிபூனலின் கையில் உண்டு. இது முப்பது பிரதிநிதிகளைக் கொண்டது. அனுபவம் பெற்ற நீதிபதிகள் தான் பெரும்பாலும் அங்கத்துவம் வகிப்பார்கள். ஐக்கிய அமெரிக்காவில் அரசியலமைப்புச் சம்பந்தமான கடைசித் தீர்மானம் உயர் தர நீதிமன்றத்திற்குத்தான் உண்டு. ஆனால் சுவிஸ் தேசத்தில் பெடரல் டிரிபூனலுக்கு அப்படியான அதிகாரமில்லை. இப்படியான விஷயங்கள் பெடரல் அசெம்பிளியின் கையில் விடப்பட்டுள்ளது. இது ஓர் முக்கியமான விஷயமாகும். இலங்கையில் சமஷ்டி முறை அமையுமானால், உயர் நீதிமன்றமே அரசியல் திட்டத்தின் பாதுகாவலனாக அமைய வேண்டும். அல்லாவிடில் சிறுபான்மையினர் தொடர்ந்து, ஒடுக்கப்படலாம்.

இன ஒதுக்கல் இல்லை

இப்படியான அரசியலமைப்பின் கீழ் சுவிஸ் மக்கள் வேற்றுமையின்றி வாழ்கின்றனர். அங்கு இன ஒதுக்கல் இல்லை. ஐம்பது லட்சம் மக்களுக்கு ஓர் பொதுப் பாஷை இல்லை. ஜெர்மனியர்கள் பெரும்பான்மையினர். ஆனால் அது ஜெர்மன் தேசம் என்று அழைக்கப்படுவதில்லை. அவர்களுக்கு ஓர் பொது மதம் இல்லை. ஏனெனில் அங்கு மூன்றில் இரு பங்கினர் கத்தோலிக்கமதத்தினர். ஏனையோர் புரட்டஸ்தாந்துக்கள்.

சுவிஸ் தேசத்தின் நிலப்பரப்பு மிகவும் குறைவு. இலங்கையிலும் பார்க்கச் சிறிய நாடு. பெரும் பகுதி மக்கள் வாழ முடியாத இடங்கள். சன நெருக்கம் அதிகம். அப்படி இருந்தும் அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் உயர்ந்தது.

பொருளாதாரம்

பொருளாதாரத்தைப் பற்றிச் சிறிது குறிப்பிட வேண்டும். இந்நாட்டில் விவசாயம் மிகவும் உயர் நிலையில் உள்ளது. நவீன சாதனங்களின் உதவியால் உற்பத்தி பெருக்கப்பட்டுள்ளது. இளம் விவசாயிகள் விஞ்ஞான முறையில் பயிற்றப்படுகின்றனர். இதனால் இந்நாட்டில் வேலையில்லாமை மிகவும் குறைவு.

இங்கு எண்ணெய், கரிச்சுரங்கங்கள், உலோகச் சுரங்கங்கள் இல்லை. அப்படி இருந்தும் கைத்தொழிலில் வளர்ச்சி குறிப்பிடக் கூடிய நிலையில் இருக்கிறது. இந்நாட்டின் ஏற்றுமதிகளில் 90 வீதம் கைத்தொழில் பொருட்கள். பருத்திப் புடவைகள், பட்டுத் துணிகள், கடிகாரங்கள் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கவை.

பெருமைக்கு காரணம்

சுவிஸ் தேசத்தைப் போல் ஓர் சிறிய நாடு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பெற்று, உலகிலேயே சிறந்த ஜனநாயகம் நிலவும் நாடு என்னும் பாராட்டுதலைப் பெற்றதன் காரணம் என்ன? அதன் அரசியலமைப்புத் தான். அல்லாவிடில் அங்கு இன வேற்றுமையும் மொழி வித்தியாசமும், மதப் பூசல்களும் ஏற்பட்டு நாடு சிதைந்திருக்கும்.

சமஷ்டியும் ஒற்றையாட்சியும்

சமஷ்டி அரசியலமைப்பு கஷ்டமானது சிக்கலானது என சில அறிஞர்கள் கூறுகிறார்கள். இவர்களுக்கு ஓர் அரசியல் ஞானி கூறிய பதிலைக் கீழே தருகிறேன்: (In General Federal Government is more Complex, more productive of difficulty and more inconvenient and less capable of swift action than unitary government. Yet it would be absurd to say that unitary government is preferable when the U. S. A. Australia, Switzerland and the rest were created, the facts and the feelings of the people concerned, were such that they could come together either as federations or not at all. The alternative to a federal U. S. was not a unity U. S. but no U. S.)

இதன் சாரம்: பொதுவாக ஒற்றையாட்சியிலும்பார்க்க சமஷ்டி முறை சிக்கலானதும், கஷ்டமானதுமாகும். ஆனால் ஒற்றையாட்சி சமஷ்டியிலும் சிறந்தது என்று கூறுவது மடத்தனம். ஐக்கிய அமெரிக்கா, சுவிற்ஸர்லாந்து, அவுஸ்திரேலியா போன்ற ஏனைய நாடுகளும் தோன்றிய போது, சம்பந்தப்பட்ட மக்கள், தாம் சமஷ்டி முறையில் ஒன்று சேர முடியும் அல்லது ஒன்று சேரவே முடியாது என்பதை உணர்ந்திருந்தார்கள். சமஷ்டி ஐக்கிய அமெரிக்காவுக்குப் பதில் ஒற்றையாட்சி அமெரிக்கா அல்ல அமெரிக்காவே இல்லை என்பதுதான்.

அறிவியல்:

தீப்பிடித்து எரியாத பருத்தி துணி

பம்பாய் ஆலையில் தயாரிக்கப்படும்

நூற்றுக்கு நூறு அசல் பருத்தித்துணி தான். ஆனால் தீப் பிடித்து எரியாது; மங்கிப் போகாது; அழுக்கேறாது; சுருக்கு விழாது; நனையாது இத்தகைய துணிகள் இந்தியாவில் விரைவில் விலைக்கு வரலாம்.

வருங்கால உடை

"வருங்கால உடைகள்" என வருணிக்கப்படும் இத்தகைய உடைகளை அமெரிக்கப் பருத்தித் தொழில் நுட்பசாலி டி. எல். எம். பெய்லி என்பவர் சென்ற மாதம் பம்பாயில் இந்திய நெசவாலைத் தொழில் நுட்பசாலிகளுக்கும் முதலாளிகளுக்கும் காட்டினார். இதைப் பார்த்த பம்பாய் ஆலை முதலாளி ஒருவர் தீப்பற்றி எரியாத துணியை முதலில் உற்பத்தி செய்யத் திட்டமிட்டுள்ளார்.

இரசாயன முறை

தீப்பிடித்து எரியாத துணியைத் தீயில் வைத்தால் தீப் பற்றும். ஆனால் துணியைத் தீயிலிருந்து எடுத்ததும் பற்றிய தீ தானே அணைந்து விடும் என்று பெய்லி விளக்கினார்.

இதே போல் இன்னும் எத்தனையோ வகையில் அசல் பருத்தித்துணி அமெரிக்காவில் இரசாயன முறையில் சீர் செய்யப்பட்டுப் புதுப் புதுக் குணங்கள் பெற்றுள்ளன என்று அவர் தெரிவித்தார்.

மடிப்பு மறையும்

புதுக் குணங்கள் பெற்ற பருத்தித் துணிகள் பற்றி பெய்லி எடுத்துரைக்கையில் சுருக்கு விழாத துணிக்கும் மடிப்பு மீளும் துணிக்கும் உள்ள வேறுபாட்டைக் குறிப்பிட்டார். சுருக்கு விழாத துணியில் ஒருக்காலும் சுருக்கு விழாது ஆனால் மடிப்பு மீளும் துணியில் சுருக்கு விழும்; ஆனால் இந்தத் துணியைத் துவைத்தால், சுருக்குகளெல்லாம் மறைந்துவிடும்; உற்பத்தியாளர்களால் உருவாக்கப்பட்ட இயல்பான மடிப்பும் மறைந்துவிடும் ஆனால், துணி காய்ந்ததும், இயல்பான மடிப்பும் மீண்டும் தோன்றும்; பெட்டி போடவேண்டியதில்லை.

சிறப்பானது

புதுத் துணிகளெல்லாம் தொழிலிலும் வீட்டிலும் பல வகையிலும் பயனுள்ளவையாகும் என்றார் பெய்லி. நீண்டு சுருங்கும் தன்மையுடைய துணி மேஜோடு முதலியன தயாரிக்க உதவும். செயற்கை இழைத் துணிகளை விட இது சிறப்பானது; ஏனெனில் இதில் சின்னச் சின்னத் துவாரங்கள் இருந்து, வியர்வையை உறிஞ்சும்.

பம்பாயில்

"உலகம் சுற்றும் அமெரிக்கப் பருத்தித் தூதர்" பெய்லி ஆசியாவில் பல நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்து பம்பாய்க்கு வந்தார். இவருக்கும் அமெரிக்க விவசாய இலாகாவுக்கும் தொடர்பு உண்டு. பம்பாயில் நெசவாலைத் தொழிலில் சம்பந்தப்பட்டுள்ளவர்களை அவர் கண்டு பேசினார். பம்பாய் நெசவு ஆராய்ச்சிச் சங்கத்தையும் போய்ப் பார்த்தார்.

புதிய முறையில் 'எவர் சில்வர்'

அமெரிக்காவில் கண்டு பிடிப்பு

கரிக்கலவை அதிகமுள்ள எஃகின் மீது இலேசாக அலுமினியம் பூசினால் அது 'ஸ்டெயின் லஸ் ஸ்டீலைப்' போல் பயன்படும். ஆனால் செலவு குறைவு என்று அமெரிக்க நிபுணர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

இரும்பு இற்றுப்போகாமலிருக்க இவ்வகை அலுமினியப் பூச்சு மிகவும் உதவும் என்று ஸ்டாண்டர்டு ஆயில் கம்பெனி விஞ்ஞானி ஒருவர் அமெரிக்க பெட்ரோல் நிலையக் கூடமொன்றில் தெரிவித்தார்.

குண்டூசித் தலையளவு மின்சார 'பல்பு'

குண்டூசி தலையளவே உள்ள மின்சார 'பல்புகளும்' பென்சிலின் பின்புறமுள்ள ரப்பர் துண்டை விட சற்றுப் பெரிதான ரேடியோ ஒலி பரப்பியும் அமெரிக்காவில் தயாரிக்கப்படுகின்றனவாம்.

கணக்குக் கருவி

வீரைந்து கணக்குப் போடும் கணக்குக் கருவிகளும், விண் வெளி வாகனங்களில் பயன்படுத்துவதற்கான இத்தகைய நுண்ணியக் கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சிவப்பின் சிறப்பு

சில நிறங்கள் சில இயல்புகள் உடையன; கண்ணுக்குக் குளுமை தரும் நிறம் எண்ணத்தில் வெறியூட்டும் நிறம் என்பன போன்ற பல நிறங்கள் உள்ளன. விஞ்ஞானிகள் இதைக் கண்டு பிடித்து உணர்த்துகின்றனர்.

சமீபத்தில் சிவப்பு நிறத்தின் சிறப்பியல்பு பற்றிய ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது. ருஷ்யாவில் புத்தகத்தின் மேல் சிவப்பு நிற வெளிச்சத்தை விழ வைப்பதன் மூலம் குருடர்களைப் படிக்கவைக்கலாம் என்றும், இந்த வெளிச்சம் ஒலிபரப்பி மூலம் ஒரு தனி ரத்தத்தை உண்டாக்குகிறது என்றும் இந்த ஒளிகளின் பொருளை அவர்கள் எளிதில் புரிந்து கொள்ளலாம் என்றும் கூறப்படுகிறது.

(15-ம் பக்கம் பார்க்க)

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL TRADE MARK ஆனந்தா SEA STREET, COLOMBO

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை கணுக்களில வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரிது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. பூரணலிங்கம்,
யாழ்ப்பாணம்

கே: 'சமஷ்டி இயக்கம் தமிழ் மக்களுக்குப் பெரும் அநீதி செய்துள்ளது' என்று சமஷ்டித் தூண்களில் ஒருவராய் நின்று உழைத்தவர் கூட இப்போது சொல்லத் தலைப்பட்டுள்ளாராமே, அந்த அநாமதேயம் யார் குயுக்தியாரே?

ப: சமஷ்டித் தூணாய் நின்று உழைத்தவர்களில் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலமும் ஒருவர். 1947ல் இலங்கைக்கு ஏற்றது சமஷ்டி ஆட்சிதான் என்று அவர் பல பொதுக்கூட்டங்களில் கூறியிருக்கிறார். மறுக்க முடியுமா? எந்த ஒரு கருத்திலிருந்தும், கொள்கையிலிருந்தும் அடிக்கடி குப்புறக் கவிழும் குத்துக்கரண வீரரான திரு பொன்னம்பலம் இப்போது சமஷ்டிக் கோரிக்கை தமிழ் மக்களுக்குப் பெரும் அநீதி செய்துள்ளது என்று ஒரு கரணம் அடித்தால் அதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது!

ஃ

கே. ஆர். ஞானசெல்வம்,
பருத்தித்துறை

கே: குயுக்தியாரே, சுதந்திரன் பத்திரிகையில் வேலை பார்க்கும் திருபர்களுக்குச் சுத்தமான தமிழ் எழுதத் தெரியாது என்றும் 'காபந்து பிரதமர்' என்று கூறும் போது 'காபந்து' என்பதன் பொருள் என்ன என்றும் என்னுடைய பண்டித நண்பர் ஒருவர், ஜம்பநாதன் என்பவர், பிழை கண்டு பிடித்து எனக்கு கடிதம் எழுதியிருக்கிறார். கடிதத்தையே இதோ உங்களுக்கு அனுப்புகிறேன். பதில் கொடுப்பீர்களா?

ப: பிராக்கட் பண்டிதரான உங்கள் நண்பர் ஒரு 'மண்டி'தர் என்று தோன்றுகிறது. சுதந்திரன் அரசியல்-செய்திப் பத்திரிகையே அன்றிச் சுத்தத் தமிழ் வளர்க்கும் இலக்கிய ஏடு அன்று. 'காபந்து' என்பது பத்திரிகை உலகில் வழக்கில் உள்ள பதமேயாகும். உளுத்த ஏடு துழைக்கும் வெளுத்த கறையானுக்கு நவீன பத்திரிகைத் தமிழ்ப் பிரயோகம் எங்கே தெரியப் போகிறது, பாவம்! 'காபந்து' என்ற சொல் அப்படி ஒன்றும் தமிழ் வழக்கற்ற சொல் அல்ல. தமிழ் அகராதியில் பிரபல்யமானது சென்னைப் பல்கலைக் கழகத்தால் ஏழு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ள 'தமிழ் லெக்ஸிகன்' அகராதியாகும். இதன் இரண்டாவது வால்யூம், முதலாவது பாகம் 869ம் பக்கத்தில் 'காபந்து' என்ற சொல் காணப்படுகிறது. அதற்கு careful protection; பாதுகாவல் என்று பொருள் தரப்பட்டிருக்கிறது. தாவாரத் தெருவமுதத்தை நாவாரச் சுவைத்துக்கொண்டிருக்கும் பத்தாம்பசலி 'மண்டி'தர்சுளுக்கு லெக்ஸிகன் என்று ஒரு அகராதி இருப்பது கூடத் தெரியாதே! அவர்கள் அறிந்ததெல்லாம் காப்பரிசியும் வாய்க்கரிசியும் தான்!

அதுதான் போகட்டும், உங்கள் 'மண்டி'தர் எழுதியுள்ள கடிதத்தில் தானும் அவர் சுத்தத் தமிழ் எழுதியிருக்கிறாரா? இதோ திருப்பி அனுப்புகிறேன் மீண்டும் புரட்டிப் பாருங்கள். 1. பேஷாக, 2. ஆஸ்திரம், 3. சமஷ்டி, 4. சிருஷ்டி, 5. லட்சம், 6. ரூபா, 7. அக்கினி, 8. மாயா, 9. பாசுபதம், 10. வாரிசு, 11. நவீன, 12. அநாமதேய, 13 அந்தரங்க, 14 ஸ்தானம், 15. ஏஜண்டு, 16 அபேட்சகர், 17. காங்கிரஸ், 18. நியமனம், 19 நிருபர், 20. அந்தஸ்து, 21 விமரிசகர், 22. பிரபல, 23. யோக்கியம், 24. விஷயம், 25. கமிஷனர், 26. அந்தரடித்தல், 27. பாச்சா, 28. கம்பெனி இத்தியாதி இத்தியாதி வேற்று மொழிச் சொற்களையெல்லாம் உங்கள் 'மண்டி'தர் தமது எழுத்திலேயே தாராளமாகப் பெய்து தமிழைக் கெடுத்தால் தமிழ் மொழி அழிந்தொழிந்து விடாதா? 'நல்ல தமிழ் எழுதக் கற்றுக்கொள்வீராக' என்று உலகுக்குப் புத்தி சொல்லும் உங்கள் 'மண்டி'தர் ஜம்பநாதரிடம், "பிறர் கண்ணை மறைக்கும் துரும்பை விலக்குமுன் தன் கண்ணை மறைக்கும் தூணை விலக்குவீராக" என்று ஒரு வார்த்தை சொல்லி வையுங்கள்.

ஃ

பி. இராசாக்கண்ணு, பதுளை

கே: வேர்க் குரு என்பது சரியா? வியர்க் குரு என்பது சரியா? வேர்க் குருதான் சரி என்கிறார் மற்றொரு கேள்வி பதில் ஆசிரியர்.

ப: இரண்டும் பிழை. வியர்வைக் குரு என்பதுதான் சரி. வெயில் காலத்தில் அதிக வியர்வையினால் தோல் பாதிக்கப்பட்டு சிறு சிறு குருக்கள் தோன்றுகின்றன. காரணப் பெயராக வந்த சொல் வியர்வைக் குரு.

ஃ

பி. எஸ். பீட்டர், யாழ்ப்பாணம்

கே: "யு. என். பி. கட்சிக்கு வர்த்தக ஸ்தாபனங்கள் பணம் கொடுத்தால், யு. என். பி. அதை வாங்கி மற்றவர்களுக்குக் கொடுத்தால் உடனே இவ் விசயத்தை இலஞ்ச விசாரணைக் கமிஷனருக்கு அறிவித்து உரிய நடவடிக்கை எடுத்து உலகறியச் செய்வது அன்றோ அரசியல் நெறி?" என்று சிலர் கூறுகிறார்களே, உங்கள் அபிப்பிராயம் என்ன குயுக்தியாரே?

ப: சிலர் கூறுவது மட்டுமா? ஒரு சில பத்திரிகை ஆசிரியர்கள் இப்படி எழுதவும் செய்கிறார்களே! என்னே அவர்களின் அறியாமை! ஒரு வர்த்தக ஸ்தாபனம் ஒரு அரசியல் கட்சிக்கு நிதியுதவி அளிப்பதும், அரசியல் ஸ்தாபனம் தனது அபேட்சகர்களுக்கு அதைப் பகிர்ந்தளிப்பதும் இலஞ்சக் குற்றத்தின் கீழ் வருவன அல்ல! இலஞ்ச விசாரணை இது விஷயத்தில் சட்டப்படி எது வித நடவடிக்கையும் எடுக்க முடியாது. இந்த ஆரம்ப உண்மைகளைக் கூட அறியாத பத்திரிகாசிரியர்கள் பாலர்களுக்கு 'மூடக்குப்பன் கதை' எழுதத்தான் லாயக்கானவர்கள் என்பது என் தாழ்மையான அபிப்பிராயமாகும். இந்த இலட்சணத்தில் தமக்கு 'அரசியல் விமரிசகர்' என்று வேறு பெயர் சூட்டிக் கொள்கிறார்களே, ஆண்டவனே!

ஃ

ராஜா ஆனந்தம், மண்டூர்

கே: மீண்டும் தஹநாயகா பிரதம மந்திரியானால் என்ன நடக்கும்?

ப: இன்னொரு தடவை தஹநாயகா பிரதம மந்திரியாவது நடக்காத காரியம். அப்படி நடந்தால் நிச்சயம் இரண்டு காரியங்கள் நடவா. பத்திரிகை வாய்ப்பூட்டு வராது. வானொலியில் அரசியல் குறிப்புகள் வரா. இவ்விரண்டுமே தமக்கு அழிவைத் தந்தன என்பதை தஹநாயகா இப்போதுதான் உணர்கிறார்.

கே: மாஜி வானொலி மந்திரி மரிக்கார் என்ன செய்கிறார்?

ப: ஜப்பானிய அழகிகளைச் சொப்பனத்தில் கண்டு அலறுகிறார் என்று கேள்வி!

கே: சிலாபத்தில் போட்டியிடும் திரு டபிள்யு. எம். பிரான்ஸிஸ் பெரேராவைப் பற்றிச் சில வார்த்தைகள் கூற முடியுமா?

ப: ஓ கோட்! சில வார்த்தைகள் என்ன? பல வார்த்தைகள் கூறுகிறேன். அவர் நல்ல உழைப்பாளி. வாய் சாலகமான பெயர் வழி. தமிழரசின் சுவிசேஷத்தை மேல்பகுதி இலங்கையிலும் புகுத்திவிட வேண்டும் என்று துடியாய்த் துடிக்கும் வாலிப உள்ளத்தினர் அவர்.

ஃ

கே. ஜெகன், கொள்ளுப்பிட்டி

கே: டி. ஆர். ராஜகுமாரியும், டி. ஆர். ராமச்சந்திரனும் உடன் பிறந்தவர்கள் என்று என் நண்பர் வாதிக்கிறார். இது சரியா?

ப: சி. பி.யைச் சேர்ந்த பீட்டர் கெனமனும், சி. பி. டி. சில்வாவும் உடன் பிறந்தவர்கள் என்று சி. பி.யைக் கொண்டு தீர்மானிப்பது சரியானால் உமது நண்பருடைய வாதமும் சரியாயிருக்கலாம்.

ஃ

அ. வில்வநாதன், மருதங்குளம்

கே: குயுக்தியாரே, சுதந்திரனில் கடவுளுக்குக் கடிதம் எழுதிய நாரதர் எங்கே?

ப: ஐயோ பாவம்! கலகப் பிரியரான நாரதரைக் கலகம் பீடித்துக்கொண்டது. குடும்பத் தொல்லைகள் அவர் தும்புருவாகிய பேனுவை விழுங்கிவிட்டன!

ஃ

என். சரோஜினிதேவி,
யாழ்ப்பாணம்

கே: யாழ்ப்பாணப் பகுதியில் இம்முறை ஏன் அதிகமாகத் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெறவில்லை?

ப: தேர்தல் இன்னும் கூடேறவில்லை. அதனால் நடைபெறவில்லை. 'அதிகம் கூட்டங்கள் அவசியமில்லை' யென்று தமிழரசார் எண்ணியிருப்பார்கள். 'என்ன கூட்டத்தைப் போட்டும் என்ன பயன்? நாங்கள் தோற்பது தோற்பதுதானே' என்று தமிழ் காங்கிரஸார் எண்ணியிருப்பார்கள். எனவே மந்தகதி நிலவுகிறது;

ஃ

தம்பலவத்தை ரங்கன், மண்டூர்

கே: எட்டப்பரின் மேடையேறி யாழ்ப்பாணத்தாரைத் திட்டிய புலம்பல்மணி பெரியதும்பிப்பிள்ளை, எட்டப்பர் யாழ்ப்பாணத்து கரணப்பர் காங்கிரஸைக் கட்டிக்கொண்டு புரள்வதைக் கண்டு இப்போது என்ன சொல்லுவார்?

ப: எட்டப்பரைப் போலவே புலவர்மணிக்கும் கொள்கை என்பது கிடையாது. 'போற்றினும் போற்றுவர். பொருள் கொடாவிடில் தூற்றினும் தூற்றுவர். சொன்ன சொற்களை மாற்றினும் மாற்றுவர்' என்ற கரணக் கோஷ்டியில் சேர்ந்தவர்தானே புலவர் மணியும்!

ஃ

எஸ். எம். வேலுப்பிள்ளை,
கல்வயல்

கே: தமிழ்ப் பகுதிகளைப் பொறுத்தவரையில் கடந்த பொதுத் தேர்தலுக்கும் எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கும் என்ன வித்தியாசம்?

ப: எட்டப்பரின் மட்டக்களப்பு முன்னணி, குமாரசாமியின் அடுப்படி முன்னணி, சுந்தரரின் அடங்காப்பிடாரி முன்னணி ஆகிய மூன்று முன்னணிகளையும் கடந்த பொதுத் தேர்தல் கலக்கியடித்துக் கவிழ்த்து விட்டது. இந்தப் பொதுத் தேர்தல் யு. என். பி.யின் பின்னணியான அகில இலங்கை ஆனைப்பந்திக்காங்கிரஸை முற்றாக ஒழித்துக் கட்டப்போகிறது. இதுதான் வித்தியாசம்.

இதுவோ நம் காதல்?

(சோமலிங்கம்)

வாடாத பூவும் மறையாத வெண்ணிலவும்
ஓடாத வண்டும் உயிர்போக்கும் கூர்வேலும்
தேடாத திரளியமே! தேடிவந்து உன்வடிவில்
கூடி எந்தன் உளம் மயக்கும் கொடுமையதோ நம்காதல்?

மலராத மொட்டும் வண்டுதொடா எப்பூவும்
உலராத தேங்காயும் ஒடிந்துவிடாச் சிறுகொடியும்
புலராத கூர்இருளும் பெண்வடிவில் வந்து என்னை
அறல வைப்பதென்றால் அதுதானோ நம்காதல்?

கொய்யாவின் பூவும் குருந்தை தருவெண்மலரும்
மெய்யாக உன்வடிவில் விளங்குகையில் எந்தனுளம்
ஒய்யாரம் கண்டு உவகைகொள்ள முடியாமல்
செய்யாத நிலமென்னத் திகழுவதோ நம்காதல்?

முருக்கை மலரும் முறுவலிக்கும் மல்லிகையும்
வருக்கைச் சுளையும் வந்து உந்தன் வண்ணமென
இருக்கையிலே அதைக்கண்டு என்நிலையை நான்மறந்து
தெருச்சுற்றி வீணாய்த் திரிவதுவோ நம்காதல்?

வாழைக்குருத்தும் வண்ணப் புறுநடையும்
பாளைவெடிப்பும் பால்தந்த வெண்நுரையும்
வேளைக்குவேளை வேதனைகள் தான்கூட்டி
ஆளை மெலியவைத்து ஆட்டுவதோ நம்காதல்?

வில்வக் கனியும் விளாங்கனியும் இளநீரும்
பொல்லாத பசிப்பிணியைப் போக்காமல் உனைக்காட்டி
கொல்லாமல் எனைவாட்டிக் கோலம் குறையவைக்கும்
பொல்லாத துன்பம் பெட்டகமோ நம்காதல்?

நமக்குத் தொழில் கவிதை

நமக்குத் தொழில் கவிதை என்ற வெண்பாப் போட்டியில் கவிதை எழுத விரும்புவோர் யாவரும் கலந்து கொள்ளலாம். கட்டுப்பாடு கிடையாது. ஒருவர் எத்தனை வெண்பாக்கள் வேண்டுமானாலும் எழுதலாம். கவிதை அஞ்சல் அட்டையில் (Post Card) மட்டுந்தான் எழுதப்படவேண்டும். ஒரு அட்டையில் ஒரு வெண்பாவுக்கு மேல் எழுதக் கூடாது. கீழே தரப்பட்டிருக்கும் அச்சிட்ட முகவரியை வெட்டி அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்ப வேண்டும். அச்சிட்ட முகவரி ஒட்டப்பெறாத அட்டைகள் கவனிக்கப்படமாட்டா.

போட்டி இல: 11

இந்த பதினோராவது வெண்பாப் போட்டிக்கு "ஆடி இருபதிலே சாடு" என்ற ஈற்றடி தரப்பட்டிருக்கிறது. இதை வைத்தே வெண்பா எழுதப்பட வேண்டும். இலக்கியச் சுவைக்கும், நகைச் சுவைக்கும், அங்கதச் சுவைக்கும் (Satire) முக்கிய கவனிப்பு அளிக்கப்படும். மத்தியஸ்தர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற வெண்பாக்கள் சுதந்திரனில் வெளியாகும்.

—ஆசிரியர் : சுதந்திரன்.

'நமக்குத் தொழில் கவிதை'
மே/பா ஆசிரியர்,
சுதந்திரன்,
த. பெ. 1183,
கொழும்பு—12.

வெண்பாக்கள் கிடைக்க வேண்டிய முடிவு தேதி 15—6—1960

"ஆடி இருபதிலே சாடு"

திருவாளர் குயுக்தியார்
மே/பா சுதந்திரன்.
த. பெ. இல. 1183.
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியாவின் முதலாவது மௌன ஆசிரமம்

ஈழத்தில் உண்டாக்கிய

அருந்தவ ரிஷி தோமாஸ் சுவாமியார்

தமிழர்—'இருபதாம் நூற்றாண்டின் புனிதர்' என்று போற்றப்படுகிறார்

இந்த இருபதாம் நூற்றாண்டில் 'உயிருடன் இருக்கும் புனிதர்' என்று பலராலும் போற்றிப் புகழப்படுபவர் தோமாஸ் சுவாமியார். முதன் முதலாக மௌன ஆசிரமம் ஒன்றை ஈழத்தில் (தோலகட்டியில்) அமைத்து, கல்விப்பணி, மதப்பணி, சமூகப்பணி, ஆற்றி வருகிறார்.

ஆழ்ந்த அறிவும், அன்பு உள்ளமும், அசையாத இறை நம்பிக்கையும், உழைப்பில் ஊக்கமும் கொண்டவர். எல்லாவற்றிற்கும் மேலாக பல்லாயிரக்கணக்கான மக்களின் அன்புக்குப் பாத்திரமான தமிழ்ச் சுவாமியார் இவர்.

இவரது 75-வது பிறந்த தின வைபவம் 13—6—60-ல் நடக்க விருக்கிறது. அதை யொட்டி சுவாமிகளைப் பற்றிய கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

எலும்புக்கூடான மேனி, பழைய அங்கி, வெண் நிறத் தாடி, அருள் தவழும் முகம், அன்பைச் சொரியும் கண்கள், கருணை நிறைந்த உள்ளம், மௌனம் தவழும் வாழ்க்கை—இதுவே தோமாஸ் சுவாமியாரைப் பற்றி எண்ணும் யாவரது உள்ளத்திலும் எழும் வடிவமாகும். பண்டிதரும் பாமரரும், அறிஞரும் அறிவிலிகளும், உயர்ந்தோரும் தாழ்ந்தோரும் யாபேரும் சேர்ந்து செபதவம் புரிந்து மௌனம் காத்து கடின உழைப்பு உழைத்துச் சீவிக்கும் மௌன ஆச்சிரமம். ஆசியாவிலேயே முதன்முதலாக ஈழத்தில் உண்டாக்கிய பெருமை அருந்தவ ரிஷி தோமாஸ் சுவாமியாரையே சாரும். எனினும் தோமாஸ் சுவாமியார் ஒரு தமிழர். ஈழம் ஈந்த தவப்பெருந் தவ ரிஷி. அநேகர் அறியாது மறைந்து கிடக்கும் மாணிக்கம்.

பிறப்பு

அந்தோனியார் என்ற குழந்தைப் பெயர்பெற்ற சுவாமி அவர்கள் யாழ்நகரிலே, பண்டியந்தாள்விலே, மத்திய குடும்பத்திலே, பஸ்தியாம்பிள்ளையார்க்கும் அவரது பாரியார்க்கும் மகனாக 1885வது ஆண்டிலே ஆனி மாதத்திலே 3ம் தினத்திலே பிறந்தார். நோயுற்ற குழந்தையாகவே வளர்ந்தார். பள்ளிக்குச் சென்றார்; கல்வி கற்று முடித்தார்; குருமடத்திற்கு அனுப்பப்பட்டார்; குருவாவதற்குரிய கல்வியையும் கற்றுத் தேர்ந்தார்; அமலோற்பவநாயகியின் கூட்டத்தில் சேர்க்கப்பட்டார்; தோமாஸ் என்னும் இடப் பெயரிடப்பட்டார்; குருவானார்; குருவான பின் நோயாளி என்றும் கட்டளைக் குருவுக்குத் தகுதியற்றவரென்றும் ஒதுக்கி வைக்கப்பட்டார்; சென் பற்றிக் கலாசாலையிலுள்ள மாணவர்களைத் தாபரிக்க அனுப்பப்பட்டார்.

மௌன ஆசிரமம் உதயம்

சுவாமிகள் அங்கே தவம் புரியத் தாகம் கொண்டார். சாதிச் செருக்குக்கும் செல்வச் செருக்குக்கும் கல்விச் செருக்குக்கும் மக்கள் அடிமைப்பட்டு வாழ்வதைக் கண்டு பதைபதைத்துத் துடித்தார். இலங்கை இந்தியாவிலுள்ள தாழ்த்தப்பட்டோரென்று சொல்லப்படும் கத்தோலிக்க மக்கள் குருமடத்திலோ, சன்னியாசமடத்திலோ, கன்னியர் மடத்திலோ, பிரவேசிப்பதற்குரிமை இல்லாமல் புறக்கணிக்கப்பட்டு அவர்கள் தவிப்பதைக் கண்டு கலங்கினார்; தம் சிந்தனையால் ஆராய்ந்தார்; ஆராய்ச்சியில் மலர்ந்த மலர்தான் மௌன ஆச்சிரமம்.

தாழ்த்தப்பட்டோரென்று சொல்லும் மக்களில் சிலவாலிபர்கள் மட்டுந்தான் மௌன சன்னியாசிகளாக விரும்பினார்கள். அவர்களைக் கூட்டிக்கொண்டு போய் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தோலகட்டி என்னும் சின்னக் கிராமத்தில் ஒரு பழைய வீட்டில் 1928ம் ஆண்டு மாசி மாதம் 2ம் தேதி மௌன ஆச்சிரமத்தை உண்டாக்கினார்.

மண் சுமந்தார்

சன்னியாசிகளுக்கு முன் மாதிரிகையாக கல்லும் முள்ளும் நிறைந்த பாலைவனமான வறண்ட அந்த இடத்தில் மண்வெட்டித் தலையில் சுமந்து, கல் உடைத்துத் தோளில் சுமந்து, தாழக் கிடங்குகள் வெட்டிக் குப்பை அள்ளிக் கொட்டி, முந்திரிகை, வாழை, தோடை, எலுமிச்சை, மாதாளை, மா, பலா, தென்னை முதலிய மரங்களை நட்டு, நந்தாவனமாகவும், சிங்காரத்தோப்பாகவும் ஆக்கி வைத்தார். மேலும், சமையல் வேலை செய்வார். விறகு வெட்டுவார். தண்ணீர் சுமந்து வருவார். கக்கூஸ் வேலை செய்வார். அவ்வழியாகப் போகும் சிலர் எலும்புக்கூடாகக் காட்சி அளிக்கும் அவரைக் கண்டவுடன் "அடே மொட்டையா உனக்கு ஏன் இந்தப் பைத்திய வேலை? நீ நடக்க இயக்கமில்லாமல் தள்ளாடி விழுகிறாயே, நீ உண்டாக்கின மடம் எத்தனை நாளைக்கு இருக்கப்போகிறது? உனக்குப் பிழைக்க வேறு வழியில்லையா?" என்று ஏசிப்பேசி ஏளனம் செய்வார்கள். பொறுமையின் களஞ்சியமாகிய தோமாஸ் முனிவர் புன்முறுவலோடு அதைக் கேட்டு அவர்களுக்காகப் பரம கடவுளை இரந்து மன்றாடுவார்.

இரவு பகல் அறுபது நாழிகையிலும் ஒரு நிமிஷமாவது அவர் மனம் தேவமாதாவை நினையாமல் இருப்பதில்லை. அவர் உண்டாக்கின மௌன ஆச்சிரமத்திற்கு பரிசுத்த செபமாலை மாதாவின் தாசர்கள் என்று மாதாவின் நாமத்தைச் சூட்டினார்.

நோயாளிகளுக்கு இரக்கம்

மண் சுமந்து கொட்டி தாழக்கிடங்குகள் வெட்டிக் குப்பை அள்ளிக் கொட்டித் தோளில் மண்வெட்டியோடும், கையில் கூடகத்தோடும் இளைத்துக் களைத்துத் தள்ளாடி வரும்போது வறிய மக்களும் நோயாளிகளும் காத்து நிற்பதைக் காண்பார். கண்டவுடன் இளைப்பையும் களைப்பையும் பாராது அவர்களை அன்போடு உபசரித்து வறிய மக்களுக்குத் தேவையானதைக் கொடுத்து நோயாளிகளை ஆசீர்வதித்து அவர்களுக்கு யேசுநாதரின் நேசத்தைத் தொட்டுக் காட்டி தேவமாதாவின் இரக்கத்தைப் புகட்டி, ஒவ்வொருவரின் உள்ளத்திலும் தேவமாதாவின் பத்தியை மலரச் செய்து அன்போடு அனுப்பி வைப்பார்.

ஆசீர்வாதத்துக்கு மக்கள் கூட்டம்

இந்த இருபதாம் நூற்றாண்டில் உயிருடன் சீவிக்கும் சுத்தவாளர் தோமாஸ் முனிவர் தானென்றும் அவரின் ஆசீரைப் பெற வேணுமென்றும் அவருடைய மன்றாட்டால் நற்பயன் கிடைக்குமென்றும் அநேக மக்கள் பற்பல இடங்களிலிருந்து வந்தவண்ணமாகவே இருப்பார்கள். இவ்வாறாக வந்து அநேகர் தோமாஸ் முனிவரை எதிர்பார்த்துக் காத்து நிற்பார்கள். அம்மக்களை அன்போடும் ஆதரவோடும் உபசரித்து அவர்களுக்காக தேவமாதாவை இரந்து மன்றாடி அவர்களை ஆசீர்வதித்து தேவமாதாவின் பத்தியை இனிமையோடு அவர்களுக்கு ஊட்டி ஆறுதல் கூறி அனுப்புவார்.

தோமாஸ் சுவாமியார்

அக்கம் பக்கத்திலுள்ள கிராமத்தின் வறிய மக்கள் ஒவ்வொரு நாளும் தோமாஸ் முனிவரிடம் வந்து ஆச்சிரமத்திலுள்ள ஆகாரப் பொருள்களை வாங்கிக்கொண்டுபோய் சாப்பிட்டுப் பிழைப்பார்கள்.

தாயின் இன்பத்தைத் தேடுவதுபோல 2 வயது முதல் 5 வயதுக்குள்ளான வறிய குழந்தைகள் தோமாஸ் முனிவரைத்தேடி ஓடிவந்து அவரின் ஆசீரைப் பெறுவார்கள்.

அடக்கம்

தோமாஸ் முனிவர் தன்னை எல்லாரிலும் கடைகெட்டவனென்றும் ஒன்றுக்கும் உதவாதவனென்றும் ஒன்றுமில்லாத பாவி என்றும் நிந்தையும் அவமானமும் பாவமும் மரணமும்தான் தனக்குரியதென்றும் எந்த நேரமும் தன்னைத் தாழ்த்தி சன்னியாசிகளின் பாதங்களை முத்தம் செய்து தாழ்ச்சியின் அடித்தளத்தில் கிடப்பார்.

கல்வி போதனை

ஆணால் தஞ்சம் என்றவர்க்கு அஞ்சேல் என்று அபயம் அளிக்கும் பரம பிதா மௌன ஆச்சிரமத்தை வளர்பிறைபோல் வளரச் செய்தார். பல இடங்களிலும் இந்த ஆச்சிரமத்தைப் பற்றி பலர் அறிந்து தென்னிந்தியா, வடஇந்தியா, பர்மா, சிங்கப்பூர் முதலிய இடங்களிலிருந்து தாய் தந்தை, காணி பூமி, இனசனம், உத்தியோகம் முதலியவற்றைத் துறந்து சாதிச் செருக்கை ஒழித்து அநேக வாலிபர்கள் மௌன ஆச்சிரமத்தில் வந்து சேர்ந்தார்கள். எல்லோருக்கும் ஞானப்பாலை அன்போடு ஊட்டினார். கல்வி இல்லாதோர்க்கு கல்வி கற்றுவித்து லத்தீன், இங்கிலீஷ், தமிழ் முதலிய பாஷைகளையும் படிப்பித்து சிலரை உத்தம குருக்களாக ஆக்கி வைத்தார்.

பெண்களுக்கும் மௌன ஆசிரமம்

அன்றியும் ஈழத்தில் பெண்களுக்கும் மௌன ஆச்சிரமம் உண்டாக்கினார். அக்கன்னியர் ஆச்சிரமத்திற்கு ஒவ்வொரு நாளும் இருமுறை மழையில் நனைந்து வெய்யிலில் காய்ந்து நடந்து போய் கன்னியர்களுக்குச் செபமும் தவமும் கடின உழைப்பும் செய்யும் முறைகளைப் போதித்து தாழ்ச்சியின் அடித்தளத்தைக் காட்டி வருவார். அன்றியும் அவர் கன்னியர் ஆச்சிரமத்திற்கு நடந்து செல்லும் வழியில் சிலர் கால் வண்டியால் இடித்துத் தள்ளி கீழே வீழ்த்திவிட்டுச் செல்வார்கள். அன்பின் உருவமான அந்தக் கிழவன் பொறுமையோடு தவழ்ந்து தவழ்ந்து எழும்பி மெல்ல மெல்ல நடந்து அகமகிழ்ச்சியோடு கன்னியர் ஆச்சிரமத்திற்கு சென்று கன்னியர்களுக்கு ஞானப்போதகம் போதித்து ஞானப்பாலை ஊட்டி ஞான வழி காட்டிவிட்டுத் திரும்புவார்.

இந்தியாவிலும் தொண்டு

மேலும் தென்னிந்தியாவிலும் வட இந்தியாவிலும் மௌன ஆச்சிரமம் உண்டாக்கினார். ஈழத்திலுள்ள ஆச்சிரமங்களுக்கும் தென் இந்தியா வட இந்தியாவிலுள்ள ஆச்சிரமங்களுக்கும் அல்லும் பகலும் அயராது உழைத்து இரவில் இரண்டு மணி நேரந்தானும் நித்திரைகொள்ளார்.

இமயத்திலே புலிச்சின்னம் பொறித்தான் தமிழ் மன்னன் சேரன் செங்குட்டுவன். கடல் கடந்து சென்று கடாரத்திலே கன்னித் தமிழின் கொடியை நாட்டினான் சோழபெருமன்னன் ராஜேந்திரன். இவ்வீரர்கள் உதித்த ஆசியாவிலே முதன் முதலாக ஈழத்திலே மௌன ஆசிரமம் நாட்டினார் ஈழத் தமிழ் முனிவர் தோமாஸ் சுவாமியார்.

மக்கள் குரல்

புங்குடுதீவு மகாஜன சபை.

அகில இலங்கைப் புங்குடுதீவு மகாஜன சபையின் கூட்டமொன்று சமீபத்தில் நடந்ததாகத் தங்கள் பத்திரிகையில் பிரசுரித்திருந்தீர்கள் அதைக் கண்டு நான் ஆச்சரியமடைகிறேன்.

இதே பெயரோடு 1926ம் ஆண்டு தொடக்கம் ஒரு ஸ்தாபனம் இயங்கி வருகிறது. அதில் 1954ம் ஆண்டு முதல் தலைவராக நான் இருந்து வருகிறேன். இதன் பொதுக்கூட்டமொன்றும் சமீபத்தில் நடைபெற இருக்கிறது. புதிய சங்கத்தை ஸ்தாபித்தவர்களில் சிலர் இதே பெயர் கொண்ட பழைய ஸ்தாபனத்தில் உத்தியோகங்களும் அங்கத்துவமும் வகித்தவராவர்.

புங்குடுதீவு மக்களுக்காக எத்தனை சங்கங்கள் வேண்டுமானாலும் தோன்றி அவ்வூர் மக்களுக்குச் சேவை செய்வதை எவராலும் மறுக்க முடியாது. புதிதாய்ச் சங்கம் அமைத்தவர்கள் பழைய சங்கத்தின் பெயரை அபகரிக்காமல் புதிய பெயர் ஒன்றுடன் சங்கமமைத்து மக்களுக்கு சேவை செய்தால் அது விரும்பத்தக்கதாகும். அதை விடுத்து அவர்கள் பொதுஜன சேவைச் சங்கங்களை அதியல் தோக்கோடு அமைப்பதும் இருந்த சங்கங்களை அபகரித்துத் தங்கோடு பகிஷ்கரித்துத் தனிப்பட்ட குரோதங்களைச் சாதிப்பதும் தங்கள் குடும்பச் சங்கமாக்குவதும் மக்களை ஏமாற்றுவதாகும்.

பழைய சங்கத்தில் பலபெரியார்கள் அங்கத்துவமும் போஷகர் பதவிகளும் வகித்தனர். அவர்களைக்கூட சிறிதும் கலந்து ஆலோசியாமல் தான்தோன்றித்தனமாக அவர்களின் அனுமதியின்றி அவர்களையே போஷகராக்கி சங்கம் அமைத்தால் அச்சங்கம் மக்களுக்காகச் சேவை செய்யும் என மக்கள் எப்படி எதிர்பார்க்க முடியும்?

அகில இலங்கைப் புங்குடுதீவு மகாஜன சபையில் 1926ம் ஆண்டு தொடக்கம் முக்கிய பதவிகளை வகித்து அதன் முன்னேற்றத்திற்குக் காரணமாகவும் புங்குடுதீவுப் பாலம் இன்னும் பல முக்கிய வேலைகளைச் செய்விக்கும் காலங்களில் எனது சேவை பெரிதும் பயன்படக் கூடியதாகவும் நடந்து கொண்டேன். சில பெரும் தலைவர்களின் மறைவுக்குப் பின் எனக்கு இப்பதவியைப் புதிய சங்கம் அமைத்தவர்களே தரக் காரணமாயிருந்தார்கள்.

அதேபோல இப்பதவியை நாட்டின் நற்சேவைக்காக இன்னொருதலைவருக்குக் கொடுக்க நான் என்றும் பூரண அவாவோடு இருக்கிறேன். பதவி வேட்கை கடந்த 34 வருடங்களாக எனக்கிருக்கவில்லை. கடமைதான் பெரிதெனக் கருதுவேன். அதே நிலையோடுதான் இன்றுமிருக்கிறேன். இனியாவது பொது ஸ்தாபனங்களை அரசியல் நோக்கங்களுக்காக உபயோகித்து மக்கள் சக்தியை வீணுக்காமலிருந்தால் அது வரவேற்கத்தக்கதாகும்.

நா. சி. செல்லையா

தலைவர் அகில இலங்கை
புங்குடுதீவு மகாஜன
சபை

கொழும்பு
6-6-60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி அசோக மாணவர் ஹொஸ்டலின் சேவை

25 வருடத் தொண்டு ஈட்டிய இணையற்ற வெற்றி



ஹொஸ்டலின் தோற்றம்

மலைநாட்டுத் தொழிலாளர் குழந்தைகளுக்கு சிறந்த விடுதியாக அமைந்து அவர்களின் நல் வாழ்வுக்காகச் சகல துறைகளிலும் பணியாற்றி வருகிறது திரு. பி. டி. ராஜனால் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் ஆரம்பித்து நிர்வகிக்கப்பட்டு வரும் அசோக மாணவர் ஹொஸ்டல்.

இதன் வெள்ளி விழாக் கொண்டாட்டம் இம்மாதம் 18-ம் 19.ம் தேதிகளில் நடைபெறவிருக்கிறது. சேர். சி. பி. ராமசாமி ஐயர் தமிழகத்திலிருந்து வந்து இதில் கலந்து கொள்ளுகிறார். விழாவில் புது மண்டப திறப்பு, பரிசளிப்பு முதலான நிகழ்ச்சிகள் இடம் பெறவிருக்கின்றன.

ஹொஸ்டலின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு ஹொஸ்டலைப் பற்றிய ஒரு கட்டுரை இங்கு பிரசுரிக்கப்படுகிறது.

ஏறக் குறைய 150 ஆண்டுகளுக்கு முன்னர், தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக, கூலிகளாகக் கொண்டுவரப்பட்ட இந்தியத் தொழிலாளிகள், முன்னேற வழியின்றி வழி காட்டுவோர் எவருமின்றி, சுதந்திர வாழ்க்கையென்றால் என்னவென்றறியாமல், கண்ணிருந்தும் குருடர்களாய், காதிருந்தும் செவிடர்களாய், வாயிருந்தும் ஊமைகளாய் வாழ்ந்தனர்.

அசோக மாணவர் ஹொஸ்டல் மலர்ந்தது

இத்தகைய அடிமைத்தனமான வாழ்க்கையில் அவர்கள் ஈடுபட்டிருந்தமையால், தாமும் மற்றவர்களுக்குச் சமானமாக வாழவேண்டும், தம் குழந்தைகளும் மற்றவர்களின் குழந்தைகளைப் போல் கற்று முன்னேற வேண்டும் என்ற அவா சிறிதுமின்றி, தாம் அடிமைத் தொழிலில் ஈடுபடவே பிறந்தவர்கள் என்ற எண்ணத்தோடு வாழ்ந்து வந்தனர். அவர்களின் குழந்தைகளை ஏற்றுக்கொள்வதற்கோ இலங்கையிலுள்ள எப்பாடசாலையும் தயாராயிருக்க

திரு. பி. டி. ராஜன்

வில்லை. இத்தகைய சமூகச் சூழ் நிலையில் தான் 25 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 1935-ம் ஆண்டு ஜனவரி 19-ம் தேதி கண்டியில் இந்திய மாணவர் ஹொஸ்டல் என்ற பெயருடன் தற்போதய அசோக மாணவர் ஹொஸ்டல் ஆரம்பிக்கப்பட்டது.

சீர்திருத்தம்

ஆரம்பத்தில், சீர் திருந்தாதிருந்ததனால் மாணவர்களிடையே நிலவிய சில அநாகரிகமான, பழக்க வழக்கங்களால் இவர்களைப் பள்ளிக் கூடங்களில் சேர்ப்பது, மிக மிகக் கடினமானதாயிருந்தது. இம் மாணவர்களின் சீர்திருத்தத்தையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்த இந்த ஹொஸ்டல், ஏழு வருடங்கள் இடைவிடாது உழைத்ததன் பயனாக, 1942 லிருந்து இம் மாணவர்கள் தங்களுக்கிடையேயிருந்த வெறுக்கத்தக்க பழக்கங்களை கைவிட்டு சுயமரியாதையோடு வாழத் தலைப்பட்டனர். அன்றிலிருந்து கண்டிக் கல்லூரிகளும் அவர்களை நீட்டிய கரங்களுடன் வரவேற்க ஆரம்பித்தன.

பல்வகைத் தொண்டு

தம் நிலையை உணர்ந்து கொண்ட இம் மாணவர்களுக்கு, அடுத்ததாக அவர்களின் நிலையை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக, மேடைப் பேச்சுக் கலையில் பயிற்சி கொடுக்கப்பட்டது. இதனால்தான் இன்று கண்டிக் கல்லூரிகளின் கல்வி அபிவிருத்திச் சங்கங்களிலே இம்மாணவர்கள் பிரகாசிக்கின்றார்கள். இம் மாணவர்களால் நடத்தப்படும் கூட்டுறவுக் கடை, இவர்கள் பங்கு பற்றும் கோஷ்டி விளையாட்டுப் போட்டிகள் முதலியவைகளினால் கூட்டுறவு முறையின் சிறந்த தத்துவங்களையும்-பொறுப்பேற்றலின் அதி முக்கியத்துவத்தையும் நன்கு விளங்கிக்கொள்கின்றார்கள். இவ்வமைப்பு அவர்கள் தங்கள் வாழ்க்கையில் பெரிய பொறுப்புக்களை தயங்காது ஏற்பதற்கும், கூட்டுறவு முறைப்படி நடந்து வாழ்க்கையில் சிறப்படைவதற்கும் தகுந்த வழிகாட்டியாய் அமைகின்றது.

ஒற்றுமைப் பணி

சமூக, சமய, தேசிய ஒற்றுமையை வளர்க்க வேண்டிய பயிற்சிகளிலும் இந்த ஹொஸ்டல் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். இதனால் இம் மாணவர்கள் கண்டியிலுள்ள சிறந்த கல்லூரிகளில் ஒழுக்கத்தின் உறைவிடமாக வாழ்ந்து, மற்றவர்களால் மதிக்கப்படுகின்றார்கள். இன்று ஒழுக்க சீலர்களாக வாழும் இவர்கள் நாளை தம் சமுதாய மக்களையும் அவ்வண்ணமே மாற்றுவார்கள் என்பது திண்ணம்.

சுதந்திர, சமத்துவ, சகோதரத்துவ, சமரச, சன்மார்க்க தத்துவங்களை இவர்களுக்கு இடைவிடாது போதித்து வந்தமையினால் தான், இத் தொழிலாளர் சமுதாயம் சிறிது சிறிதாக முன்னேறி வருகின்றது. இன்று இவர்களுக்கிடையே ஒரு மத்திய தர வகுப்பு உருவாகியிருப்பதற்கும் இதுதான் காரணம்.

மலைநாட்டுத் தொழிலாளர் சமுதாயம் மேலோங்க அதற்கு அல்லும் பகலும் தொண்டு செய்து வரும் அசோக மாணவர் ஹொஸ்டலின் பெயரும் புகழும் பரவுகின்றன. தன்னலமற்ற சேவைக்கு தக்க மதிப்பு உண்டு என்பது இந்த ஹொஸ்டல் மூலமாக நிரூபிக்கப்படுகிறது.

தமிழ்ப் புத்தகக் காட்சி

ஒரு கேலிக் கூத்து

தமிழையும் தமிழரையும் அவமானப்படுத்தச் செய்யப்பட்ட சதி

மொட்டைச்சியைக் கூந்தலழகி என்று கூறுவது போன்றதே சிறீலங்கா சாகித்திய மண்டலத்தின் 'புத்தக டிரஸ்ட்' நடாத்தும் புத்தகக் காட்சியை மாபெரும் புத்தகக் காட்சி என்று விளம்பரஞ் செய்வது. சாகித்திய மண்டலம் வெளியிட்ட பிழைகள் மலிந்த சுவரொட்டி விளம்பரம் "மாபெரும் புத்தகக் காட்சி"க்கு வாருங்கள் என்று தமிழ் மக்களை அழைக்கிறது.

இந்தப் புத்தகக் காட்சிக்குத் தமிழுக்கு சம அந்தஸ்துக் கேட்கும் தமிழ் மக்கள் ஒத்துழைப்பு நல்காமையால் ஒரு நல்ல சம சந்தர்ப்பம் நழுவிப்போய் விட்டது என்று ஒரு பச்சாத்தாபக் குரல் எழுப்பப்பட்டது. புகைச்சலும் எரிச்சலும் பொறாமை வாடையும் பொதிந்த இக்குரல், உண்மையை அறிதற்கு என்னைத் தூண்டிற்று.

தமிழ் இல்லை

"தமிழர்கள் நாட்டைப் பிளக்க முயல்கிறார்கள். இது இரத்தக் களறியை உண்டாக்கிவிடும்." என்று அடிக்கடி கூறும் கல்வி கலாசார அமைச்சர் திரு. பெனாட் அலுவிகாரா புத்தகக் காட்சியைத் திறந்து வைத்தார். வெளிப் படிகளின் இருமருங்கும் மஞ்சள் [illegible] சுவரொட்டி விளம்பரங்கள் என்னை வரவேற்றன. அவற்றிடையே தமிழ்விளம்பரம் ஒன்றேனும் இருக்குமா என்று பார்த்தேன். ஒன்றுமேயில்லை. உள்ளே புகுந்தேன். புத்தகக் காட்சி நடக்கும் மண்டபத்திற்குச் செல்லும் நடைபாதையின் இருமருங்கும் இருபதுக்கு மேற்பட்ட சிங்களச் சுவரொட்டி விளம்பரங்கள் காட்சியளித்தன. தமிழ் விளம்பரங்களைப் பார்க்க ஆவல் கொண்

கீரன்

டேன். இரண்டு மூலையில் "மாபெரும் புத்தகக்காட்சி" என்று இரண்டு விளம்பரங்கள் காணப்பட்டன. இதிலுங் கூட பெரும்பான்மை சிறுபான்மை என்று வேற்றுமை காட்டித் தமிழ் மக்களின் உள்ளத்தை ஊறுபடுத்துவதால் சாகித்திய மண்டலம் அடையும் நன்மை என்ன என்று சிந்தித்துக் கொண்டு மண்டபத்துள்ளே சென்றேன்.

தமிழ் நூல்களின் தொகை

சிங்கள நூல்களையும் தமிழ்ப் புத்தகங்களையும் பொது நூல்கள் என்றும், பாடசாலைப் புத்தகங்கள் என்றும் இரண்டாகப் பிரித்துக் காட்சிக்கு வைத்திருந்தனர். சிங்களப் பொது நூல்களில் 32 பிரிவுகள் காணப்பட்டன; ஆனால் தமிழ்ப் பொது நூல்களில் இரு பிரிவுகள் மட்டுமேயிருந்தன. காட்சிக்கு வைக்கப்பட்ட சிங்களப் பொது நூல்களின் தொகை 860. தமிழ்ப் பொது நூல்களின் தொகை இருபத்தைந்து. இந்த இருபத்தைந்தில் இஸ்லாம் பற்றிய நூல்கள் 13. "நானாவித விஷயங்கள் பற்றியன" 12 நூல்கள். "நானாவித விஷயங்கள் எனும் இத்தொடர் என்னுடையதன்று. புத்தக டிரஸ்டை நடத்தும் சாகித்திய மண்டலத்தின் தமிழ். இந்த நானாவித விஷயங்கள் பற்றிய 12 நூல்களில் ஏழு நூல்கள் சாகித்திய மண்டலத்திலிருந்து தமிழ் வளர்க்கும் பெரியார் இவருடைய நூல்கள் என்று அங்கே கூறினார்கள். பன்னூற்றுக் கணக்கான நூல்களிலே புத்தக "டிரஸ்டு" பாடுபட்டுப் பெற்ற நூல்கள் ஐந்தே ஐந்துதான்! புத்தக டிரஸ்டின் தொண்டைத் தமிழர் மறக்க முடியுமா?

இனிப் பாடசாலைப் புத்தகப் பகுதியைப் பார்ப்போம். சிங்களப் பகுதியில் 18 பிரிவுகள் உள. தமிழ்ப் பகுதியில் 11 பிரிவுகள் உள. சிங்கள நூல்களின் தொகை 546. தமிழ் நூல்களின் தொகை 101 மட்டுமே.

(9-ம் பக்கம் பார்க்க)

எஸ். ஜே. வியின் வேண்டுகோள்

கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி வெற்றி ஈட்ட பொருள் உதவி தந்து துணைபுரிந்த தமிழ் பேசும் மக்களாகிய உங்களிடம் தான் மீண்டும் பணம் தந்து உதவுங்கள் எனக் கேட்க வேண்டிய நிர்ப்பந்த நிலையில் இருக்கிறேன்.

எடுத்த எடுப்பில் தமிழ் பேசும் இனம் தனது. இழந்த உரிமைகள் அனைத்தையும் பெற்றுவிட முடியாது. நிலையான கொள்கையோடு தொடர்ச்சியாகப் பல காலத்திற்கு நாம் உரிமைக்குரல் எழுப்பினால்தான் உரிமை வாழ்வு பெற முடியும். உலகில் உள்ள விடுதலை பெற்ற பல் வேறு நாடுகள்-தேசிய இனங்கள் இந்தப் பேருண்மையையே உணர்த்தி நிற்கின்றன. ஆதலால் தமிழ் அரசுக்கட்சியை ஒரு குறிப்பிட்ட குழுவின் கட்சியெனக் கருதாது ஒவ்வொரு தமிழ் மகனும்-மகளும் தாம் அங்கம் வகிக்கும் 'மக்கள் விடுதலை இயக்கம்' (Peoples, Freedom Movement) அது எனக்கருதி நிறைந்த தமிழ் உணர்ச்சியோடு பணியாற்ற வேண்டும்.

இம்முறைத் தேர்தலில் நாம் போட்டியிடும் எல்லாத் தொகுதிகளிலும் வெற்றியீட்டி தமிழ் பேசும் இனம் தனது "சுயநிர்ணய உரிமையை" நிலைநாட்ட உறுதிபூண்டுவிட்டதை சிங்கள அரசாங்கத்திற்கும் உலகத்திற்கும் எடுத்துக்காட்ட வேண்டும். இந்நிலையை உருவாக்க ஓர் அரிய வாய்ப்பாகவே இத்தேர்தலை நாம் பயன்படுத்த வேண்டும். ஆதலால் இம் முக்கியத்துவத்தை உணர்ந்து இயன்றளவு பணம் தந்து உதவுங்கள் என மீண்டும் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

எஸ். ஜே. வி. செல்வநாயகம்

16, அல்பிறட் ஹவுஸ் கார்டின்ஸ்
கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவேஷ தண்டனைக் குரியது அல்லாத வியவகாரம்

(Malicious Civil Process)

திரு. எஸ். சபாபதிப்பிள்ளை
M. A., LL. B. (Lond) F. R. A. S., Bar-at-Law
இலங்கைசட்டக்கல்லூரி, தொழில் நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்
வருமானவரி பரிசீலனைக் குழு சட்ட ஆலோசகர்

நீதிமன்றங்களில் நீதியை எதிர்பார்த்து நிவாரணம் கேட்பவர்களுக்கு உதவிபுரிவதற்காக நீதிமன்றங்களுக்கு சில அதிகாரங்களுண்டு. அவ்வதிகாரங்களில் ஒன்று சட்ட வியவகாரங்களெனப்படும் (Legal Process); உதாரணமாகக் குற்றவாளியை நீதிமன்றத்துக்கு வரவழைப்பதற்காகக் கட்டளை சமர்ப்பித்தல் (Summons on Accused) கைதி செய்தற் கட்டளை (Warrant of Arrest); வாதியை அழைக்கும் கட்டளை (Summons on Defendant); சாட்சியை அழைக்கும் கட்டளை (Summons on Witness); ஆதனம் பிடிக்கும் கட்டளை (Sequestration) ஆகியவையேயாம். இவ்வதிகாரங்களைப் பாவித்தே நீதிமன்றம் நீதி தர்மம் வழங்க முடிகிறது. இவ்வதிகாரங்களை எப்படிப் பாவிப்பதென்றும், எச்சந்தர்ப்பத்தில் பாவிக்க வேண்டுமென்பது தண்டனைக் குற்ற வியவகார தொகுப்பிலும் (Criminal Procedure Code) தண்டனைக்குரியதல்லாதவியவகாரத் தொகுப்பிலும் (Civil Procedure Code) வகுத்திருக்கிறது. அவ்வவ் வழக்குக்கேற்றபடி நீதிபதி வழங்க வேண்டிய வியவகார (Process) த்தைப் பாவிப்பர்.

நட்டஈட்டுக் குற்றம்

இலங்கைச் சட்டப்படி ஒருவர் துவேஷ மனப்பான்மையுடன் இன்னொருவரை அவமானப்படுத்தக்கூடியதாக நீதிமன்றத்தில் வியவகாரம் எடுத்தால் அல்லது எடுப்பதற்கு ஏதுவாயிருந்தால் அது ஒரு நட்டஈட்டுக் குற்றமாகி அந்நட்டமடைந்தவருக்கு நட்டஈடு செய்ய வேண்டி நேரிடும். அக்குற்றத்தையே இங்கு கவனிப்போம். இது ஒரு தண்டனைக் குற்றம் (Crime) அல்ல என்பதை அவதானிக்க வேண்டும். அதாவது என்ன அவமானம் அடைந்தபோதும் அல்லது என்னவித நட்டமடைந்தபோதிலும் மற்றவரிடம் நட்டம் மாத்திரம் அறவிட முடியுமேமொழிய அவரை மறியலில் வைக்கவோ அல்வது அவருக்கு அபராதம் (Fine) விதிக்கவோ முடியாது இக்குற்றத்துக்கு முக்கியாம்சம் துவேஷ மனப்பான்மை (Malice) என்பதைச் சொல்லாமலே யூகித்துக்கொள்ளலாம்.

விவரங்களை மறைத்தல்

கடனுக்காகவாகுதல் அல்லது வேறெது காரணம்பற்றியாகுதல் நீதிமன்ற உத்தரவின்றி ஒருவரைக் கைது செய்தல் முறையற்ற காவல் (False Imprisonment) என்று முந்திய கட்டுரையில் அறிந்தோம். ஆனால் ஒருவர் அதிகாரம் பெற்ற (Competent) நீதிமன்றத்திடம் முறையிட்டு அம்முறையீட்டின் நிமித்தம் ஒருவரைக் கைது செய்விப்பதற்கு ஏதுவாயிருந்தால் ஒரு சந்தர்ப்பத்தில் மேற்கூறிய துவேஷ தண்டனைக்குரியதல்லாத வியவகாரக் குற்றத்துக்கு ஆளாவார். அதாவது இக்கைது செய்தல் நம்பகமற்றதும் நியாயமற்றதுமான சந்தர்ப்பத்தில் துவேஷ மனப்பான்மையுடன் பெறப்பட்டதென நட்டம் கோரும் வாதி (Plaintiff) அத்தாட்சிப்படுத்தவேண்டும். உதாரணமாக கடன்காரர் ஒருவர் கடனைக் கொடாமல் விடும் நோக்கத்துடன் இத்தீவை விட்டு வெளியேற எத்தனிக்கிறார் என்று நீதிமன்றம் தெளியக்கூடிய முறையில் ஒரு வாதி நிரூபித்தால் அக்கடன்காரரை கடன் தீர்ப்புக்கு முன்னரே கைது செய்தற்கு நீதிமன்றத்துக்கு அதிகாரமுண்டு. ஆகையால் பொய்ச் சான்றுகொண்டு இவ்வித சந்தர்ப்பத்தையுண்டுபண்ணி யொருவரை நீதியினமாகக் கைது செய்யப்பண்ணுதல் அல்லது எத்தனித்தல் நட்டஈட்டுக் குற்றமாகும். முக்கியமாயுள்ள விவரங்களை மறைத்தல் துவேஷ மனப்பான்மைக்குச் சான்றாகும்.

நீதிமன்றத் தீர்ப்பு

ஒருவர் நீதிமன்றமூலம் (ஆனால் நியாயமற்ற முறையில்) ஆதனம் பிடிக்கும் உத்தரவைப் பெற்று அதன் மூலம் ஜப்திகாரி (Fiscal) யைக்கொண்டு ஆதனம் பிடிக்க எத்தனித்தார். ஜப்திகாரி ஆதனத்தைப் பிடிக்க முன் ஆதனகாரன் வேண்டிய பணத்தை ஜப்திகாரியிடம் கொடுத்து ஆதனத்தை விடுத்தான். பிறகு அவன் இதற்கு மூலகர்த்தாவாயிருந்தவர்மீது நட்டஈடு வழக்குத் தொடுத்தான். இதற்குப் பிரதிவாதி (முன்னைய வழக்கின் வாதி) ஆதனம் பிடிபடவில்லையாதலால் அக்குற்றமேற்படவில்லையென வாதித்தார். நீதிமன்றம் பிரதிவாதி செய்த பிரயத்தனத்தால் ஆதனகாரனுக்கு அவமானம் ஏற்படாத போதுமானதெனத் தீர்த்து அவர் துவேஷ தண்டனைக்குரியதல்லாத வியவகாரக் குற்றமிழைத்தவரென தீர்ப்பளித்தது.

துவேஷ மனப்பான்மை

சில சந்தர்ப்பங்களில் துவேஷ மனப்பான்மையில்லாமலே நட்டஈடு வழக்குத் தொடர முடியும். உதாரணமாக ஒருவர் நீதிமன்றம் மூலமில்லாமல் தத்துவமுள்ள வேறு நிர்வாக அதிகாரிமூலமாக பிழையான தகவலைக் கொடுத்து இன்னொருவரை கைது செய்தாவது, அல்லது அவருடைய வீடுவாசலைத் தேடுதல் செய்தாவது, அல்லது அவருடைய ஆதனங்களைப் பிடித்தாவது அவமானப்படுத்தினாலும் இந்நட்டஈட்டுக் குற்றம் ஏற்படும். இதற்குத் துவேஷ மனப்பான்மை தேவையில்லை. உதாரணமாக ஒருவர் அரைகுறையாக வறிந்த தகவலை ஒரு நகர காவலதிகாரி (Police Officer) க்குக் கொடுத்து இன்னொருவருடைய வீட்டைக் களவுபோன சாமான்களைக் கண்டுபிடிப்பதற்காகத் தேடுதல்செய்வித்தார். இத்தருணம் துவேஷ மனப்பான்மையுண்டென்று நிரூபிக்கும் சங்கடம் ஏற்படாது. ஆங்கிலேய சட்டத்திலும் இலங்கைச் சட்டத்திலும் இதுதான் விதியாயிருந்தபோதிலும் தென்னாபிரிக்க ரோமன் சட்டத்தில் இவ்விதியில்லை.

மூலாதார ஆதன சுதந்திரம்

ஒருவரின் ஆதனத்தை இன்னொருவரின் கடனுக்காக நீதிமன்றமூலம் உத்தரவு எடுத்து பிடிப்பித்தாலும் இக்குற்றமேற்படும் நேர்முகமாகவே இது குற்றமெனப் புலப்படுகிறபடியால் இதற்கும் துவேஷ மனப்பான்மை தேவையில்லை. ஆகையால் தான் தீர்ப்பெடுத்த பிறகு ஆதனம் பிடிக்கையில் தீர்ப்பெடுப்பவர் பிடிக்க வேண்டிய [illegible] காட்ட வேண்டிய அவசியம் ஏற்படும். இதில் அவர் மகிழ்வனமாயிருக்க வேண்டும். இக்கொள்கை தனி மனிதரின் மூலாதார ஆதன சுதந்திர (Fundamental Freedom of Property) அடிப்படையில் அமைக்கப்பட்டது.

பொய் வழக்கு

இனி இன்னொருவரில் ஒருவர் பொய் வழக்கு வைத்தால் குற்றமேற்படுமோவென்பதை ஆராய்வோம். இவ்வழக்குத் தண்டனைக் குற்ற வழக்காயின் துவேஷ மனப்பான்மையுண்டானால் துவேஷப் பிராது (Malicious Prosecution) நட்டஈட்டுக் குற்றமென முன்னர் அறிந்தோம். தண்டனைக் குற்றமல்லாத (Civil) வழக்குகள் கூட ஒருவர் பொய்யாக துவேஷ மனப்பான்மையுடன் தொடர்ந்தால் அவரிடமிருந்து நட்டஈடு கோரி வழக்கு வைப்பதற்கு சட்டத்தில் ஒரு ஆட்சேபனையில்லையேனும் சிறு தடை நிமித்தம் அப்பேர்ப்பட்ட வழக்குகள் வைப்பது அபூர்வம். முதலாவது எல்லா வழக்குகளும் சட்டப்படி நற்நம்பிக்கையுடன் வைக்கப்பட்டது என்னும் அனுமானம் (Presumption) ஆகையால் துவேஷ மனப்பான்மையை நிரூபிப்பது கடினமான விஷயம்.

வழக்கு வைப்பது அபூர்வம்

இதைவிட முக்கியமான நியாயம் யாதெனில் இப்பேர்ப்பட்ட பேர் வழிக்குமாறாக தீர்ப்பெடுத்தபோதிலும் அவர்களிடமிருந்து வசூல்பண்ணுவதற்கு ஆதனம் கிடையாது. ஆகையால் தான் இவ்வழக்கு வைப்பது அபூர்வம் எனப்பட்டது. சொத்து அந்தஸ்து உள்ளவன் நீதிமன்றத்துக்கு இன்னொருவரை நன்னம்பிக்கையான நியாயமின்றி இழுக்க மாட்டான். ஒன்று அப்பேர்ப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் தேவையின்றிக் கால் வைக்கவே கூசுவார்கள்; இரண்டாவது நியாயவாதிகள் (Lawyers) வழக்குத் தொடர இடமுண்டென்று அபிப்பிராயப்பட்டால் தான் அவர்கள் வழக்குத் தொடர்ந்து பணம் செலவழிப்பதற்கு உடன்படுவார்கள்; அச்சந்தர்ப்பத்தில் துவேஷ மனப்பான்மை அல்லது நம்பகமான காரணமின்மை உண்டென்று ஸ்தாபிக்க முடியாதுதானே. இதைவிடப் பொதுவறிவுள்ள ஒரு மனிதர் இன்னொருவரைப் பொய் வழக்கில் இழுத்து நீதிமன்றத்தில் அலைலோலப்பட்டு பணம் இழக்க முற்படார் என்பது மனித சுபாவம்.

அலைக்கழிவு வழக்குத் தொடரல் சட்டம்

எனினும் இப்படிப்பட்ட பேர்வழிகள் உலகத்தில் இல்லையென்பதற்கிடமில்லை. அப்படிப்பட்டவர்கள் வல்லில் லங்கத்துக்கு தேவையற்ற முறையில் நீதிமன்றத்துக்கு இழுத்தால் நீதிபதி வழக்கைத் தள்ளுபடியாக்கலாமே தவிர வேறொன்றும் செய்ய முடியாது. இப்படிப்பட்டவர்களில் திருப்பி நட்டஈடு வழக்கு வைப்பதும் பொதுவறிவுடைய மனிதன் செய்யக்கூடிய காரியமல்ல. கெட்ட மாடு தேடுவதிலும் எட்டு மாடு தேடலாம் என்னும் பழமொழியையொட்டி ஒரு நடவடிக்கையையும் எடுக்காமலிருப்பர். இச்சுவாகத்தை ஆதாரமாகக்கொண்டு சில பகுத்தறிவற்றவர்கள் தங்கள் துவேஷத்தை மற்றவர்களில் நீதிமன்றத்தில் அலைப்பதால் தீர்ப்பர். இத்தகைய சந்தர்ப்பம் ஒன்று இலங்கையில் நாற்பது வருஷத்துக்கு முன்னேற்பட்டது. அவ்வமயம் ஒரு ஆங்கில மாது துவேஷ மனப்பான்மையுடன் கண்ட நிண்டவர்களுக்கு மாறாக வழக்குத் தொடர்ந்து தோற்ற பிறகு வழக்கில் ஏற்பட்ட நியாயவாதிகளிலும் வழக்குத் தொடர்ந்தார். அதுமட்டுமன்றி வழக்கைத்தீர்த்த நீதிபதிமேலும் வழக்குத் தொடர்ந்து அவ்வழக்குகளை இழந்தார். பின்னர் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மீதும் வழக்குத் தொடரும் ஏத்தனம் செய்தார். இதைநிப்பாட்டுவதற்குச் சட்டத்தில் இடமில்லையாதலால் இவரின் காரணம் பற்றியே 1919-ம் ஆண்டில் அலைக்கழி வழக்குத் தொடரல் சட்டம். (Vexatious Litigants Ordinance) என்னும் ஒரு சட்டம் இயற்றப்பட்டது.

அலைக்கழிப்பவர்மீது நடவடிக்கை

அந்த சட்டத்தின் சாராம்சம் பின்வருமாறு: எவராகிலும் சதா வேறு ஆட்கள் மேல் நியாயமற்ற வழக்குகள் வைத்து அலைக்கழிக்கிறார் என்று அறிந்தால்முடித்தரணி (Attorney General) உயர் நீதிமன்றத்தில் அவர் அலைக்கழி வழக்குத்தொடர்பவர் எனக் குற்றம் சாட்டி மனுப்பண்ணலாம். அம்மனுவை உயர் நீதிமன்றம் (Supreme Court) விசாரித்து உண்மையென முடிவுசெய்தால் அவரை ஒரு அலைக்கழி வழக்குத் தொடர்பவரெனத் தீர்ப்பளிக்கும். அப்படி தீர்ப்பளிக்கப்பட்டவர் அதன் பிறகு நீதிமன்றங்களில் தண்டனைக் குற்றமல்லாத வழக்குகள் சாதாரணமான முறையில் வழக்குத்தொடர முடியாது. இது மூலாதார உருத்துக்கு முரண்பட்டதாதலால் அவருக்கு சிகிச்சை தேவையாயின் அவர் உயர்நீதிமன்றத்தில் தனக்கு நேர்ந்த கஷ்டத்துக்கு நிவாரணம் கேட்கலாம். நீதி முறைப்படி நிவாரணம் வழங்க அற்ப இடமேனும் இருக்கிறதென உயர் நீதிமன்றம் முடிவுக்கு வந்தால் அவர் மாவட்ட நீதிமன்றத் (District Court) வழக்குத் தொடர அனுமதி கொடுக்கும்; அதன் பிறகுதான் அப்பேர்ப்பட்டவர் வழக்குத் தொடரலாம்.

இவ்வகைநடவடிக்கையை தண்டனைக் குற்றமாக்கலாம்; ஆனால் அப்படிச் செய்தால் முறைபாடுள்ளவர்களின் மூலாதார உரித்தைச் சில சமயம் பறிக்க முடியுமாதலால் சட்டம்அப்படி வகுக்கப்படவில்லை. இது ஒரு உளக்கோளாறு சம்பந்த விஷயமாகவே கருதப்பட்டு இதற்கு சட்ட முறையில் வேறுபரிகாரம் கொடுபடவில்லை.

இந்தியாவின் உயர்ந்தரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே

- ஒருவரின் ஆயுள் காலமுழுவதும் உழைக்கக் கூடிய வெகுமதி.
- மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
- இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
- உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்மு சன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11.
போன் : 4243, 5060.
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புறொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில ஆனைப்பந்தி தமிழ்க் காங்கிரஸ்

தேர்தலுக்குத் தேர்தல் கரைந்து வந்த வரலாறு

ஜீ. ஜீ. அரசியல் வானிலிருந்து அகற்றப்பட்ட புது அத்தியாயம்

தமிழரசுக் கட்சி மலர்ந்து படிப்படியாக மக்கள் ஆதரவைப் பெற்ற கதை

ஆடி இருபது தமிழ்ப் பேசும் மக்கள் தமிழரசுக் கட்சியின் தலைமையில் ஒற்றுமையாக உரிமைக் குரல் எழுப்பும் நன்னாள். காட்டிக் கொடுக்கும் காக்கைவன்னியர்களையும், தமிழ் மக்களை ஏய்த்துப் பிழைக்கும் எட்டப்பர்களையும், யூ. என். பீக் கட்சியின் கைக்கூலிகளையும் நாட்டைவிட்டோட்டும் நன்னாள் அந்நாள்.

மார்ச் 19-ல் நடைபெற்ற தேர்தல் தமிழ்ப் பேசும் மக்களின் ஒற்றுமையையும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செல்வாக்கையும் மாற்றுக் கட்சித் தலைவர்களுக்குத் தெளிவாக உணர்த்தியது. கடந்த நாருண்டு காலத்தில் தமிழ் மக்கள் கண்டும் கேட்டுமிராத ஒற்றுமையைத் தமிழரசுக் கட்சி ஏற்படுத்தியது.

சிங்களத் தலைவர்கள் தலைகவிழ்ந்தனர்

தமிழ்ப் பேசும் மக்கள் உடலால் பலராயிருந்தாலும் உள்ளத்தால் ஒருவர் என்பதைக் கண்ட சிங்களத் தலைவர்கள் சிந்திக்கத் தலைப்பட்டார்கள். தமிழரசுக் கட்சியை அசட்டை செய்த சிங்களத் தலைவர்கள் எங்களை ஆதரியுங்கள், எங்களை ஆதரியுங்கள் என்று முறைகொண்டாடித் தூதனுப்பினார்கள். இந்த நாட்டுப் பிரதமரே தமிழரசுக் கட்சியுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தினார். தமிழரசுக் கட்சி, அற்ப சலுகைகளுக்கும் மந்திரிப் பதவிகளுக்கும் தம்மை அடகு வைக்குமெனக் கனவு கண்ட சிங்களத் தலைவர்கள் தலை சுவிழ்ந்தார்கள்!

யூ. என். பியின் கையாட்களாகத் தமிழ் மக்களிடையே தெரிந்த சில தலைவர்களைப் பணங் கொடுத்தோ, பதவி நீட்டியோ தம் பக்கம் இழுத்துத் தமிழரசுக் கட்சிக்குச் சாவு மணி அடிக்கவேண்டுமென்று யூ. என். பி. பகற் கனவு காண்கிறது, இப்போது.

தமிழரசுக் கட்சி மலர்ந்தது

இன்று யு. என். பியின் நிழலாக விளங்கும் தமிழ்க் காங்கிரஸ் தலைவரைத் தமிழ் மக்களுக்கு நல்வழிகாட்ட வந்த தலைவரெனத் தமிழ் மக்கள் நம்பி இருந்த காலமும் ஒன்று இல்லாமல் இல்லை. 1947-ம் ஆண்டுத் தேர்தலில் தமிழ்ப் பேசும் மக்கள் தமிழ் காங்கிரசை ஆதரித்தார்கள். மக்கள் தமக்கு நல்வழி காட்ட வந்த நாயகனென நம்பிய தமிழ் காங்கிரஸ் தலைவர், தமிழ் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மந்திரிப் பதவிக்காக டி. எஸ் சேனநாயக்காவிடம் தாரை வார்த்துக் கொடுத்தார். தமிழ்க் காங்கிரஸ் தலைவரின் சுயநல நாட்டத்தைக் கண்ட தமிழ் மக்கள் அவரின் தலைமையைவெறுத்தனர். கொண்ட கொள்கைக்காகக் கடைசிவரை போராட முடியாது போலித் தலைவர் அவரெனக் கண்டனர். தமிழ்க் காங்கிரஸ்பிரதிநிதிகளாகப்பாராளுமன்றஞ் சென்ற கோப்பாய்க் கோமான் காலஞ் சென்ற கு. வன்னியசிங்கமும், காங்கேசன்துறைப் பிரதிநிதியாம் தமிழரசுத் தந்தை செல்வநாயகமும் தமிழரசுக் கட்சியை 1949 மார்கழித் திங்களில் மலர்வித்தனர்.

காங்கிரஸ் செல்வாக்கு

சிங்களத் தலைவர்களின் இட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தையும், தமிழ் மொழியின் அரசியல் அனுதை நிலைமையையும், இந்தியத் தமிழரின் பறிக்கப்பட்ட பிரஜா உரிமை பிரச்னையையும் தமிழ் மக்களுக்கு ஆதாரங்களுடன் எடுத்துக் காட்டினார்கள். தமிழரசுக் கட்சியின் செல்வாக்கு நாளிலும் பொழுதிலும் நம் மக்களிடையே பெருகியது.

1947-ம் ஆண்டு ஆவணியில் நடைபெற்ற தேர்தலில் தமிழ்க் காங்கிரசார் 9 அபேட்சகர்களை நிறுத்தினர். இவர்களில் எழுவர் பாராளுமன்ற உறுப்பினராயினர். அப்பொழுது தமிழ்க் காங்கிரசுக்கு கிடைத்த வாக்குகள் 82,499.

இறங்குமுகம்

1952 மே மாதத் தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் 7 பேரை நிறுத்தி நால்வர் வெற்றி பெற்றனர். இத் தேர்தலில் கிடைத்த வாக்குகள் 64,512. இத் தேர்தலில் தமிழரசுக் கட்சியும் அபேட்சகர்களை நிறுத்தி இருவர் வெற்றி பெற்றனர்.

தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்தவாக்குகள் 45,331; ஐந்து வருடங்களாகத் தமிழ் மக்களிடையே பிரசாரஞ் செய்து வந்த தமிழ்க் காங்கிரஸ் 64,512 வாக்குகள் பெற இரண்டு ஆண்டுகளில் தமிழரசுக் கட்சி 45,331வாக்குகள் பெற்றது. தமிழ் பேசும் மக்கள். தமிழரசுக் கட்சியை ஆதரிக்க முற்பட்டுவிட்டார்களென்பது இத்தேர்தல் மூலமே தெளிவாகியது.

காங்கிரஸ் கரையத் தொடங்கியது

தோல்வியைப்பற்றிக் கவலைகொள்ளாத தமிழரசுக் கட்சியினர், தமது இலட்சியத்தை அடைவதற்குத் தொடர்ந்து தமிழ் மக்களின் ஆதரவைத் திரட்டினர். அதன்காரணமாக 1956ம் ஆண்டு சித்திரையில் நடைபெற்ற தேர்தலில் தமிழரசுக் கட்சி 14 அபேட்சகர்களை நிறுத்த, தமிழ்க் காங்கிரஸ் ஒரேயொரு அபேட்சகரையே நிறுத்தியது. பத்து தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் வென்றனர்; 1,42,036 வாக்குகள் பெற்றனர். தமிழ்க் காங்கிரசிற்கு 8914 வாக்குகளே கிடைத்தன.

தமிழ் மக்களிடையேசெல்வாக்குப் பெற்றிருந்த தமிழ் காங்கிரஸ் 1956ம் ஆண்டுத் தேர்தலில் செல்லாக் காசாகிவிட்டதேன்?

பொன்னம்பலம் புறக்கணிக்கப்பட்டார்

தமிழ் மக்களின் உயிர் போன்ற தமிழ் மொழியை ஆட்சியாளர் தள்ளி வைத்தபோது தமக்கென்னென்று உண்டுஉடுத்துக் களியாட்டங்களில் காலத்தைச் செலவிட்டார் தமிழ்க் காங்கிரஸ் தலைவர். தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றம் நடந்தபோது வெளிநாடுகளில் வேடிக்கையுலாவில் சுற்றிச் சுழன்று திரிந்தார். பதவி என்ற ஆசைநாயகி விரித்த வலையில் சிக்குண்ட அவர் பெற்ற தாய் போன்ற பிறந்த நாட்டையோ, தாய்நாடோ உயிர்போன்ற தாய் மொழியையும்பற்றியோ சிந்திக்க மறந்து வாழ்ந்தார். அதனால் புறக்கணிக்கப்பட்டார்.

விந்தை

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் காட்டிய ஒத்துழைப்பு இன்று 19,535 வாக்காளருடைய தமிழ்ப் பிரதேசமாகிய அம்பாறையில் 90.9 சதவீதம் சிங்களவரும் 6.3 சதவீதம் தமிழரும் வாழ்ந்து வர வழி வகுத்தது.

பொத்துவிலிலுள்ள 18,250 வாக்காளர்களில் 7.6 சதவீத வாக்காளர்கள் சிங்

"புத்தொளி"

களவராக இருக்கின்றனர். 28,520 வாக்காளர்களையுடைய மூதூரில் 15.1 சதவீதமானோர் சிங்களவர். தமிழ் நாட்டின் தலைநகராக விளங்க இருக்கும் திருகோணமலையில் 19,024 வாக்காளர்களில் 22 சத விகிதத்தினர் சிங்களவர். வவனியாவிலுள்ள 18,469 வாக்காளர்களில் 17 சத விகிதத்தினர் சிங்களவர்.

பு. என். பி.யின் முன்னைய தலைவர் டி. எஸ். சேனநாயகாவின் காலத்தில்தான் தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றம் ஏற்பட்டது. அப்பொழுது தமிழ் காங்கிரஸ் தலைவர் பு. என். பி.யில் ஒரு மந்திரியாக விளங்கினாரல்லவா? இன்று குடியேற்றத்தைத் தடுப்பது தமது கொள்கையென்று நீலிக்கண்ணீர் வடிப்பது விந்தையில் விந்தையன்றோ!

மார்ச் தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி

பங்குனி 19 தேர்தலில் தமிழரசுக் கட்சியுடன் தமிழ்க் காங்கிரஸ் போட்டியிட்டது. வடக்கு மாகாணத்தில் மட்டும் 8 அபேட்சகர்களைத் தமிழ்க் காங்கிரஸ் நிறுத்த வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழரசுக் கட்சி 19 அபேட்சகர்களை நிறுத்தியது. தமிழரசுக் கட்சிக்கு 1,78,692 வாக்குகள் கிடைத்து 15 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்ட போது தமிழ்க் காங்கிரஸ் 38,275 வாக்குகள் பெற்று ஒருவரே தெரிவுசெய்யப்பட்டார்.

தமிழ் மக்களின் தனிப் பெருந் தலைவரெனத் தம்பட்டம் அடித்துத் திரிந்த தமிழ்க் காங்கிரஸ் தலைவர் இத்தேர்தலில் படுதோல்வி காண மக்கள் படிப்பித்து விட்டனர். கடந்த பங்குனி மாதத் தேர்தலில் தமிழரசுக் கட்சி நான்கு முனைத் தாக்குதல்களுக்குப் பதில் சொல்லி வந்தது. பங்குனி மாதத் தேர்தல் சூறாவளி தமிழரசுக் கட்சிக்குத் தென்றலாகவும், தமிழ்க் காங்கிரஸ் சமசமாஜ கொம்யுனிஸ்டுகளுக்குப் பேய்க்காற்றாகவும் வீசியது.

ஜீ. ஜீ.யின் பிரசாரம்

"தமிழரசுக் கட்சிதான் தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையைக் குலைத்தது. கடந்த வகுப்புக் கலவரத்துக்குக் காரணமானது. தமிழ் மக்கள் உடைமையிழந்து துன்பக்கவும் தமிழ்ப் பெண்மணிகள் கற்பையிழக்கவும் தமிழ் பேசும் மக்கள் இறந்துபடவும் காலானது. 1956ம் ஆண்டுத் தேர்தலில் தமிழ் மக்களைச் சிறப்பாகத் தமிழ் இளைஞர்களைத் தமிழரசுக் கட்சி ஏமாற்றியது. இம்முறை அப்படி ஏமாறாமல் தமிழ் காங்கிரசிற்கே உங்கள் வாக்குகளைக் கொடுப்பீர்கள் என்பதில் சந்கேமில்லை" என்று தமிழ்க் காங்கிரஸ் தலைவர் பிரசாரங்களில் பிதற்றினர்.

பல்லுக் கழன்ற நரி

சுற்றில் அவர் கண்டது என்ன? தமிழ்க் காங்கிரஸ் தலையெடுக்கவிடாமல் ஒங்கி அடித்தார்கள் மக்கள். "குற்றவாளி நீதான்" என்று நெற்றிக்கு நேரே சொன்னாற்போலத் தமது வாக்குரிமையைப் பிரயோகித்து பொன்னம்பலனாரைப் பல்லுக் கழன்ற நரியாக்கினார்கள்.

இதன் பின்னர் சில நாட்கள் "செத்தன் சிவனே" என்று சும்மா கிடந்தவர் மறு தேர்தல் என்றதும் 'உசுப்பு' பெற்று ஏதோ உரக்கக் கூறுகிறார். 10 பேரை கெஞ்சிக் கூத்தாடிப் பிடித்து அபேட்சகர்களாக நிறுத்திவிட்டு "விழுத்துகிறேன் பார் தமிழரசை" என்று வீறாப்புப் பேசுகிறார். ஆடி இருபதிலே தெரியப் போகிறது முடிவு.

உங்கள் நீடித்த எழிலுக்கு

'எலைட்'

சுப்பர்லோன் ஜோர்ஜட் என்னும் அழகின் அணிகலனை அணியுங்கள்.

பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.

இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது

'எலைட்'

சுப்பர்லோன் ஜோர்ஜட்

அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.

குண்டன்மால்ஸ்,

லிமிட்டெட்,

கொழும்பு.

பணம்! சேமியுங்கள்!! பணம்!!!

இன்றே நாஷனல் பாட்டரிகளைப்

பாவிக்க ஆரம்பித்து அதிக லாபம் பெற்று ஆனந்தியுங்கள்.

நீடியகாலம் பாவிக்கிறது

விலையோ மிகக் குறைவு

இறக்குமதியாளர்கள்:

எஸ். யு. முஹம்மது ஹாஜியார்,

79, பிரதான வீதி, கொழும்பு. போன்: 7653 * 143, மெயின்வீதி, காலி. போன்: 525

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1960 ஜூன் மாதம் 12-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411. த. பெ. 1183

டட்லியின் வெளி வேஷம்!

தேர்தல் கூட்டங்கள் என்ற போர்வையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், நாட்டின் இடைக்காலப் பிரதமருமான திரு. டட்லி சேனநாயகா செய்து வரும் விஷமப் பிரசாரத்தையும், பூதாகாரமாகக் கிளப்பி வரும் இனபேத வெறியையும் கண்டு தமிழ்ப் பொது மக்களும், நடுநிலைமையாளர்களான சில சிங்களப் பொது மக்களும் திகிலடைகிறார்கள்.

அரங்கத்திலே பரந்த ஜனநாயகவாதியாக வேஷம் போட்ட திரு. டட்லி சேனநாயகா அந்தரங்கத்திலே இவ்வளவு கொடிய வகுப்பு வாதியா என்று அவர்கள் மூக்கின் மேல் விரலை வைத்துத் திகைத்து நிற்கிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சி ஒரு அரசாங்கம் அமைப்பதற்கு தமிழரசுக்கட்சி அவசியம் உதவிபுரிய வேண்டும் என்று கடந்த மார்ச்—ஏப்ரல் மாதங்களில் தமிழரசுத் தலைவர்களின் வாசஸ்தலங்களுக்குத் தூது நடந்து, அவர்களை வற்புறுத்திய கொழும்புத் தமிழப் பிரமுகர்களும், பிரபல வர்த்தகர்களும் இப்போதுதான் உண்மையை உணர்ந்து கொண்டார்கள்.

அவர்களிற் பலர் தமிழரசுத் தலைவர்களிடம் திரும்பவும் வந்து தாங்கள் அந்தச் சமயம் தவறாக ஆலோசனை கூறிவிட்டதற்காக மன்னிப்புக்கோரி வருகிறார்கள் என்றும் தெரிகிறது.

"திரு. டட்லி ஒரு நல்ல மனிதர்; பெரு மனது கொண்டவர்; அவரை நம்பலாம் என்று எண்ணியிருந்தோம். இவ்வளவு காலமும் அவரும் ஒரு பசுத்தோல் போர்த்திய புலியாகத்தான் நடமாடி வந்திருக்கிறார். இப்போதுதான் அவருடைய நிஜரூபம் வெளியே தெரிகிறது. தமிழரசுக் கட்சி, ஐக்கியதேசியக் கட்சியையும் திரு. டட்லியையும் நம்ப மறுத்து, அரசாங்கத்தைக் கவிழ்த்தது முற்றும் சரியானதே என்று மேற்படி கொழும்புப் பிரமுகர்களும் வர்த்தகர்களும் இப்போது வெளிப்படையாகவே அபிப்பிராயம் தெரிவிக்கத் தலைப்பட்டு விட்டனர்.

ஒரு சில ஏமாந்த தமிழர்கள் நினைப்பதுபோல் திரு. டட்லியோ அல்லது மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியினரோ பரந்த கொள்கையுடைய ஜனநாயக வாதிகள் அல்லர் என்பதும், குறுகிய நோக்குடைய வகுப்புவாதிகளேயாவர் என்பதும் ஏற்கனவே தெரிந்த உண்மைகள் தாம்.

ஒவ்வொரு பொதுத் தேர்தலின் போதும் ஐக்கிய தேசியக் கட்சி மத வெறியையோ, இனவெறியையோ, மொழி வெறியையோ அல்லது வகுப்பு வெறியையோ கிளப்பிவிட்டுத் தான் தேர்தலில் வெற்றிபெற முயற்சித்து வந்திருக்கிறது என்பது யாவரும் அறிந்ததே.

1947-ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் தகப்பன் சேனநாயகா என்ன செய்தார்? பௌத்த விஹாரைகளையும், கோயில்களையும், மசூதிகளையும், தேவாலயங்களையும் மார்க்ஸீய வாதிகள் தீயிட்டுக் கொளுத்துவதுபோல் சுவரொட்டிப் படங்களைத் தயாரித்துத் தெருத் தெருவாக ஒட்டி ஒருவித மதவெறியைத் தூண்டித் தேர்தலை வென்றார்.

1952-ல் திரு. டட்லி சேனநாயகா என்ன செய்தார்? அப்பன் காலத்தில், தமிழ் காங்கிரஸின் அனுசரணையோடு நிறைவேற்றப்பட்ட அநியாயமான இந்தியர் பிரஜாவுரிமை வாக்குரிமைச் சட்டங்களைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு இந்த நாட்டை சுப்பையாக்களும், செல்லையாக்களும், ராமசாமிகளும், ராஜலிங்கங்களும் அபகரியாமல் பாதுகாக்க வேண்டுமானால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களியுங்கள் என்று சிங்கள மக்களிடையே இனவெறியைத் தூண்டிவிட்டார். அதன் மூலம் வெற்றியும் கண்டார்.

1956ல் ஐக்கிய தேசியக் கட்சி என்ன செய்தது? அவசர அவசரமாக களனியில் மாநாடு கூடி சிங்களம் மட்டும் தீர்மானத்தை நிறைவேற்றி மொழி வெறியைத் தூண்டிவிட்டது. அதன்மூலம் தேர்தலில் வெற்றியீட்டத் திட்டமிட்டது.

1960ல், தமிழரசுக் கட்சியினர் நாட்டைப் பிரிக்கப் பார்க்கிறார்கள் என்றும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களப் பொதுமக்கள் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாமல் தடுத்து நிறுத்தப்படப் போகிறார்கள் என்றும் விஷமப் பிரசாரம் செய்து, சிங்களவர்—தமிழர் வகுப்புத் துவேஷத்தைக் கிளறி அதன்மூலம் தேர்தலில் வென்றுவிடச் சூழ்ச்சி செய்கிறார் திரு டட்லி. இதைத் தொடர்ந்து அடுத்த பொதுத் தேர்தலில் பௌத்த மத வெறியைக் கிளப்பி சைவத்தையும், இஸ்லாத்தையும், கிறிஸ்தவத்தையும் நசுக்குவதன்மூலம் தேர்தலில் வெற்றி பெற இவர் முயற்சித்தாலும் முயற்சிக்கலாம்.

இப்படிப்பட்ட பிற்போக்குவாதி ஒருவரும், அவர் சார்ந்து நிற்கும் ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழ் பேசும் மக்களுக்கு எப்படி நன்மை விளைவிக்க முடியும்? எப்படி நடுநிலைமையையும் ஜனநாயகத்தையும் இந்த நாட்டில் நிலைநாட்ட முடியும்?

உண்மை நிலை இப்படியிருக்க தமிழரசுக் கட்சிக்கு எதிராகத் தமிழ் காங்கிரஸ்காரர் செய்துவரும் பிரசாரம் வேடிக்கையானதாக இருக்கிறது. 'கடந்த ஏப்ரல் மாதங்களில் தமிழ் பேசும் மக்களுக்கு அரியதொரு சந்தர்ப்பம் கிடைத்தது. ஐக்கிய தேசியக் கட்சியைத் தமிழரசுக் கட்சி ஆதரித்திருந்தால் அநேக நன்மைகளைப் பெற்றிருக்கலாம். திரு பண்டாரநாயகாவோடு ஒப்பந்தம் செய்து கொண்டு அவருக்குப் பல மாத காலங்கள் அவகாசம் கொடுத்த தமிழரசார் ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்து அவர்களுக்கும் ஆறு மாத காலம் அவகாசம் கொடுத்திருக்கலாம். ஐக்கிய தேசியக் கட்சியினர் ஒரு ஸ்திரமான அரசாங்கத்தை அமைத்த பின்னர் தமிழரசார் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தியிருக்கலாம்' இவ்வாறு தமிழ்க் காங்கிரஸார் ஒரு விஷமப் பிரசாரத்தை நடத்த முன்வந்திருக்கிறார்கள்.

தமிழரசார் ஐக்கிய தேசியக் கட்சியை அரசபீடத்தில் அமர்த்தியிருந்தால் என்ன சம்பவித்திருக்கும்?

ஐக்கிய தேசியக் கட்சியைத் தமிழரசார் ஆதரிக்கவில்லையென்ற காரணத்தினால்தான் இதர கட்சிகளிலிருந்த பலர் ஐக்கிய தேசியக் கட்சியோடு சேரத் தயங்கிக்கொண்டிருந்தார்கள். தமிழரசுக் கட்சி எதுவித நிபந்தனையுமின்றி ஐக்கிய தேசியக் கட்சியை ஆதரித்து, அது ஓர் அரசாங்கம் அமைத்திருந்தால் சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்தும், இதர கட்சிகளிலிருந்தும், சுயேச்சையாளரிடமிருந்தும் பலர் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாவியிருப்பார்கள்.

அப்படித் தாவுபவர்களுடைய தொகையை ஆறு மாத காலத்துக்குள் போதுமான அளவு பெருக்கிக்கொண்ட பின், திரு ஜீ. ஜீ. பொன்னம்பலத்தை சேர் ஜோன் கொத்தலாவலை உதைத்துத் துரத்தி வெளியேற்றியதுபோல், தமிழரசுக் கட்சிக்கும் கல்தா கொடுத்திருப்பார்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர். அப்புறம் தமிழ் காங்கிரஸைப்போலவே தமிழரசுக் கட்சியும் தமிழ்ப் பொதுமக்களிடையே செல்வாக்கிழந்த ஒரு கட்சியாக்கப்பட்டிருக்கும்.

[illegible] இடங்கொடுக்காமல் நடந்துகொண்டது தமிழரசுக் கட்சியின் தீர்க்கமான அரசியல் ஞானத்தையே காட்டுகின்றது என்பது திரு டட்லியின் வெளி வேஷம் கலையும் இந்த நேரத்தில் புலனாகிறதல்லவா?

சிங்களக் கட்சிகளால்
மூதூர் தொகுதிக்கு வரும் ஆபத்து

—o—

எதிர்வரும் பொதுத் தேர்தலில்
தமிழ் பேசும் வாக்காளர்கள் கடமை

கணவன் ஒருவனின் கழுத்தை அறுக்க அவனது மனைவியைக் கைக்கூலியாகப் பிடித்தானும் கயவன் ஒருவன்.

அப்படித்தான் செய்கிறது இப்போது யு. என். பி.

தமிழ்பேசும் மக்களை நிர்மூலமாக்க, அவர்களில் நேர்மை தவறி, நாதியற்று, சொந்த இனத்தவர்களாலேயே சோதாப் பயல்கள் என்று காறி உமிழ்ந்து தள்ளி வைக்கப்பட்ட நிலையில் உள்ள சில தாசானுதாசர்களைத் தம் வசமாக்கிக் கொண்டு தேர்தல் களத்திலே குதித்து எக்காளமிடுகிறது யு. என். பி.

காங்கிரஸ் முகமூடியோடு வடக்கிலும் கிழக்கிலும் கச்சைகட்டி நிற்கும் எட்டப்பர்களையும், தனிப் பெருந் தலைவர்களையும் மட்டும் நாம் இங்கு குறிப்பிடவில்லை.

யு. என். பியின் மாயவலையில் சிக்கி கருத்திழந்து நிற்கும் அலிகளையும் மண்டியிடும் மாக்கான்களையும் சேர்த்தே சொல்லுகிறோம். ஆரம்பத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தமிழ்பேசும்மக்களின் தாயகத்தை அபகரிக்க விழைந்த சிங்கள அரசியலார் தமிழ்பேசும் மக்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும் பறித்து அவர்களை அரசியல்அனாதைகளாக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவது தெரிந்ததே.

இத்தகைய கொடுமைக்கு முதலில் இலக்கான தமிழ்ப் பிரதேசம் அம்பாறையாகும். அங்கு நடந்தது என்ன? கல்லோயாத் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்ட அம்பாறையில் கடந்த பொதுத்தேர்தலில் சிங்களவர் ஒருவரே வெற்றி பெற்றார். தமிழ் பேசும் மக்களின் பழம்பதியான அம்பாறையின் பிரதிநிதி ஒரு சிங்களவர். இது விந்தை!

இப்படியான விந்தைகள் பல செய்யத்தான் இப்போது சிங்களக் கட்சிகள்; குறிப்பாக யு. என். பியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், எம். ஈ. பியும் முயற்சித்து வருகின்றன.

தமிழ் பேசும் மக்களின் வருங்காலத் தலைநகராக மிளிரப்போகும் திருமலையில் முதலாவதாகக் கண்வைத்து அதற்கு அணித்தாயுள்ள மூதூரில் முழு மூச்சாகத் தமது கைவரிசையைக் காட்டத் துணிந்திருக்கின்றன சிங்களக் கட்சிகள். இங்கு கைக் கூலிகளாகக் கிடைத்துள்ளவர்கள், சொன்னால்

எஸ். கந்தசாமி

வெட்கம் இரண்டு முஸ்லிம்கள், ஒருவர் ஜனாப் முகமது அலி; மற்றவர் ஜனாப் ஏ. எல். ஏ. மஜீத்.

முன்னவர் யு. என். பியின் கையாளாகவும் பின்னவர் சுதந்திரக் கட்சியின் தாசராகவும் மூதூரில் போட்டியிடுகிறார்கள். இரு அங்கத்தவர் தொகுதி மூதூர். இருவரும் வென்றால் மூதூர் தமிழ்த் துவேஷமும், தமிழர் ஒழிப்பு மனப்பான்மையும்கொண்ட சிங்களக் கட்சிகளின் ஆதிக்கத்தின் கீழ் கிடந்து அல்லல்படும்.

சிங்களக்கட்சிகளின் சூழ்ச்சியை அறிய நிலைமையை நன்கு கவனிக்க வேண்டும். புள்ளி விவரங்களை உய்த்துணர வேண்டும்.

மூதூர்தொகுதி வாக்காளர் தொகை 29,680 ஆகும். இதில் தமிழர்தொகை 8,000. முஸ்லிம்கள் 12,800. சிங்களவர்கள் 8,880.

கடந்த மார்ச் தேர்தலில் போட்டியிட்டவர்கள் பெயரும் அவர்கள் சார்ந்த கட்சிகளின் பெயரும் அவர்களுக்குக் கிடைத்த வாக்குகளின் விவரமும் வருமாறு:—

திரு. டி. ஏகாம்பரம் (தமிழரசு)	10,685
ஜனாப். எம். ஈ. ஏச். முகமது அலி (சுயேச்சை)	10,680
,, ஏ. எல். ஏ. மஜீத் (சுயேச்சை)	7,540
திரு. பி. வி. விரக்கோன் (சுதந்திரக்கட்சி)	6,748
,, ஏ. எச். அல்விஸ் (யு. என். பி.)	1,488
,, பி. டி. டி. வி. பெரேரா (எம். ஈ. பி.)	1,165
,, ஜே. ஏ. பி. துரைநாயகம் (சுயேச்சை)	1,075
ஜனாப். ஏ. ஆர். ஏ. எம். அபூபக்கர் (பிரஜாதந்திர வாதக்கட்சி)	298
திரு. என். டி. பிரான்ஸிஸ் சேவியர் (சுயேச்சை)	295

இம்முறை இத்தொகுதியில் போட்டியிடுபவர்கள் விபரம் வருமாறு:-

திரு டி. ஏகாம்பரம் (தமிழரசு)

ஜனாப் எம். ஈ. எச். முகமது அலி (யு. என். பி.)

ஜனாப் ஏ. எல். ஏ. மஜீத் (சுதந்திரக் கட்சி)

திரு பி. டி. டி. வி. பெரேரா (எம். ஈ. பி.)

திரு எச். டி. எல். லீலா (சுயேச்சை)

இதிலிருந்து ஒரு விஷயம் தெரிகிறது அல்லவா? அதாவது யு. என். பி. யும் சுதந்திரக் கட்சியும் தாம் கடந்த தேர்தலில் அபேட்சகர்களாக நிறுத்தியவர்களை இம்முறை அபேட்சகர்களாக நிறுத்தவில்லை. கடந்த தேர்தலில் இரண்டாவது எம். பி. யாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாப் முகமது அலியை யு. என். பி. யும் மூன்றாவதாக வந்த ஜனாப் மஜீதை சுதந்திரக் கட்சியும் தமது அபேட்சகர்களாக நிறுத்தியிருக்கின்றன. அப்படி நிறுத்தியாவது எப்படியும் இத்தொகுதியைக் கைப்பற்றி விடுவோம் என்று மேற்படி கட்சியினர் கருதுகின்றனர். ஜனாப் முகது அலிக்கு முன்னர் கிடைத்த 10,680 வாக்குகளோடு முன்னாள் யு. என். பி. அபேட்சகர் திரு அல்விஸுக்கு கிடைத்த 1488 வாக்குகளும் முன்னாள் பிரஜாதந்திரக் கட்சி அபேட்சகருக்குக் கிடைத்த 298 வாக்குகளும் சேர்ந்துமொத்தம் 12,466 வாக்குகள் கிடைக்கலாம் என்பது யு. என். பி. யினர் நம்பிக்கை.

ஜனாப் ஏ. எல். ஏ. மஜீத்துக்கு முன்னர் கிடைத்த 7,540 வாக்குகளோடு முன்

(9-ம் பக்கம் பார்க்க)

'கைமுனு....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைதான் என்பது யாவரும் அறிந்ததே.

"தமிழர்களை வெட்டுங்கள், குத்துங்கள், கொல்லுங்கள்" என்று கட்டுரைகளும், கவிதைகளும் சியரட்டையில் பிரசுரிக்கப்பட்டதுண்டு. இதுபற்றிப் பிரதமர் பண்டாரநாயகா பாராளுமன்றத்தில் குறிப்பிட்டபோது "ஆஹா அப்படியா சமாச்சாரம்? எனக்கு ஒன்றும் தெரியாதே, இதோ சியரட்ட ஆசிரியர்மீது விசாரணை நடத்தி அவரைத் தண்டிக்க ஏற்பாடு செய்யப் போகிறேன்" என்று அறிக்கை வெளியிட்டார் உருத்திராட்சப் பூனையான திரு டட்லி சேனநாயகா. பின்பு ஏதுவும் அப்படி நடைபெற்றதாகத் தெரியவில்லை.

இப்போது இதே பத்திரிகைதான் மும்முரமாகக் குண்டர் படையைத்திரட்டி வருகின்றது துட்டகைமுனுவின் திருநாமத்துடன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூன் 5-ல் தமிழ்ப் பிரதேசத்தில் துக்கம்

தமிழ்ப் புத்தகக் . . .

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

காட்சிக்கு வைக்கப்பட்ட சிங்கள நூல்களின் மொத்தம் 1406. தமிழ் நூல்களின் மொத்தம் 126.

சாகித்திய மண்டலம் புத்தகக் காட்சி என்ற போர்வையில் தமிழை அவமானப் படுத்தும் இந்தப் பரிதாபக் காட்சியை ஏன் பார்க்க வந்தேன் என்று என்னை நானே நொந்துகொண்டேன். எனினும் தமிழர் ஒத்துழைப்பு நல்கவில்லையே என்று குரல் எழுப்பியவர் தமிழினத்தின் மானத்தை அடகுவைத்து வயிறு வளர்க்கும் கூட்டத்தைச் சேர்ந்தவர் என்பதை நன்கு அறியச் சந்தர்ப்பங் கிடைத்தது. புட்டிக்குள்ளே தமிழைப் புகுத்தி வளர்க்கும் இந்த வெள்ளைக்கோட்டியினர் அரசாங்கம் செய்யும் அநீதியை மறைப்பது பெருங்குற்றம். பொறுமையினால் மானமுள்ள தமிழர் மீது வேண்டுமென்றே பழி சுமத்திப் பொது மக்களை ஏமாற்றுவது மாபெருந் துரோகம்.

பாராது இருப்பது புத்திசாலித்தனம்

சாகித்திய மண்டலம் ஆடிய இந்த கேலிக் கூத்து, குழந்தை எழுத்தாளர் சங்கம் சிறப்பாக நடத்திய குழந்தைப் புத்தகக் காட்சியையும், தமிழ்மறைக் கழகம் அரும்பாடுபட்டு நடத்திய திருக்குறள் நூற்காட்சியையும் நினைவுக்குக் கொண்டு வந்தன.

சாகித்திய மண்டலத்தின் நூற்காட்சியைப் பார்க்கப் பத்துப் பதினைந்து தமிழர் தானும் போயிருப்பார்கள் என்று கூற முடியாது. தமிழையும் தமிழரையும் புறக்கணிக்கும் அரசாங்கத்தின் கொள்கைதான் இப்புத்தகக் காட்சியிலும் புலனாகிறது. எனவே காட்சியைப் போய்ப் பார்த்துத் தமிழை ஒதுக்குவதை நேரிலே கண்டு உள்ளங் கொதிக்காமல் தமிழ் மக்கள் ஒதுங்கியிருப்பது புத்திசாலித்தனமான செயலேயாகும்.

எனினும், இந்தப் புத்தகக் காட்சியை நடத்திய சாகித்திய மண்டலத்தினரும், அம் மண்டலத்தின் உறுப்பினராயிருந்து நெஞ்சில் உரமும் நிலைத்த தமிழார்வமுமின்றி கடமையாற்றும் தமிழர் சிலரும் இவ்வாறு தமிழை அவமானப் படுத்துவதை இனியாகுதல் நிறுத்திவிடுதல் அழகும் நீதியுமான செயலாகும்.

இழி செயல்

புத்தக டிரஸ்டில் தமிழார்வமுள்ள ஒரு தமிழன்தானும் இருந்தால் இந்த இழி செயல் நடந்திருக்காது. தமிழ் நூற் காட்சியை ஒழுங்கு செய்த தமிழர்கள் யார்? இவர்கள் யார் யாருடைய ஒத்துழைப்பையும் உதவியையும் நாடினார்கள். சாகித்திய மண்டலத்தில் பேருக்கிருந்து தூங்கிக் கொண்டிருக்கும் தமிழர் இக்காட்சி பற்றி என்ன செய்தார்கள்? இவர்களால் ஒன்றுஞ் செய்ய முடியாதெனில் ஏன் அந்த மண்டலத்தில் ஒட்டிக் கொண்டிருக்க வேண்டும்?

இப்படிச் செய்யலாமே

கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்பு விவேகானந்த சபை போன்ற சபைகளை இக்காட்சியினை ஒழுங்கு செய்தவர்கள் ஏன் கலந்து கொள்ளவில்லை? உத்தியோக மொழி இலாகாவிலுள்ள தமிழ் உத்தியோகத்தர்களின் உதவியைத் தானும் ஏன் நாடவில்லை?

பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர்களான திரு. செல்வநாயகம், கலாநிதி திரு. சதாசிவம் முதலியோருடைய நூல்களைத்தானும் பெறமுடியாதா? வித்துவான் சி. கணேசையர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை போன்ற அறிஞர்களுடைய நூல்கள் ஏன் இடம் பெறவில்லை!

வேண்டுகோள்

இலங்கை அரசாங்கத்துக்கும் கலாசார அலுவல் இலாகாவுக்கும் சாகித்திய மண்டலத்துக்கும் ஒரு பகிரங்க வேண்டுகோளைத் தமிழினத்தின் சார்பில் விடுகிறேன்.

"கல்வி, கலை, கலாசாரம் எனும் துறைகளிலாகுதல் தமிழரைச் சிறுமைப் படுத்தாதீர். இவற்றோடு தொடர்புடைய பணிகளைச் செம்மையாகச் செய்யத் தக்கவர்களைக் கொண்டு முறையாக நடத்த மனம் இல்லாவிடில் அவற்றைத் தொடங்காமல்விடுவது நீதியும் நேர்மையுமான செயலாகும்.

"சாகித்திய மண்டலத்தில் உறுப்பினராகவிருக்கும் தமிழ்ப் பெருமக்களே! அரசாங்கத்தின் மொழிக் கொள்கை சிறிதும் மாறாமலிருக்கும் வரையும் நீங்கள் எடுப்பார் கைப் பிள்ளைகளாகத் தானிருப்பீர்கள். தமிழருக்கும் தமிழுக்கும் நீதி வழங்கச் செய்ய வேண்டும் எனும் நெஞ்சுறுதி உங்களுக்கு இருந்தால் இத்தகைய கேலிக் கூத்துகளைப் பார்த்துக்கொண்டு எப்படி நீங்கள் ஒட்டிக் கொண்டிருக்க முடியும்?"

சாகித்திய மண்டலம் மட்டுமன்று, கலைக் கழகம் (Arts Council) கவின் கலைக் கல்லூரி (School of Fine Arts) என்பன எவ்வாறு தமிழை ஒதுக்குகின்றன என்பதைப் பின்னர் விளக்கியுரைப்பேன்.

எங்கும் கறுப்புக் கொடிகள்

கூட்டங்களில் உரிமைக் கோஷங்கள்

ஆலயங்களில் கூட்டுப் பிரார்த்தனை

கடந்த ஜூன் ஐந்தாந் தேதி தமிழ் பிரதேசம் எங்கும் துக்க தினமாக அனுஷ்டிக்கப்பட்டது. வீதிகள், வீட்டுவாசல்கள், வியாபார ஸ்தாபனங்கள் எங்கும் கறுப்புக் கொடிகள் ஏராளமாகப் பறக்க விடப்பட்டன. மக்கள் திரளாகக் கூடி உரிமை முழக்கம் செய்தார்கள். ஆலயங்களில் கூட்டுப் பிரார்த்தனைகள் நடைபெற்றன.

தமிழரசுத் தந்தை விடுத்த வேண்டுகோளைச் செவிமடுத்த தமிழ் பேசும் மக்கள் முந்திய ஆண்டுகளைப் போல இம்முறையும் எதுவித அசம்பாவிதமும் நேராதவண்ணம் வெகு அமைதியாகவும் ஆனால் காத்திரமாகவும் துக்க தின நிகழ்ச்சிகளில் பங்குகொண்டார்கள்.

1956 ஜூனில் கால்பேஸ் மைதானத்தில் தமிழரசுத் தொண்டர்கள் சத்தியாக்கிரகம் செய்தார்கள். பண்டாரநாயகா அரசாங்கம் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வந்ததை எதிர்த்தது. அப்போது அவர்கள் பொலீஸார் பார்த்துக் கொண்டு நிற்க, அடித்து உதைத்து பலவாறு துன்புறுத்தப்பட்டார்கள்.

தமிழ் பேசும் மக்கள் தமது உரிமைகளுக்காகப் போராடும்போதெல்லாம் அந்தக் கொடுமை நிகழ்ந்ததை நினைவுகொள்ளவேண்டும். அப்போதுதான் உத்வேகத்தோடு உரிமைக் கிளர்ச்சியில் ஈடுபட முடியும் என்பதற்காகவே ஜூன் 5 துக்க தினமாக அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று தமிழரசாரால் வற்புறுத்தப்பட்டு வருகிறது.

யாழ் மாநகர...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்கிழமை பிரேரணை நிறைவேற்றப்பட்டதுமே திரு துரையப்பா தமது பதவியை இழந்து மேயர் அந்தஸ்திலிருந்து நீக்கப்பட்டவரானார். இனி அவருக்கும் மேயர் பதவிக்கும் எதுவித சம்பந்தமும் கிடையாது என்பதே சட்ட வியாக்கியானமாகும்.

இதற்கிடையில் மாஜி மேயர் துரையப்பா மேல் கோர்ட்டில் வழக்குத் தொடரப்போவதாகவும், இன்னும் அவரே மேயராகத் தொடர்ந்து இருந்து வருகிறார் என்றும் அவருடைய ஆதரவாளர்கள் பிரசாரம் செய்து வருவதாகத் தெரிகிறது.

இந்தப் பிரசாரத்தில் எதுவித உண்மையும் இல்லை. மேயர் துரையப்பா பதவி நீக்கம் செய்யப்பட்டுவிட்டார் என்பதே உண்மையாகும். விரைவில் புதிய மேயர் தெரிவு நடைபெறும்.

சிங்களக் கட்சி....

(8ம் பக்கத் தொடர்ச்சி)

னாள் சுதந்திரக் கட்சி அபேட்சகர் திரு பி. பி. வீரக்கோனுக்கு கிடைத்த 6,748 வாக்குகளும் சேர்ந்து மொத்தம் 14,288 வாக்குகள் கிடைக்கலாம் என்பது சுதந்திரக் கட்சியினர் நம்பிக்கை.

அதாவது பின்வருமாறு வாக்குப் பதிவு நடைபெறலாம் என்று யு. என். பியும் சுதந்திரக் கட்சியும் எதிர்பார்க்கின்றன:-

ஜனாப் எம். ஈ. எச். முகமது அலி (யு. என். பி.)
10,680 + 1488 + 298 = 12,466
ஜனாப் ஏ. எல். ஏ. மஜீத் (சுதந்திரக் கட்சி)
7540 + 6748 = 14,288
திரு டி. ஏகாம்பரம் (தமிழரசு)
10,685 + 1075 + 295 = 12,055
திரு பி. டி. டி. வி. பெரேரா (எம். ஈ. பி.) 1,165
திரு எச். டி. எல். லீலா (சுயேச்சை) 1,000

யு. என். பி. யும் சுதந்திரக் கட்சியும் எதிர்பார்ப்பது போல் மேலே காட்டியபடி வாக்கு பதிவு நடந்தால் சுதந்திரக் கட்சி அபேட்சகரும் யு. என் பி. அபேட்சகரும் மூதூரின் முதலாவது, இரண்டாவது எம். பி.க்களாக வரலாம். அப்படி வந்தால் என்ன நடக்கும்? இம்முறை முஸ்லிம்களை அபேட்சகர்களாகப் போட்ட யு. என். பி. யும் சுதந்திரக் கட்சியும் இந்த முஸ்லிம்களை உதைத்துத் தள்ளிவிட்டு அடுத்த தேர்தலில் சிங்களவர்களை அபேட்சகர்களாக நிறுத்தி மூதூரைத் தமது பூரண ஆதிக்கத்தின்கீழ் கொண்டு வரலாம். அப்படி ஆகுமானால் என்ன சம்பவிக்கும். தமிழ் மொழி, தமிழ்—முஸ்லிம் கலாசாரம், பண்பாடு, அரசியல் உரிமை, வாழ்விடம் எல்லாமே பறிபோகும்.

அதனால் மூதூர் தொகுதி தமிழ், முஸ்லிம் வாக்காளப் பெருமக்கள் இம்முறை வெகு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அலிக்கும் மஜீதுக்கும் வாக்களித்தால் தமது தொகுதியை, உரிமையை சிங்கள கட்சிகளுக்கு அடவு வைத்தவர்கள் ஆவார்கள் அவர்கள். தமிழ் மொழியை, தமிழ் பேசும் மக்களின் உரிமையை, வாழ்விடத்தை பாதுகாப்பதைக் கடமையாகக்கொண்டது தமிழரசுக் கட்சி. மூதூர் தொகுதியில் அதன் அபேட்சகர் திரு டி. ஏகாம்பரம். அவருக்கு வாக்களிப்பது தான் மூதூர் தொகுதி வாக்காளப் பெருமக்கள் தமக்கும் [illegible] மகத்தான தொண்டு ஆகும்,

வாழ்வு ஒரு மாயம்!

எதிர்பாராதது நடந்து விடுகிறது. எனவே எதற்கும் எப்பொழுதும் பாதுகாப்பு அவசியம். கஷ்ட காலத்தில் கடன் வசதி—மரணகாலச் செலவுக்கு நிதி உதவி ஆகியவற்றோடு பரிபூரண ஆயுள் பாதுகாப்பை அளிப்பது த நொர்தேன் லைப் அன்ட் ஜெனறல் இன்ஸ்சூரன்ஸ் கம்பனி லிமிட்டெட். தமிழ் மக்களால் தமிழ் மக்களுக்காக தமிழ்ப் பகுதிகளை வளம்படுத்தித் தமிழர் தம் பொருளாதாரத்தை வளர்க்கும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு திறமையாக பலகாலம் நடைபெற்று வரும் ஒரேயொரு ஸ்தாபனம் இதுவே.

ஆயுள் பொலிசிகள் தமிழ் மொழியில் வழங்கப்படுகின்றன. இன்றே விபரங்களுக்கு எழுதுங்கள்.

எங்கும் ஏஜண்டுகளும், பிரதிநிதிகளும் தேவை.

The Northern Life & General Insurance Co., Ltd.
18 1/6, State Bank Building,
COLOMBO— 1.

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

சி. சி. சி. நெற்பயிர்

உரக்

கலவைகள்

உலகிலேயே மிகச் சிறந்தவை

கொழும்பு கொமேர்ஷல் கொம்பனி லிமிட்டெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

தபால் பெட்டி 33, கொழும்பு.

CCC 125

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"தியாகம்"

சிறுகதை — எழுதியவர்: செல்வி பா. பாலேஸ்வரி

எத்தனை மணித்தியாலம் அவள் வரவை எதிர்பார்த்து அந்த மாடி வீட்டின் கீழ்த்தளத்தில் கால் கடுக்க நின்றுகொண்டிருந்தானோ மூர்த்தி அவனுக்கே தெரியாது. அவனுக்கு அதைப்பற்றிய கவலையும் இருந்ததாகத் தெரியவில்லை. யுகம் யுகமாக வேண்டுமானாலும் அவன் அவளுக்காகக் காத்திருக்கத் தயார்தான்.

சுமார் ஐந்து மணித்தியாலங்களின் பின் அவன் சிந்தனையைக் கலைத்தது அந்தச் சாலையின் ஓரத்திலே 'கிறீச்' என்று வந்து நின்ற மோட்டார். அதில் இருந்து இறங்கினாள் ஒரு பெண். கிட்டத்தட்ட இருபதுக்கும் முப்பதிற்கும் இடையில் வயது மதிக்கலாம். அவனுடைய கண்களில் தோன்றிய ஆர்வம் அந்தப் பெண்ணைத்தான் அவன் இதுவரை காத்திருந்ததாகத் தெரிந்தது. அவளை அவன் மூன்றாண்டுகளின் இடைவெளியில் பார்க்கிறான். ஆனால் அவளில் எந்த வித மாற்றமுமே தெரியவில்லை. நிறம் மட்டும் சிறிது மங்கியது போன்ற ஒரு பிரமை. மற்றப்படி அவன் எதிர்பார்த்த எழில் ஓவியமாகவே இறங்கி வந்தாள் அவள். எந்தவிதமான அலங்காரமும் இல்லை. தலையை வாரி அலட்சியமாக முடிந்திருந்தாள். ஒரு சுற்றுக் கொண்டை. அவளுடைய இடுப்பில் இருப்பதால் இன்னும் அழகு பெற்று விளங்கியது அந்த ஒன்பது ரூபாய் டக்கா சாரி. கண்களைப் பறிப்பதற்கான 'மேக் அப்' எதுவுமின்றியிருந்தும் கொள்ளை அழகுடன் காட்சியளித்தாள் அவள். சாந்..... வெளியே கேட்ட ஒலியின் மிகுதி...தினி...தொண்டைக்குள்ளேயே பொறுத்துக் கொண்டது.

சாந்தினி அவனைக் காணவில்லையா...? 'இல்லை' கண்டும் கல்லாக, சிலையாக, இரும்பாகச் சமைந்தான்.

"எல்லோரும் போய்விட்டார்கள். நீங்கள் வேண்டுமானால் அம்மாவைப்பேட்டி காணலாம்" அவளுடைய வேலைக்காரப் பையன் அந்தச் சிலைக்கு உயிர் கொடுத்தான்.

அவனது உடலில் உஷ்ணம் நெருப்புப்போல பரவியது. உள்ளத்திலே பல சிந்தனையின் போராட்டம். அடுத்து என்ன நடக்குமோ என்று எண்ணிப் பார்க்கவே அவனது நெஞ்சம் துணுக்குற்றது.

ஒரு அசட்டுத் தைரியம் அவளை முன்னோக்கி நடக்க வைத்தது.

'டக்! டக்!' கதவிலே பட்டதும் படாததுமாக இரண்டு முறை தட்டினான்.

"உள்ளே வரலாம்!" குரல் தேனாக இனித்தது.

வந்தது யார்...? அவளது பார்வை சுழன்றது. ஆனால் கண்கள் இமைக்கவில்லை. ஒரு நிமிடந்தான்... "யார் மூர்த்தியா...? நான் எதிர்பார்க்கவேயில்லை. இப்படி அமருங்கள்". தன் எதிரில் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டாள்.

அந்த அறையில் சாவின் அமைதி குடிகொண்டது. இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என்று நிமிடங்கள் பத்து ஓடி மறைந்தன.

"சாந்தினி!" மௌனத்தைக் கிழித்தது அவனுடைய குரல்.

"ம்!" அவள் கொட்டிய "ம்!" அவனுக்கு விளங்கவில்லை.

சாந்தினி...! உரிமையோடு அழைத்தான்.

'.....'

சாந்தி! உன் மௌனம் என்னைக் கொல்கிறது.

'கிளுக்' என்று சிரித்தாள் அவள்...விந்தையாக இருக்கிறது உங்கள் பேச்சு. குழிதோண்டிப் புதைக்கப்பட்ட ஒரு பிணத்திற்கு அத்தனை சக்தி எங்கிருந்து வர முடியும்...? அவனை ஏளனமாகப் பார்த்து சொல்லம்பைத் கொடுத்தாள்.

"சாந்தி உன்னை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை!"

"நீங்கள் புரிந்துகொள்ளாமல் இருப்பதே நல்லது. இப்போது நீங்கள் வந்த காரணம்.....?"

"சாந்தி நீதானா பேசுகிறாய்? ஒருநாள் வரத் தவறியதற்காகக் காரணம் கேட்கும் நீ இன்று மூன்றாண்டுகளின் பின் உன்னைப் பார்க்க வந்ததற்குக் காரணம் வேண்டுமென்கிறாய். விசித்திரமான உலகம்!"

"உலகம் எப்படி இருந்தாலும் அதைப்பற்றிய கவலையே எனக்குக் கிடையாது. நீங்கள் வந்தது எதற்காக என்று கூறினால்...?"

"சாந்தி! நீ என்னைத் தவறாக எடை போட்டுவிட்டாய். ஒளிப்பும் மறைப்பும்...? காலமும் இடமும் இத்தனைகாலமாய் உன்னை என்னிடமிருந்து பிரித்து வைத்தபோதிலும் உன் நினைவு மட்டும் என்னைவிட்டு என்றுமே நீங்கியதில்லை. என் உதிரத்தோடு ஒன்றிவிட்ட உன் உருவத்தை என்றும் எவரும் அழிக்கவே முடியாது. எனக்கு இப்போது வேண்டியதெல்லாம் நீ..... நீதான் சாந்தி.....!"

"ஓ! என்மேல் உங்களுக்கு எத்தனை அன்பு...? இத்தனை துணிவு உங்களுக்கு எப்போ வந்ததாக்கும்...? சுயமாகத்தான் பேசுகிறீர்களா.....? இல்லை....."

"சாந்தி!" பல்லை நெருமியபடி அவள் கரங்கள் இரண்டையும் இறுகப்பற்றினான் மூர்த்தி.

அவள் அசையவில்லை. உதடுகள் மட்டும் அசைந்தன. "மூர்த்தி தீட்டுப்பட்டுவிடும்! நீங்கள் ஜாதியில் உயர்ந்தவர்....."

"என்னைப் பழிவாங்குகிறாய் சாந்தி! உன்னை நான் விடமாட்டேன். நீ எனக்கே உரியவள்"

"கைகளை விடுங்கள்! விரும்பியபோது தொட்டணைக்கவும் வெறுத்தபோது தூக்கியெறியவும் நான் என்ன கடைப்பொம்மை என்று நினைத்தீர்கள். "மரணப்படுக்கையிலே இருக்கிறாள் உன் காதலி. உன்னைப் பார்க்கத் துடிக்கிறாள். உடனே புறப்பட்டு வா" என்று என் ஆதரவிற்காக வந்த அயலார் உங்களுக்குச் செய்தி விடுத்தபோது இத்தனை அன்பையும் எங்கே குழிதோண்டிப் புதைத்திருந்தீர்கள்.....?"

"சரியான கேள்விதான் சாந்தி! எல்லாம் நான் உனக்கு ஆறுதலாகச் சொல்வேன். இப்போது உன் முடிவு என்ன?"

"என் மனம் குழம்பியிருக்கிறது மூர்த்தி. இந்நிலையில் என்னால் எதையுமேசொல்ல முடியாது. நாளைக் காலை பத்து மணிக்கு வாருங்கள். என் முடிவைக் கூறுவேன். அதுவரை தயவு செய்து என்னைத் தனியாக விடுங்கள்." பதிலுக்குக் காத்திராமல் எழுந்து சென்றவள் பக்கத்தறைக்குச் சென்று குமுறியழுதாள். கண்ணிர்த் தேக்கம் மள மள என்று காதுகளை நனைத்தன. கடந்தகால நிகழ்ச்சிகள் நீர்த்திரையில் நிழற்படம்போல் காட்சியளித்தன.

அவளுக்குத் தன்னைப்பற்றித் தெரிய வந்தது பதினே [illegible] அவளுக்கு வேப்பங்காயாக இருந்தது. அப்போது அவள் எஸ். எஸ். ஸி. இறுதி வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். மூர்த்தி அவளுடைய மாமன் மகன். இருவரும் ஒன்றாக விளையாடி வளர்ந்தவர்கள். மூர்த்திக்கு அவள்மேல் கொள்ளை அன்பு. காலப்போக்கில் இந்த அன்பு காதலாகப் பரிணமித்தது. சாந்தியின் பெற்றோருக்கு ஆட்சேபமிருக்கவில்லை. ஆனால் மூர்த்தியின் பெற்றோர் கடுமையாக எதிர்த்தார்கள். இது சாந்தினிக்குக்கூட ஓரளவு தெரியும். ஒருநாள் பாடசாலையில் இருந்து திரும்பி வந்தாள். வீடு களையிழந்து காணப்பட்டது. தகப்பன் ஒரு மூலையில் சோகமே உருவாகக் காட்சி தந்தார். தாய் மறு மூலையில் ஆழ்ந்த சிந்தனையில் லயித்திருந்தாள். சாந்தினி வந்ததை இருவரு மேகவனிக்கவில்லை. அவள் நேராகத் தன் அறைக்குள் சென்று புத்தகங்களை வைத்துவிட்டுத் தகப்பனாரின் அறைக்கு விரைந்தாள். அன்றைய பத்திரிகையைத் தேடினாள். பத்திரிகைக்குப் பதில் சிகப்புமையினால் வரையப்பட்ட கடிதம் ஒன்று தந்தையின் படுக்கையில் திறந்தபடி கிடந்தது. கடிதத்தைக் கையில் எடுத்த அவள் சிந்தனை ஒருகணம் தள்ளாடியது. பிறருக்கு வந்த கடிதம் படிப்பது பண்பில்லை என்பதை நன்கறிவாள். ஆனால் இன்று தாய் தந்தையர் இருக்கும் சோக நிலைக்கு இந்த சிகப்புக் கடிதமே காரணமாயிருந்தால்.....

அவள் யோசிக்கவில்லை. படித்தாள்.....

அப்போதுதான் தெரியும். தான் ஒரு வளர்ப்புப் பிள்ளை என்பது. அதுவும் தாயின் வயிற்றிலே அவமானச் சின்னமாக உதித்த ஜீவன். அத்தோடு ஜாதியில் ஹரிஜனப் பெண். சின்னையாவின் வீட்டில் தொட்டாட்டு வேலை செய்துகொண்டிருந்த ஒரு ஹரிஜனப் பெண் அவர்கள் வீட்டிலேயே பிரசவித்து குழந்தையின் அழுகுரல் கேட்குமுன்பே நிம்மதியாகக் கண்ணை மூடிவிட்டாள். பாவம் சின்னையா. அவளுடைய இனத்தவரையெல்லாம் விசாரித்ததில் பிள்ளையை ஏற்றுக்கொள்ள யாருமே முன்வராமற் போகவே பெரிய மனது கொண்ட சின்னையா அந்தக் குழந்தையை தன் சொந்தப் பெண்ணாக வளர்த்து வந்திருக்கிறார். அவருக்குப் பெருந்துணையாக இருந்தவள் அவர் மனைவி. வேறு குழந்தைகள் இல்லாததால் இருவருமே சாந்தினியிடம் உயிரை வைத்திருந்தார்கள். மூர்த்தி சின்னையாவின் தங்கை மகன். மூர்த்தி சாந்தினியின்மேல் அன்பாக இருப்பதை அறிந்த அவன் தாயார் ஒருநாள் சாந்தினியின் பிறப்பை தத்ரூபமாக வர்ணித்து அவளைக்கண்டிக்க வேண்டும் என்று தன் தமையன் சின்னையாவுக்கு எழுதிய கடிதம்தான் அது. அதன் பின்பும் அவளுக்கு அங்கேயிருக்க என்ன பைத்தியமா? தன்னை உயிரினும் மேலாக நேசித்த தன் வளர்ப்புத் தாய் தந்தையருக்கு தன்னால் மேலும் கவலை ஏற்படாமல் தன்னைத் தேட வேண்டாம் என்று மட்டும் ஒரு சிறு துண்டு எழுதி வைத்து அன்றே வீட்டை விட்டு வெளியேறினாள். ஏதாவது வேலை கிடைக்குமா என்று அலைந்தவள் கடைசியில் சமூக சேவையில் ஈடுபட்டாள். ஈழத்துச் சமூக சேவா மன்றத்தின் இணையற்ற தலைவியானாள். அதில் ஓரளவு நிம்மதியுங் கண்டாள். இருந்தும் அவளால் என்னமோ மூர்த்தியின் நினைவை மட்டும் மறக்க முடியவில்லை. கடிதங்கள் என்ற போர்வையில் அவர்கள் உறவு வளர்ந்தது. ஒருநாள் காய்ச்சல் என்று படுத்த சாந்தினி ஒரு மாதமாக எழுந்திருக்கவில்லை. சாதாரணமாக ஆரம்பித்த ஜுரம் 'டைபயிட்' என்ற பெயருடன் மாறியது. திடீர் என்று நிலைமை மோசமாகவே மூர்த்தியை கடைசியாக ஒரு முறை பார்க்க விரும்புவதாகச் செய்தி அனுப்பினாள். அதற்குப் பதில் இல்லை. அதற்குப் பின்னரும் பதில் வரவில்லை. அதற்குப் பின்பு தான் சமூக சேவையைத் தன் ஜீவநாடியாக்கினாள். மூர்த்தியிடம் சாந்தினிக்கு வெறுப்புத்தான். அவன் நினைவைக்கூட வெறுத்தாள். என்றாலும் வெறுப்பு வேறு. அவளால் அவனை மறக்க முடியவில்லை.

ஏதோ சத்தங் கேட்டுத் திரும்பினாள். பக்கத்தில் இருந்த விளக்கைச் சுற்றி விட்டில் பூச்சி ஒன்று சிறகடித்துப் பறந்துகொண்டிருந்தது. தன் உயிரையே குடிக்கும் அந்த வெளிச்சம் அதற்கு அத்தனை இன்பத்தை அளிக்கிறது. அவளுடைய சிந்தனை கலைந்தது.

அவள் யோசித்து ஒரு முடிவுக்கு வந்திருந்தாள். மூர்த்தி நல்லவர்.....அது அறிந்ததுதான். பாவம்! ஒரு பக்கம் பெற்றோர்...மறுபக்கம் காதலி... எதிர்புறம் சமூகம்! இவற்றில் எதைத் தள்ள முடியும்? அவளுக்கே விடை காண முடியாத பிரச்னையாக இருந்தது.

மூர்த்தியை அவள் இன்னும் விரும்புகிறாள். அதை மறுக்க முடியாது. ஆனால் இடையில் பல பிரச்னைகள். எப்படியோ தன் முடிவை மூர்த்திக்கு எடுத்துக் கூற நாளைய பொழுதை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள்.

பேயறைந்தவன் போல் முன் நெற்றியைத் தன் கரங்களிற் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்தான் மூர்த்தி. கொலைக் குற்றம் செய்தவன் தனக்கு அளிக்கப்படும் தீர்ப்பை எதிர்நோக்கி இருப்பது போல ஏங்கும் இதயத்துடன் அடுத்த நாளைய முடிவுக்காகக் காத்திருந்தான் மூர்த்தி. அவன் சிந்தித்தான். அவன் செய்த குற்றந்தான் என்ன? அவன அவளை வெறுத்தானா.....? கிடையாது. தனக்கு வந்த தந்தினி இடையில் தாய் தந்தையரால் அபகரிக்கப்பட்டுப் பல மாதங்களின் பின்னர்தான் தற்செயலாக தன் கைவசம் வந்தது என்பதைச்சாந்தினி அறிவாளா.....? 'இல்லை' சொன்னாலும் நம்புவாளா.....? தந்தியைப் படித்த பின்பு அவளைப் பார்க்க அவன் பட்டபாடு. பெற்றோரிடம் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டது. இடையில் ஏதோ சுற்றிக் கட்டி வந்த பத்திரிகைத்தாளில் சாந்தினியின் படம் கண்டு அதைப் பார்த்து அதன் அடியில் தரப்பட்டிருந்த செய்தி மூலம் அவள் இந்த முகவரியில் இருப்பதாக அறிந்து ஓடோடி வந்த கதை எல்லாம் அவளிடம் எப்படிக் கூறுவது. நம்பவே மாட்டாள். நினைவுகளின் மத்தியில் கண்ணயர்ந்த மூர்த்தி கண்விழித்தபோது அடுத்த நாள் உதயமாகி விட்டதை உணர்ந்து அவசரமாகப் படுக்கையை விட்டு எழுந்தான். தன் காலைக்கடன்களையெல்லாம் முடித்துக் கொண்டு சாந்தினியின் வீட்டை நோக்கி நடந்தான்.

அங்கே அவனுக்கு முன்னதாகவே சாந்தினி அவன் வரு

(15ம் பக்கம் பார்க்க)

★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுண் பாவாடை கிமோனா முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலு முன்ன புடைவை வியாபாரிகளிடம்

கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன் மால்ஸ்,

26, கெய்ஸர் வீதி, கொழும்பு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளொன்றுக்கு நாலாயிரம் கற்கள்—கூலி ரூபா ஐந்து

வயிற்றுக்கு 'கஞ்சாவது' கிடைக்கிறதே அந்த அளவில் திருப்திதான்

செங்கல் அறுக்கும் தொழிலாளி துரையப்பா பேட்டி

[பேட்டி கண்டவர்: "மாலதி"]

வாயில்லாப் பிராணிகள் களியை உழக்க மனிதப் பிராணி சூத்ரதாரியாய் இருக்கிறது.

கனல் தெறிக்கும் வெய்யில் அப்போது இல்லை. மஞ்சள் வெய்யில் மெல்லிய உறைப்போடு காய்ந்து கொண்டிருந்தது.

'கொடுவாமடுப் பாலத்திலே இன்னும் நாங்கள் கால்வைக்கவில்லை. லொறிகளும் பாரக் கரத்தைகளும் அதை அடைத்துக்கொண்டிருந்தன.

இதோ அந்தப் பாலத்திலே நிற்கிறோம். கண்ணுக்கெட்டிய தூரம் வரை கல்வாடிகள்! இந்த வாடிகளில் எந்த வாடிக்கு நாம் செல்வது?

சிந்திக்க நேரமளிக்கவில்லை—கால்கள் நடந்து கொண்டிருக்கின்றன. எங்கே? இதோ முதன் முதலில் தெரிகிறதே கல்வாடி, அங்குதான் செல்கிறோம்.

எலும்பும் தோலுமாகிய அந்தக் கொம்பு மாடுகள் எம்மைக் கண்டு மிரண்டு பார்க்கிறதா பார்வை! அப்பப்பா! திரும்பிப் போய்விடலாமே என்று கால்கள் தவிக்கின்றன.

அந்த வாயில்லாப் பிராணிகளின் முதுகுத் தோலை உரித்து பூசைகொடுக்கும் இன்னுமொரு பிராணி—பிராணியா? தலைப்பாகை கூடத் தெரிகிறதே! கண்கள் பளபளக்கின்றன! ஆமாம் அது மனிதப் பிராணி!

அந்த மனிதப் பிராணி வாஞ்சையோடு நோக்குகிறது.



நாளொன்றுக்கு 4,000 கற்களை அறுத்துக் குவிப்பேன் என்கிறார் தொழிலாளி துரையப்பா.

வெள்ளை வெளேரென்ற தூய ஆடை, தோளிலே தொங்கும் புகைப்படக் கருவிவேறு—அந்தக் கண்களுக்கு வியப்புத் தாங்கவில்லை!

மாடுகளுக்கு அச்சம் தீர்ந்துவிட்டது. அவை தம்பாட்டுக்கு களியிலே கால் புதைய நடைபோடுகின்றன. ஆனால் இந்த மனிதப் புழுக்கள்?

களிசுமக்கும் கூலியாள் முதல், கல் தூக்கும் சிறுவர்கள் வரை நிமிர்ந்துதான் பார்க்கிறார்கள். அதோ அந்தச் சிறிய புரையின் கீழ் (புரை என்பது சிறுபந்தர்) நிற்கும் மனிதர் கூட நிமிர்ந்துதான் பார்க்கிறார். என்னதான் புதுமை எம்மிடம் கண்டார்களோ இவர்கள்?

ஆமாம் நான் அவரைத்தான் நெருங்குகிறேன். அவரைச் சும்மா விடலாமா? ஏதேதோ பேசி வைக்கிறேன்.

"கண் என்னைப் பார்த்தாலும் கையால் சுருத்தாகத்தானே வேலை நடத்துகிறது?" என்கிறேன் நான். ஆளுக்குப் பெருமை பிடிபடவில்லை நிறைவோடு புன்னகைக்கிறார். "முதலாளி இங்கேயில்லையே! நீங்கள் யாரைப் பார்க்க வேண்டும்?" என்கிறார்

"வேறு யாரையுமல்ல, உங்களைத்தான் பார்க்க வந்தேன்" என்றேன் நான். ஆளுக்கு வியப்பாகத்தானிருக்கிறது "ஏன் ஆச்சரியப்படுகிறீர்கள்? உங்களை—உங்கள் தொழிலை அது செய்யப்படும் முறையையெல்லாம் பார்க்க எனக்கு நிறைய ஆசை. அதுமட்டுமா? சுதந்திரன் வாசகர்கள் இதையெல்லாம் அறியத் துடியாய்த் துடிக்கிறார்கள்" என்றேன் நான்.

அவருக்கு முகம் மலர்கிறது. அந்த மலர்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டு ஆளைப் பேசவைத்து விடுகிறேன் இதோ கேளுங்கள்.

"என்னைப் பற்றிய விபரங்கள் தானே முதலில் உங்களுக்கு வேண்டும்? இதோ சொல்லி விடுகிறேன்.

"பெயர்: நெல்லியர் துரையப்பா.

"வயது: முப்பத்தைந்து.

"இடம்: ஆறுமுகத்தான் குடியிருப்பு.

"பிள்ளைகள்: நான்கு. இரு பெண்கள் இரு ஆண்கள். எனது மனைவியோடு குடும்பத்திலே ஆறுபேர்கள். எனக்குப் படிப்பு வாசனை அதிகமில்லை. நாலாம் வகுப்போடு சரி.

"சிறுவயதிலிருந்தே கமத்தொழில்தான் செய்து வந்தேன். முதலாளிமார்களிடம் கூலிக்குத்தான் உழைத்தேன். அதைவிட்டு, இந்தக் கல்லறுக்கும் தொழிலில் நான் ஈடுபட்டு சுமார் பத்து வருடங்கள் நகர்ந்து விட்டன.

"இங்கே நாளொன்றுக்கு ரூபா 5/- கூலி கிடைக்கிறது. கிழமை தோறும் ரூபா 20/- தருகிறார்கள். அதிலே நாங்கள் சாமான் கட்ட ரூபா 10/- போனால் ரூபா 10- வீட்டுக்குக் கொடுக்கிறோம். எங்களை இவர்கள் வேலைக்கு அழைக்கும்போது முன்பணமாக ரூபா 100/- தருகிறார்கள்.

"தாளொன்றுக்கு எனது குடும்பத்திற்கு கடைசி ஐந்து ரூபாயாவது வேண்டும். இந்தச் சம்பளத்திலே தான் குடும்பத்தின் சீவியம் நடக்கிறது.

"இங்கே மாசி மாதத்திலிருந்து புரட்டாதிவரைதான் கற்சூளைகள் வைக்க முடியும். வேறு நாட்களில் வேறு வேலைக்குப் போகவேண்டும். தொழில் இல்லாமலே வீட்டில் இருப்பதுமுண்டு. அந்த நாட்களில் பட்டகடன்களைக் கூட இந்தக் கூலிப் பணத்திலிருந்துதான் கொடுக்க வேண்டியிருக்கிறது.

"பொதுவாகக் கூறப் போனால் கஷ்டமான வாழ்வுதான். வயிற்றுக்குக் கஞ்சாவது கிடைக்கிறதே என்ற அளவில் திருப்தியடைகிறோம்.

"நாளொன்றுக்கு என்னால் சுமார் 4000 கற்களை அறுக்கமுடியும். இதற்கு, களி தயாராக இருக்க வேண்டும். அளவாக அதை உருட்டி ஒருவர் தரவேண்டும். இவ்வித வசதிகள் இருந்தால் மாத்திரமே இது சாத்தியமாகும்.

"கல்வாடி ஒன்று அமைப்பதாயிருந்தால் முதலில் நல்ல களியுள்ள இடத்தைத் தெரிந்து, நிலத்தைத் துப்புரவாக்கி, வாடியை அமைப்போம். இதன் பின் எருமை மாடுகளைக் கொண்டு, குறிப்பிட்ட இடத்தில் அள்ளிக் கொட்டிய களியை, மிதிப்போம். களியின் பசைத் தன்மைக்குத் தக்கபடி 'தூரி வை' போடப்படும். இதற்குமுதலே சம தரையில், கல் லடுக்க வரிகளை அமைப்போம். இதன் பின் காளவாயை அல்லது சூளையைக் கட்டி முடிப்போம். இத்தனையும் ஆனால் கல் அறுக்கும் வேலையை ஆரம்பிக்க வேண்டியதுதான்.

"அறுத்த கற்கள் சிறு சிறு பலகைகளில் வைக்கப்படும். அவற்றை இதோ, இந்தச் சிறுவர்கள் தூக்கிச் சென்று வரிசையாக அடுக்கிச் செல்வர். ஒரு வரிசையிலே நாள்தோறும் ஒவ்வொரு படை மாத்திரமே அடுக்கப்படும். இந்த வரிசை ஒவ்வொன்றிலும் ஒரு படையில் 500 கற்கள் அடுக்கலாம்.

"இப்படி ஒரு சூளைக்குரிய 40,000 கற்களும் அறுத்து எடுக்கப்படும். சுமார் மூன்று வாரத்தில் இவை நன்றாகக் காய்ந்துவிடும். அதன் பின் சூளையிலே அடுக்கி நெருப்பு வைக்க வேண்டியதுதான். இன்று சாயங்காலம் நெருப்புவைத்தால் நாளை இதே வேளை வரை தொடர்ந்து விறகு போடப்படும். அதன் பின் மூடிவிடவேண்டும். எட்டு நாட்களில் செங்கற்களைப் பிரித்து லொறிகளில் ஏற்ற வேண்டியதுதான்....."

இப்படியே திரு. துரையப்பா சொல்லிக்கொண்டே போகிறார். விட்டுவைத்தால் எங்கெங்கு போய் நிற்கிறாரோ! நான் குறுக்கிடுகிறேன்.

"செங்கல் என்ன விலைக்குக் கொடுக்கிறீர்கள்?"

(12-ம் பக்கம் பார்க்க)



கற் சூளைக்கு நெருப்பு வைத்தாகிவிட்டது. விறகு போடப்படுகிறது.

ஒரே தடவையில் ஆறு கற்களைச் சுமக்கும் இந்தப் பையன்களுக்குக் கூலி ரூபா 3/-.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நாடக விமர்சனங்கள்

பதியூர் ராணி அழாதே கண்ணே

திரு கே. பாலச்சந்திரன் அளித்த தமிழ் நாடக விழாவின் முற்கூறு முடிவடைந்துவிட்டது. அத்தோடு ஒரு விஷயமும் வெளிச்சமாகிவிட்டது. அதாவது ஈழத்துப் பயில் முறை நடிகர்களில் சிலர் தமிழகத்து தொழில் முறை நடிகர்களைக்கூடத் தூக்கி எறியக்கூடியவர்கள் என்ற உண்மை தெளிவாகிவிட்டது.

நல்ல நடிப்பு

"அழாதே கண்ணே" என்ற பெயரில் நஸ்ருதீன் எழுதிய நாடகத்தை 'சானு' தயாரித்து கடந்த 8ந் தேதி லயனல் வென்ட் தியேட்டரில் மோத்தா தம்பதிகள் தலைமையில் மேடையேற்றினார். அதில் வீரவாகுவாக நடித்த ரொஸாரியோ பீரிஸ் தாம் சாதாரண பயில்முறை நடிகர் அல்லர்; கைதேர்ந்த தொழில் முறை நடிகர் என்று நிரூபித்தார். திரைக்குப் பின்னால் தவறுதலாக டெலிபோன் மணி றிசீவரைத் தூக்கிய பின்னரும் ஓயாமல் அடிக்கப்பட்டதைச் சமாளிக்க, "யாரடா இவங்க வாசல் மணியைச் சும்மா அடிச்சிக்கிட்டு இருக்காங்க" என்று சமயோசிதமாகக் கூறியது ஒன்று. மற்றது, மேடையில் அகற்றப்படாமல் இருந்த வாழைப்பழத் தோலை அப்புறப்படுத்துவதற்கு அவர் வேலைக்கார ராமையாவை மேடைக்கழைத்து வைதது. இந்த இரண்டுமே போதுமே அவரது திறமையை எடுத்துக்காட்ட! மற்றப்படி அவருடைய பேச்சுப் பாணி, முகபாவம் எல்லாம் எதற்கு? அவருக்கு மட்டும் ஒரு விஷயத்தை இந்தச் சந்தர்ப்பத்துல் சொல்லி வைக்க வேண்டும். 'விஷயம்' என்பதை "விசேஷம்" என்றும் 'இயந்திர சாதனம்' என்பதை "இயந்திர ஸ்தானம்" என்றும் சொல்வதை விட்டொழிக்க வேண்டும்.

சபாஷ் சோதிநாதன்

அதே நாடகத்தில் வாய் திறக்காமல் சிறிது நேரமே மேடையில் தோன்றி நடித்த திரு ஆர். எஸ். சோதிநாதன் பார்த்தவர்களைப் பிரமிக்க வைத்தார். நாடக பாணியில் சொல்வதானால் அவருடைய நடிப்பு "ஏ வண்". தோற்றம், முகபாவம், வேட்டிக் கட்டு எல்லாம் அவரை அசல் ரௌடியாகக் காட்டின. தமது பாகத்தை கச்சிதமாகச் செய்தார். எந்தக் கைதேர்ந்த தொழில் முறை நடிகர்களுக்கும் தாம் இளைத்தவர் அல்லர் என்பதை அவர் ஐயந்திரிபுக்கு இடமின்றி எடுத்துக்காட்டினார். சபாஷ் சோதிநாதன்.

நாடக விமர்சனம்

இந்த நாடகத்தில நஸ்ருதீன், ஆதித்தன், சோமசுந்தரம், ஆனந்தி சுப்பிரமணியம் ஆகியோரும் நடித்தார்கள். ஆனந்தியும் நஸ்ருதீனும் காதலர்களாக அளவளாவிய சில கட்டங்கள் அருவருப்பையும் அலுப்பையும் தந்தபோதிலும் மற்றக் கட்டங்கள் பரவாயில்லை.

விறுவிறுப்பு இல்லை

நாடகம் சிறியது தான். என்றாலும் அதற்கேற்றாற் போல வேகமாக விறுவிறுப்பாக அது செல்லவில்லை. அது ஒன்றுதான் கறை. மற்றப்படி கதையில் குறை இல்லை; உரையாடலில் இறுக்கம் இல்லை; பலரின் மேக்கப் மோசமில்லை; (உதாரணத்துக்கு சொல்வதானால் ஆனந்தி தோன்றிய நாலைந்து கட்டங்களில் நாலைந்து நல்ல சேலை சட்டைகளைக் கட்டினாரே!) காட்சி அமைப்பு தேவைக்கேற்ப இருந்தது.

பதியூர் ராணி

திரு பாலச்சந்திரன் அளித்த நாடக விழாவில் 4ம், 5ம் தேதிகளில் "பதியூர் ராணி" என்ற நாடகம் இடம்பெற்றது. இதன் ஆங்கில மூல ஆசிரியர் ஒஸ்கார் வைல்ட். திரு ரத்தினம் வானொலி நாடகமாக்கினார். பின்னர் "சானு" மேடைக்காக்கினார். அவரே தயாரித்தும் அரங்கேற்றினார்.

முருக்கஞ் செத்தல் இருக்கிறதே அது எவ்வளவு பெரியதாக இருந்தாலும் பொடிப்பயல்கூட அதைத் தூக்கித் தாம் ஏதோ சாண்டோ பீட் காட்டுவதாகப் பாசாங்கு செய்யலாம். அதற்கு முருக்கஞ் செத்தல் அசலான பொருள் தான். அதைக் கொண்டு போய் சூட்டுக் கட்டையாகப் பாவித்தால் என்ன ஆகும்? கட்டை படார் என்று முறிந்து போகும். மாடுகள் பழக்கமுள்ள மாடுகளானால் கட்டை முறிந்த பின்னரும் பழக்கத்தைப் பொறுத்து போரை வளைந்து வளைந்து மிதிக்கத்தான் செய்யும்.

கதையம்சம்

அதே வேலைதான் "பதியூர் ராணி"யில் நடந்தது. படித்து அனுபவிக்க வேண்டிய கதை மேடையில் நடிக்கத் தேர்ந்து எடுக்கப்பட்டதால் அது பாதியில் போய் விடவே நடிகர்கள் எப்படியோ சற்றி வளைத்து—அதாவது நடித்து—நாடகத்தை ஒருபடியாக முடித்தார்கள்.

படித்து அனுபவிக்கும் நாடகம் படிப்பவர் உள்ளத்தில் கிளர்ச்சியை ஏற்படுத்துமானால் அது போதும். ஆனால் மேடை நாடகம் அப்படியல்ல. பார்ப்பவர் கருத்தை ஈர்த்து மனதில் மலர்ச்சி ஏற்படுத்த வேண்டும். இதைவேறு விதமாகச் சொல்வதானால் மேடையில் நடிக்கப்படும் நாடகத்தில் நிகழ்ச்சிகளும் (Incidents) செயல்பாடுகளும் (Actions) அதிகமாக இருக்க வேண்டும். உள நெகிழ்ச்சி அம்சம் (Emotional Aspect) எவ்வளவுதான் இருந்தாலும் நாடகம் எடுபடாது.

"பதியூர் ராணி"யில் இருந்தது அதுதான். கதையம்சம் கெட்டியாக இருந்திருக்கு[illegible] தயாரிப்பாளர் "சானு" எடுத்துக் கொண்ட முயற்சிக்கும் அது ஒரு ஒப்பற்ற நாடகமாகவே விளங்கியிருக்கும். சந்தேகம் இல்லை.

தவிர்க்க வேண்டியவை

கட்டாரியை வைத்துக் கொண்டு வாளுக்கு உரிய வசனங்களைப் பொழிவது, புயலும் முழக்கமும் ஒலிக்கச் சத்தம் கொடுக்காமலே இரண்டையும் பற்றிப் பிரஸ்தாபிப்பது, கனிவாகப் பேச வேண்டிய ஆரம்பக் காதல் கட்டத்தில் குமுறுவது, நீதி மன்ற விசாரணையில் கண்டிப்பை காற்றில் பறக்கவிட்டு அதைக் கேலிக் கூத்தாக்குவது எல்லாம் கூடாது. அவை நாடகத்துக்கு ஊறு செய்யும்.

நடிப்பு

நடிப்பைப் பொறுத்தவரையில் ஜபார், காசிம், பொன்னுத்துரை, சோதிநாதன், சரவணமுத்து (ரேடியோ மாமா) விசாலாட்சி குகதாசன் ஆகியோர் எந்தக் கட்டத்திலும் சோடை போகவில்லை. அவர்கள் நல்ல நடிகர்கள் என்பதில் சிறிதும் தவறில்லை. குறிப்பாகத் திரு பொன்னுத்துரையின் நடிப்பை நாம் பார்த்தது இதுவே முதல் தடவை. கிழமன்னராக வந்து அவர் போட்ட போடு, அடடா என்ன போடு! பேஷ்...பேஷ்...!

பிற அம்சங்கள்

இந் நாடகத்தில் குறிப்பாக மன்னர், மலையமான் பிரபு, நீதிபதி, ஆகியோரின் மேக்கப் அற்புதமாக இருந்தது. செட்டிங்குகள் பொருத்தமாக அமைந்தன. ஒலி, ஒளி அமைப்பு எல்லாம் சரிதான்.

ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோலத் திரு. பாலச்சந்திரனின் நாடகவிழா முயற்சி நடிப்புக்கு நல்லவர்களும் தயாரிப்புக்குத் தகுதிவாய்ந்தவர்களும் நம்மிடையே இருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்ட நன்கு உதவியிருக்கிறது. இது போதும், நாடக விழா வெற்றியா, தோல்வியா? அது இங்கு தேவையில்லை.

—கே. கே. ஆர்.

லண்டன் கந்தையா

"லண்டன் கந்தையா" என்ற நகைச்சுவை நாடகம் எதிர்வரும் 18ம், 19ந் தேதிகளில் கொழும்பு ரோயல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

"சானு" தயாரித்த இந் நாடகத்தில் அவரே லண்டன் கந்தையாவாக நடிக்கிறார். திரு கே. பாலச்சந்திரன் அளிக்கும் தமிழ் நாடக விழாவில் மூன்றாவது நாடகமாக இது நடைபெறுகிறது.

செக்கிழுத்த சிதம்பரனார்

டி. கே. எஸ். சகோதரர்கள் நாடகம்

பிரபல டி. கே. எஸ். சகோதரர்கள் 'செக்கிழுத்த சிதம்பரனார்' என்ற புதிய நாடகத்தை வருகிற ஜூலை முதல் நாள் அரங்கேற்றப் போகிறார்கள்.

இந்த நாடகம் கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் பிள்ளையின் தேசிய எழுச்சிகளைக் கொண்டு சித்திரித்தது ஆகும்.

இதில் வ. உ. சியாக டி. கே. பகவதியும், சுப்பிரமணிய சிவாவாக டி. கே. சண்முகமும் நடிக்கிறார்கள். மற்றும் டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகக் குழுவைச் சேர்ந்த நடிகர்களும் நடிகைகளும் இதில் பங்கு பெறுகிறார்கள்.

இந்த நாடகத்தை அரங்கேற்றும் பெருமையை முதல் முதலாகக் திருநெல்வேலி பொருட்காட்சி பெறப் போகிறது!

இதே சிதம்பரனார் வாழ்க்கையை பத்மினி பிக்சர்ஸ் திரைபடமாக்கப் போவதாக அறிவித்திருக்கிறார்கள்.

கண்டி....

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

களிடமிருந்து இந்திய மன்னர்கள் பலருக்கும் தமிழிலேயே கடிதங்கள் எழுதப்பட்டன. பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கும் கண்டிய இராச்சியத்திற்கு மிடையேயும் தமிழிலேயே கடிதப் போக்குவரத்துகள் நடைபெற்று வந்துள்ளன. இவற்றை இன்றும் நூரளையிலுள்ள தொல்கலைப் பொருட் கண்காட்சிச் சாலையில் காணலாம்.

இவற்றில் பலவற்றை முதலியார் செ. இராசநாயகம் அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அம்மொழிபெயர்ப்பு தமிழ்க் கடிதங்களுடன் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

கண்டியை பிரிட்டிஷ் சாம்ராச்சியத்துடன் இணைக்கும் ஒப்பந்தத்திலும் பல அமைச்சர்கள் (அதிகாரிகள்) தமிழில் கையெழுத்திட்டுள்ளதைக் கண்டிப் பொருட்காட்சிச் சாலையில் இன்றும் காணலாம்.

நாயக்க மன்னர்களின் ஆட்சி இலங்கையிலிருந்து மறைந்துவிட்ட போதிலும், அவர்களின் நினைவுச் சின்னங்கள் என்றென்றும் நின்று நிலவிக்கொண்டிருப்பனவாகும்.

—"தமிழின்பம்"

நமக்குள்ளே இருப்பது

"நமக்குள்ளே இருப்பது" என்ற நாடகம் எதிர்வரும் 18ந் தேதி கொழும்பு லயனல் வென்ட் தியேட்டரில் நடைபெறவிருக்கிறது.

இராம் சுந்தரின் தயாரிப்பு இது. அவரோடுகூட ஜோர்ஜ் சந்திரசேகரன், செல்வி யோகதேவி, எஸ். விமலநாதன், ரவி சொக்கநாதன் முதலானோர் நடிக்கிறார்கள்.

நாளொன்றுக்கு...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

"ரூபா 35/- — 40/- வரை விலையாகிறது."

"இதோ மாடடிக்கிறாரே! இவருக்கு என்ன கூலி?"

"இவருக்கு ஒரே வேலைதான். நான்கு ரூபாய் கூலி. களி சுமப்பவர்களுக்கும் அதே கூலிதான். கல் தூக்கி அடுக்கும் பையன்களுக்கு மூன்று ரூபாய் தருகிறார்கள்."

"சரி மிகவும் சந்தோஷம். மாடமாளிகைகளைக் காணும் போதெல்லாம் உங்களைப் போன்ற தொழிலாளரின் வியர்வைத் துளிகள் தாம் கண் முன்னே தெரிகின்றன. உங்கள் தொழிலின் உயர்வுக்கு அந்த மாடமாளிகைகளே சாட்சி. வாசகர்கள் சார்பிலே எனது நன்றி" எனக் கூறி விடை பெற்றேன்.

கனவல்ல!

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

"தேர்தல் முடிவுகள் வருமாறு:—தமிழரசுக் கட்சியினர், தாம் போட்டியிட்ட எல்லாத் தொகுதியிலுமே பிரமிக்கத்தக்க வெற்றியீட்டியுள்ளார்கள்....."

ஆமாம்! வானொலிப் பெட்டிதான் அறிவிக்கிறது. நான் முன்பு கண்டது கனவா? இல்லவே இல்லை!!

சுதந்திரன் இல்லையேல் கபீட்சமில்லை



திறமாக நீர்ப்பாய்ச்சுவதற்கு குகந்த நம்பிக்கைவாய்ந்த பம்ப்

விங்கெட்

நிர்மாண இயந்திரங்கள் உற்பத்திசெய்யும் உலகப்பிரசித்திபெற்ற மேல் ஸெர்ஸ் விங்கெட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட இந்த அடக்கமான, உறுதிவாய்ந்த தண்ணீர் பம்ப்கள், அதிககாலம் மிகத்திறமான சேவையைத் தருகின்றன.

இவற்றின் பராமரிப்புச் செலவு மிகமிகக் குறைவு. மிகப் பொட்டா போட்டி விலைகளில் கிடைக்கும். வில்லியர்ஸ் 4 ஸ்ரோக் பெற்றோல்/மண்ணெண்ணெய் என்ஜின்கள் பாவனைக்குச் சிக்கனமானவை. எம்மிடம் அவற்றில் பலரக உடைவுறுப்புகள் உள்ளன. ஹோஸ் குழாய்களும், கை உருளைகளும் கிடைக்கும்.

உபவிநியோகஸ்தர்கள்:

ராஜனாதன் அன் கம்பெனி,
244, கே. கே. எஸ். ரோடு,
யாழ்ப்பாணம்.

மூழு விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்:

தி கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)

தபாற்பெட்டி 88. கொழும்பு.
காட்சி அறை: ஜெனரல் மேக்ஸ்ரோட்
போன்: 78802.

உயர்ந்த சேவை

1½" மொடல்-மணித்தியாலம் 1500-6000 கலன் இறைக்கிறது.
2" மொடல்-மணித்தியாலம் 1680-11000 கலன் இறைக்கிறது.
3" மொடல்-மணித்தியாலம் 4800-16800 கலன் இறைக்கிறது.
டிலிவரிக்கேற்ப ஹெட்டும், சக்ஷன் லிவ்ட்டும் தேவை
ஆகக் கூடுதல் குழு ஹெட் 70 அடி
ஆகக் கூடுதல் சக்ஷன் லிவ்ட் 25 அடி

எமது பிரதிநிதியை விசாரிக்கவும்
எம். பூபாலசிங்கம்,
244, கே. கே. எஸ், ரோட்,
யாழ்ப்பாணம். போன்: 871

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கண்டி இராச்சியத்தில் அரசோச்சியது தமிழ்

பௌத்தத்தோடு இந்து மதத்துக்கும் சிறப்பான இடம் இருந்தது

(ஸ்ரீ கண்டி கோவிந்தசாமி இராசசிங்கா)

இலங்கையைக் கடைசியாக ஆண்டவர்கள் இந்தியாவின் நாயக்க மன்னர்களாவர். இவர்களில் முதல்வர் ஸ்ரீ விசயராச சிங்கா.

கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிரம ராசசிங்கா.

இவர்களைப்பற்றி நாம் நன்கு அறிய வேண்டின், தென்னிந்தியாவின் சரித்திரத்தைச் சிறிது நோக்குதல் வேண்டும். ஏனெனில், கி. மு. நான்காம் நூற்றாண்டில் இந்தியாவிலே, இப்போதைய ஆந்திரப் பிரதேசத்தில், தோன்றிய இனமே பின்னர் இலங்கைவரை ஆட்சிபுரிந்து வந்தது.

நாயக்க பரம்பரை

பதினான்காம் நூற்றாண்டின் இறுதியில் விசயநகர சாம்ராச்சிய மன்னர் சோழ மண்டலத்தைத் தம் இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டார். அப்பொழுது விசயநகர மன்னரின் குடும்பத்தைச் சேர்ந்த சேவப்ப நாயகர் என்பவர் 1532ம் ஆண்டில் தஞ்சாவூரில்நாயக்கப் பரம்பரையை ஏற்படுத்தினார். இவர் 1560ம் ஆண்டு வரை ஆட்சிபுரிந்தார்.

சங்கிலி மன்னனோடு தொடர்பு

அவரின்பின் அவரது மகன் அச்சுதப்ப நாயகர் என்பவர் 1560 தொடங்கி 1600 வரை ஆட்சிபுரிந்தார். இவர்தான் முதலாவதாக இலங்கையுடன், குறிப்பாக யாழ்ப்பாணத்துடன் தொடர்பு கொண்டவர். யாழ்ப்பாண மன்னருக்கும் போர்த்துகேயர் தமக்குமிடையே நீடு தடைபெற்றுவந்த போரிலே குறுக்கிட்டு, யாழ்ப்பாண மன்னரான சங்கிலிக்குத் தமது அரண்மனையிலேயே தஞ்சமளித்ததுடன் பின்னர் அவர் யாழ்ப்பாண மன்னராக ஆட்சி புரியவும் உதவிகள் செய்துள்ளார்.

திருமலை நாயக்கர்

இவரது பரம்பரையினர் 1674ம் ஆண்டுவரையில் தஞ்சையில் ஆட்சிபுரிந்தனர். அத்துடன் அவர்களது ஆட்சி முடிவு பெற்றுவிடவில்லை. அதேசமயம் அதே நாயக்க மன்னர்கள் மதுரையிலும் ஆட்சிபுரிந்து வந்தார்கள். இவர்களிலே கடைசியாக மதுரையில் ஆட்சி பெற்றவர்தான் பிரசித்திபெற்ற திருமலை நாயக்கர். இவரது பெயரில்தான் இப்பொழுதும் திருமலை நாயக்கர் மகால் மதுரையில் பிரசித்திபெற்று விளங்குகிறது.

தமிழ்ச் சேவை

இந்த நாயக்க மன்னர்கள் தமிழ் மொழிக்குப் பெரும் சேவை செய்துள்ளனர். ஆந்திர, சமஸ்கிருதப் பண்டிதர்களுடன் தமிழ் வித்துவான்களும் சரிசமமான இடம் பெற்றிருந்தார்கள். இவர்களது தமிழ்ச் சேவையினுவான வேலைகளை இன்றும் தஞ்சையிலுள்ள சரஸ்வதி மகாலிலும் மதுரை திருமலை நாயக்கர் மகாலிலும் காணலாம். இதே மன்னர்களும் அவரது இராணிகளும் எழுதியுள்ளவற்றையும் அங்கு காணலாம்.

விமலதர்ம சூரியரின் பூர்வோத்திரம்

இங்கிருந்து பின்னர் இந்த நாயக்க மன்னர்களைப்பற்றி இலங்கையில் அறிகிறோம்.

1830-ம் ஆண்டின் 'புஷ்கல'வில் குறிப்பிட்டுள்ளபடி கண்டி இராச்சியத்தை ஆளும் மன்னர்கள் சூரிய வமசத்தைச் சேர்ந்த இளவரசிகளையே மணக்க வேண்டும். அப்படிப்பட்ட இளவரசிகள் இலங்கையிலே கிடைக்காவிட்டால் "தேகும் பண்டுரு" என்னும் இராச தூதுவர்கள் இந்தியாவில் மதுரைபோன்ற இடங்களுக்கு அனுப்பப்பட்டு, அங்கிருந்து சூரியவம்ச இளவரசிகள் மன்னரை மணம் செய்ய அழைத்து வரப்பட்டார்கள். அப்படிப்பட்ட இளவரசிக்குப் பிறந்த பிள்ளைதான் பின்னர் மன்னராகலாம்.

மகாவம்சத்துக்கிணங்க 1627-1679-ல் கண்டியை ஆண்ட இரண்டாம் ராசசிங்கா மன்னர் மதுரை நாயக்கப் பரம்பரையைச் சேர்ந்த இளவரசியை மணந்துகொண்டார். அவர்களின் மகன்தான் பின்னர் விமல தர்ம சூரிய என்ற பெயருடன் கண்டியை ஆண்டான்.

அதன் பின்னர் எல்லா மன்னர்களும் நாயக்கப் பரம்பரையைச் சேர்ந்தஇளவரசிகளையே மணம் புரிந்தனர். ஏனெனில் அவர்களது பிள்ளைகள் மன்னர்களாகாமற் போவதை அவர்கள் விரும்பவில்லை. 1627-ம்ஆண்டிற்கு முன் இவ்வாறு நடைபெற்ற விவாகங்களைப் பற்றி எதுவும் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

நாயக்க மன்னர்கள் ஆட்சி

தற்பொழுதுள்ள பதிவுப் புள்ளி விபரங்களின்படி 1707--1739-ல் ஆட்சிபுரிந்த நரேந்திர ராஜசிங்கா என்ற மன்னர் தஞ்சாவூர் நாயக்க மன்னரான விசய மன்ன நாயக்காவின் புத்திரியான உடுமலா தேவி என்னும் இளவரசியை மணம் புரிந்து கொண்டார். இதன் பின்னர் 1815-ம் ஆண்டு கண்டி இராச்சியத்தைப் பிரிட்டிஷார் இணைத்துக் கொண்ட வரை நாயக்க மன்னர்களே அங்கு ஆட்சி புரிந்துள்ளார்கள்.

உடுமலா தேவியின் தமையனான நாயக்க இளவரசர் ஸ்ரீ விஜய ராச சிங்கா 1739-1747-ல் கண்டியை ஆட்சி புரிந்தார். அவரின் பின் அவரது சகோதரர் கீர்த்தி ஸ்ரீ ராசசிங்கா 1747—1780-ல் ஆட்சி புரிந்தார். அவர் 1780-ல் காலமான பின் அவரது சகோதரர் ஸ்ரீ ராச அதிராசசிங்கா மன்னரானார். அவரின் பின் ஸ்ரீ விக்கிரம ராச சிங்கா 1798—லிருந்து 1815-ம் ஆண்டு வரை ஆட்சி புரிந்தார். இவருடன் நாயக்க மன்னர்களின்ஆட்சி முடிவடைந்தது.

இந்து மதத்துக்கும் பௌத்தத்தோடு இடம்

இலங்கையில் ஆண்ட இந்த நாயக்க மன்னர்கள் அனைவரும் கலை, மதம், சங்கீதம் ஆகியவற்றில் சிறந்த அக்கறை கொண்டவர்கள்.

இவர்கள் பௌத்த மதத்தைத் தழுவிய போதிலும் இந்து மதத்திற்கும் சமமான இடமளித்திருந்தார்கள். பௌத்த கோவில்களுக்கு மானியங்கள் வழங்கியது போலவே இந்துக் கோவில்களுக்கும் மானியங்கள் வழங்கியுள்ளார்கள். பெரஹெரையிலும் புத்தரின்புனிதப் பல்லுடன் இந்து விக்கிரகங்களும் எடுத்துச் செல்லப்பட்டன. இவர்களது இராணிகள் இந்து மதத்தையே பின்பற்றி வந்தார்கள்.

இன்று கண்டியை அழகுறச் செய்யும் ஏரியும், ஆத்தான மண்டபமும் இவர்கள் கட்டுவித்தனவாகும். இங்கு தென்னிந்தியக் கலை இன்றும் காணப்படுகிறது.

கண்டி இராச்சியத்தில் தமிழ்

இவர்களது காலத்திலே தமிழ் மொழியும் கண்டி இராச்சியத்தில் உபயோகிக்கப்பட்டது. கண்டி மன்னர்

(12-ம் பக்கம் பார்க்க)

ஜூன் 18-திகதி
சனிக்கிழமை முதல்
செல்லமஹால்
(கொட்டாஞ்சேனை)
பாலாஜி—ஜெயஸ்ரீ
நடித்த
தெய்வபலம்

வெற்றிகரமான 2-வது வாரம்!
கெயிட்டி மற்றும் 5 திரைகளில்
டி. ஆர். மகாலிங்கம் - எம். என். ராஜம்
தாம்பரம் லலிதா - ஏ. கருணாநிதி நடித்த
அமுதவல்லி

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
முருகன் (இந்துப்பிட்டி)
சிவாஜி கணேசன்—மாலினி—பி. சரோஜாதேவி—சந்திரபாபு
நடித்த
சபாஸ் மீனா

ராணி (யாழ்ப்பாணம்)
ஏ. நாகேஸ்வரராவ்—சாவித்திரி
தங்கவேலு—ராஜசுலேசனு
நடித்த
எங்கள் வீட்டு மஹாலட்சுமி

ராஜேஸ்வரா (மட்டக்களப்பு)
எஸ். எஸ். ராஜேந்திரன்
கமலா லட்சுமணன்
நடித்த
சிவகெங்கைச் சீமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவை அமுதம்: 30.

அறனை மறவேல்

அறம், தருமம் என்பன வெல்லாம் ஒரு பொருட் சொற்கள். மறமல்லாதவைகள் எதுவோ அவையெல்லாம் அறச் செயல்கள்தான். பிறர்க்குதவி செய்வது, பொய் சொல்லாதது. களவு எடாதது, கொலை செய்யாதது, மது அருந்தாதது, பெற்றோரையும் பெரியோரையும் பேணுவது- இவையெல்லாம் அறக் கோயிலின் அசையாத தூண்கள். வீட்டைக் கட்டி எழுப்பத் தூண்கள் நாட்டுவது போல் அறக் கோயிலை மனக் கோயிலில் கட்டி எழுப்ப இவையெல்லாம் மிக மிக அவசியம்.

இரப்போன் ஒருவனுக்கு ஐந்து சதம் கொடுத்துவிட்டு பெரும் தருமம் செய்துவிட்டதாக இறுமாந்து போகிறோம். விருப்பில்லாமல், அரை குறை மனத்தோடு, மற்றையோர் மதிப்பைப் பெறுவதற்காக, சத்தியம் தவறாத வாழ்வு வாழ்வதாக நடித்துக் கொள்வதற்கு அறமல்ல பெயர். அது உளுத்துப் போன வாழ்வு; வெறுக்கப்பட வேண்டியதொன்று.

மற்றையோனைத் தன்னவனாக எவன் மதித்து நடக்கிறானோ அவன்தான் அறம் செய்பவன். மற்றவனை நானாக நினைக்கும்போது அவனின் கஷ்டங்களும் எனதாகின்றது. என் கஷ்டங்களை நீக்க நான் முயற்சி செய்வது போல் நானாகிய மற்றவனின் கஷ்டங்களை நீக்கவும் முயற்சிக்க வேண்டும். இதுதான் தர்மம்.

இப்போதெல்லாம்பொய், புரளி, களவு, கொலை முதலியன சர்வசாதாரணம். எடுத்ததற்கெல்லாம் வாயால் வருவது பொய். ஒரு பொய்யை மறைக்க வேறொரு பொய். களவு செய்துவிட்டு அதை மறைக்க மற்றொரு பொய். கொலை செய்துவிட்டு தப்பிக்கொள்ள இன்னொரு பொய். இவற்றைப் பார்க்கும்போது அறம் அற்றுவிட்டதோ என்று தான் எண்ணத் தோன்றுகிறது.

நேர்மையாக வாழ்பவன் கஷ்டப்பட்டு அல்லல் படுகிறான். பொய்யும் புரட்டும் செய்து வாழ்பவன் சீரும் சிறப்பும் பெற்று வாழ்கிறான். இதைக் காணும்போது இதயம் நோகிறது. ஒருவித வெறுப்பு வருகிறது. கடவுள் இருக்கிறாரா என்று ஐயுறத் தோன்றுகிறது. ஆமைக்கும் முயலுக்கும் நடந்த ஓட்டப் பந்தயத்தில் ஆமை வென்றது போல் அறம்-மறம் போட்டியில் ஈற்றில் ஜெயிப்பது அற-ஆமைதான்.

மேல் மாடிக்கு ஏறிச் செல்ல படிகள் அமைக்கிறோம். ஈசன் பாதமாகிய அழியா வீட்டை அடைய அறப்படிகள்தான் அமைக்க வேண்டும். தேக வளர்ச்சிக்கு உணவு எப்படியோ ஆன்ம சுகத்துக்கு அறமும் அப்படியே! இதை மறக்கலாமா?

—ஏ. ஜீ. ஆனந்தன்.

கனவல்ல!

(மு. கனகராஜா)

காலையில் பள்ளிக்கூடத்திற்குப் போனவன் மாலை 5 மணிக்குத்தான் வீட்டையடைந்தேன். அப்பாதான் வரவேற்றார்:— "ராஜா.....என்றுமில்லாமல் ஏன் இவ்வளவு நேரம்....." "இல்லையப்பா..... வரும்போது..." "என்னடா வரும்போது?....." அப்பாவின் கை எனது காதைப் பற்றியது. என் வாய் திறந்தது. "...வரும்போது 'தமிழரசுக் கட்சி'க் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது...'தந்தை'தான் பேசிக்கொண்டிருந்தார்....." "அதுதானே கேட்டேன்...! எனக்குத் தெரியாதே,...அடுத்த வீட்டுத் தம்பியிடமாவது சொல்லியனுப்பினாயா?" இப்போது அப்பாவின் கை எனது காதிலிருக்கவில்லை, தோளிலிருந்தது. நமது 'தமிழரசு'க்குத் தான் எத்தனை சக்தி!

"சரி! 'தந்தை' என்னதான் பேசினார் என்று சொல்லிவிட்டுப் போய் சாப்பிடு!" அடடே மகனின் நலத்தைவிட 'தமிழரசின் நலமே மேல்' போலும். ஆமாம்! தமிழரசென்றால் பசியாவது, பட்டினியாவது! தமிழர் 'தந்தையின் சொற்பொழிவை அப்பாவிடம் விளக்கினேன். அதைச் சொல்லாது போனால்தானென்ன? தமிழரின் இதயக் குமுறல்தானே தமிழரசின் பேரொலி. இது தமிழ்ப் பேசுவோருக்கு சொல்லித்தெரிய வேண்டியதில்லையே. தமிழ் பேசுவோரொவ்வொருவரது வாக்குகளும் தமிழரசுக்கன்றி வேறெவருக்கு? இல்லை! இல்லை! எங்கள் உயிரே தமிழரசுக்குத்தானே — தமிழுக்குத்தானே!

சாப்பிட்டுவிட்டுவந்தேன். அப்பா கூப்பிட்டார். "ராஜா...நீ கூட்டத்துக்குப் போனது சரி.....,ஆனால் அதிலே உனது முழுக்கவனத்தையும் செலவழித்துவிடாதே. அதற்கு நாங்களிருக்கிறோம். இதற்காக 'அரசியலைப்பற்றி அறிந்துக் கொள்ளாதே' என்று நான் கூறவில்லை, தமிழனாகிய உனக்கு நான் கூறவும் மாட்டேன். நீ இப்போது கல்வியிலேயே உனது முழுக் கவனத்தையும் செலவழிக்க வேண்டும். இப்போது உனக்கு கல்விதான் முக்கியம். கல்வியறிவைத் தேடிக் கொண்டபின்தான், இவற்றில் நீ இறங்க வேண்டும்....." அறிவுரை தொடர்ந்தது. என் நெஞ்சு விம்மியது. அன்புள்ளம் கொண்ட ஒரு அப்பாவைப் பெற்றேன். ஆறறல்மிக்கதோர் 'தமிழரசு'ம் பெற்றேன் எனக்கென்ன குறை.

படித்துக்கொண்டிருந்தேன். மணி.....பதினொன்றரையாகிவிட்டது. இவி படுக்க வேண்டியதுதான்.

விடிந்துவிட்டதா...? தெருவில் போய்க் கொண்டிருந்தேன். எதிரே இபுருகிழம், வேலனும் வந்துக்கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்தேன். அடடே! என்ன ஆனந்தம்! என்ன கம்பீரம்! அவர்களிடம். அவர்களது முகப்பொலிவுதானென்ன? தம்மையேயறியாமல் என்னைக் கடந்து சென்றார்கள், எதிரே! அதோ இன்னுமோர் நண்பர் கூட்டம் வருகிறதே.....! அவர்களுக்காவது என்னைத் தெரிகின்றதா?... உள்ளம் துள்ளவல்லவா போகின்றார்கள். எல்லோருமே துன்பமில்லாமலே இருக்கின்றார்களே!

"வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே"

வாழ்த்தொலி பாடியது. அடடா! 'தமிழரச'ல்லவா இப்போது நடக்கிறது. அதனால் மொழியுரிமை, குடியுரிமை எல்லாமல்லவா பெற்றுவிட்டோம்.

தமிழ் பேசுபவர்கள் தரணியிற் சிறந்ததொரு தமிழரசுக் கட்சியைப் பெற்றுவிட்டார்கள். தன்மானமும், தன்னம்பிக்கையும், தன்நெறியும் கொண்ட சிறந்த தலைவர்களையும் பெற்றுவிட்டார்கள், இதயச்சுனையினின்றூறும் கருத்துக்களைக் கவிதைகளாக, கதைகளாக, கட்டுரைகளாக ஆக்கித்தந்து இலக்கியத் தொண்டாற்ற சிறந்த ஒரு பத்திரிகையும் பெற்றுவிட்டார்கள். அவர்களுக்கென்ன குறை? இனி:-

"தெருவெங்கும் பள்ளிகள்
கட்டுவோம்—கல்வி
தெரியாத பேர்களை இல்லாமல்
செய்வோம்
கருத்தாகப் பல தொழில்
பயிலுவோம்—ஊரில்
கஞ்சிக்கில்லை என்ற சொல்லி
லைப் போக்குவோம்"

அதனால் இன்பம் கொள்வதில் என்ன தவறிருக்கிறது? வாழ்க ஈழத் தமிழகம்! வளர்க தமிழ்!

"ராஜா.....ராஜா! நீதானடா உண்மையான தமிழன். கனவிலும் நனவிலும் தமிழ்—தமிழரசு என்றே வாழ்கின்றாயே! தமிழன்னை உன்னைப்போன்ற 'இளைஞர்களைப் பெற்றதில் நான் பெருமை கொள்கின்றேன். தமிழர்களெல்லோருமே பெருமை கொள்கின்றார்கள். இத்தமிழ் மண்ணே தலை நிமிரப்போகிறது. மணி நாலரையாகிவிட்டது எழும்பு.

"என்ன! நான் கனவா கண்டேன்.....அங்கு என்ன சப்தம்....." திரும்பினேன்! அப்பா வாரொலிப் பெட்டியருகிலிருந்தார். என்னை எழுப்பிவிடாமல் அவர் மாத்திரம் தேர்தல் முடிவுகளை எவ்வளவு சுவாரஸ்யத்தோடு கேட்டுக் கொண்டிருக்கின்றார்.....!

(12-ம் பக்கம் பார்க்க)

புகழோடு தோன்றிய புலவர்

—பூங்குன்றன்—

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னே ஒரு நாள், தாம் எழுதிய ஏட்டுச் சுவடியைப் பிரித்துக் கையிலே பிடித்தபடி, மக்கள் முன் தோன்றினார் ஒரு புலவர். அவர் கையிலிருந்த ஏட்டிலே,

"தோன்றின் புகழோடு
தோன்றுக; அஃது இலார்,
தோன்றலின் தோன்றாமை
நன்று"

என்னும் குறள் (236) மின்னியது. 'ஒரு துறையில் முற்பட்டுத் தோன்றுவதானால் புகழ் உண்டாகும்படி தோன்ற வேண்டும்; அங்ஙனம் புகழ் உண்டாம் படியாகத் தோன்ற முடியாதவர்கள், அத்துறையிலே முற்பட்டுத் தோன்றுவதை விடத் தோன்றாமல் அமைந்திருத்தல் நன்று' என்ற பொருள், அங்கே நின்று நிலவியது.

அங்ஙனம் தோன்றிய புலவர் பெருமகன் யாரென இதற்கிடையில் அறிந்திருப்பீர்களென நம்புகிறேன்; [illegible]

உண்மை வரலாறு நமக்குக் கிடைக்கவில்லை. ஆனால், அவருடைய கதையை நிறையப் படித்தும் கேட்டும் இருக்கிறோம்! அவை உண்மை வரலாறுகளே அல்ல; புனைந்துரைகளே. யார் யாரோ பாடிய தனிப் பாடல்களை வைத்துக் கொண்டு, கற்பனை பண்ணப்பட்ட வெறும் கற்பனைக் கதைகள் அவைகள். அக்கதைகளினூடே இழையோடிருக்கும் ஓர் உண்மை என்ன வென்றால், 'அவர் திருக்குறளை இயற்றினார்' என்பது மட்டுந்தான்.

திருக்குறளை வைத்துக் கொண்டு பார்த்தால், திருவள்ளுவர் தமிழ் நாட்டிலே பிறந்து வளர்ந்து, இல்வாழ்க்கையில் ஒழுகி மக்களை ஈன்று, அற நெறி நின்ற ஒரு தெய்வப் புலவர் என்பதைக் காணலாம்.

பழைமையான தமிழ் நாட்டிலே தோன்றிய அவர், இயற்றிய ஒரே நூல் திருக்குறள்; அது, வாழ்க்கைத் துணை நூல். அறம் பொருள் இன்பம் என வாழ்க்கையை மூன்று கூறு செய்து, அவை ஒவ்வொன்றைப் பற்றியும் பற்பல சிறு தலைப்புகளின் கீழ் விளக்கியுள்ளார் அவர்.

வாழ்க்கைக் கூறுகள் ஒவ்வொன்றையும் நுணுகி ஆராய்ந்த சிறப்பிலே, ஈராயிரம் ஆண்டுகளின் முன்பு தோன்றிய நூலாக இருந்தும், அதை இன்றும் படித்துப் பயன் பெறத் தக்கதாக இருக்கின்றது.

தமிழ் நாட்டுப் புலவர் ஒருவராலே, தமிழிலே இயற்றப்பட்ட தமிழ் மறையாகிய திருக்குறள், இன்று ஓர் உலக நூலாக-பொது மறையாக-இலங்குகின்றன; அதை இயற்றிய தமிழ்ப் புலவராகிய நம் திருவள்ளுவரைப் போற்றிப் புகழ்கின்றனர். அவரை ஈன்ற தமிழ் நாடும், 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ் நாடு' என்று, சிறப்புப் பெறுவதாயிற்று.

பன்றி, பல் குட்டிகளை ஈனுகின்றமையினாலே புகழ் பெற்று விடுகின்றது! நமது திருவள்ளுவரும், குஞ்சரக் கன்று போலே, ஒரே ஒரு நூல்-ஈரடிக்குறள் வெண்பாவினால் உலக முழுவதும் அளந்த நூல்-இயற்றிப் புலமைத்துறையிலே புகழோடு தோன்றியிருக்கிறார். "தோன்றிற் புகழோடு தோன்றுக" என்ற தமது இலக்கியத்துக்குத் தாமே இலக்கணமாக அமைந்து ஒளி வீசுகின்றார்.

பாரதியின் பாட்டொலி:

தொண்டு செய்யும் அடிமை

ஆன்று அடிமைகளாகவிருந்த பாரத நாட்டு மக்களிடம் பாரதி கேட்டதை இன்று நாம் ஈழ நாட்டுத் தமிழ்ப் பெருங்குடி மக்களிடம் கேட்கின்றோம். எப்படி?

தொண்டு செய்கின்ற அடிமையே உனக்குச் சுதந்திர நினைவோடா? எப்போதாவது நீ சுதந்திரத்தைக் கண்டாயா? அதைப் பாதுகாப்பவனா நீ? சாதிச் சண்டைகள் சமயச் சண்டைகள் முடிந்துவிட்டனவா? நீதி சொல்லவா வந்தாய்? கண்முன் நிற்க முடியாது போடா! அச்சம் நீங்கிவிட்டாயா? ஆண்மை வந்துவிட்டதா? பிச்சை பெற்று வாழும் ஆசையைப் பேணினாயே! அது ஒழியவில்லையா?

அடிமைகளே கப்பலேறுவீர்களோ? கடலைத் தாண்டுவாயோ? குப்பை விரும்பும் நாயே! கொற்றம் எறும் விருப்பமுண்டோ? ஒற்றுமையைப் படித்துவிட்டாயோ? உடம்பில் வலிமையுண்டா? வேறு வேறு உரை பேசாதே! வீரத்தை அறிவாயா நீ? சேர்ந்து வாழ்வீர்களா? உங்கள் சிறுமைக் குணங்கள் போய்விட்டனவா? சோம்பல் போய்விட்டதா? வெள்ளை நிறத்தைக் கண்டால் பதறி ஒழித்தாயே!— இன்று சிங்களவரைக் கண்டால் நடுங்குகிறாயே! இப்படியிருக்க நீ விரும்பினால் உனக்குச் சுதந்திரமில்லை! மறந்திடடா?

நாட்டைக் காக்க உனக்கு ஞானம் சிறிதுமிருக்கா? வீடு காக்கப் போடா? அடிமை! வேலை செய்யப்போடா! சேனை நடத்தத் தெரியுமா? தொழும்பு செய்ய விரும்புவாயா? ஈனமான தொழிலே உனக்கு இசைவதாகும் போடா?

தமிழ்ப் பெருங்குடிச் சகோதரர்களே! ஈழமவாழ் இன்பச் சகோதரிகளே!! இந்த இழிநிலையில் நாம் வாழலாமா? வீறுகொள்ளுங்கள் வீரக் காளைகளே! கன்னியர்களே! அடிமை வாழ்வை உடைத்தெறிந்து உரிமையுடன் வாழ்வோம்.

—"சித்தாண்டிச்சபா"

வளர்மதி—சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப் படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும்.

வளர்மதி

சுதந்திரன் மாணவர் மன்றம்

அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 6.

பெயர்.....

பாடசாலை .....

விலாசம் .....

.....

....

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகச் செய்திகள்

ஏழை முஸ்லிம் சகாயநிதி இயக்கம்

மருதானை சிமன்ஸ் வீதி 36 4 இலக்க இல்லத்தில் கடந்த 28-5-60-ல் ஏழை முஸ்லிம் சகாய நிதி இயக்கத்தின் பொதுக் கூட்டம் ஆலி ஜனுப் எஸ். எம். எம். ஹம்ஸா தலைமையில் கூடியது.

ஜனுப் வி. பி. எம். ஷேக் முஹிதீன்சென்ற 28-2-40-ல் நடந்த அங்குராப்பணக் கூட்டத்தின் அறிக்கையை வாசித்தார். அதன் பின் தலைவர் தமது முன்னுரையில் இயக்கத்தின் நோக்கங்களை இயக்க உறுப்பினர்களுக்கு எடுத்துக் கூறினர். ஜனுப் வி. எம். பி ஷேக் முஹிதீன் தமது சிரமத்தை பாராமல், நன்கொடைகளை வசூலித்து இயக்கத்தை வளர்த்தமைக்கு நாம் யாவரும்அவரைபாராட்ட வேண்டுமென்றார். மேலும் இயக்கத்துக்கு மனமுவந்து நிதி உதவி தந்து வளர்ச்சியை பெருக்க முன்வந்த அனை பேர்களுக்கும் நன்றியறிதலை தெரிவித்தார். அதன் பின்னர் இயக்கத்தின் உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப் பட்டனர்:—

தலைவர்: ஜனுப். எஸ். எம். எம். ஹம்ஸா, செயலாளர்: ஜனுப் வி. எம். பி. ஷேக் முஹிதீன், பொருளாளர்: ஜனுப் எம். சம்சுதின், கணக்கு பரிசோதகர்: ஜனுப் எப். எம். இப்ருஹீம், வசூலிப்பாளர்: ஜனுப் ஏ. ஆர். எம். முஹம்மது. கமிட்டி அங்கத்தவர்களான ஏ. ஆர். எம். தாஹா ந. ந. நெய்னு முகம்மது, எம். எஸ். சாஹுல் ஹமீத், ஏ. பி. நெய்னு இவர்களை தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தீ பிடிந்து...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

தலை கீழ் இருதயம்

மேலீபோர்ன் நகரில் தலை கீழ் இருதயத்துடன் ஆறு மாதத்திற்கு முன் ஒரு குழந்தை பிறந்ததை அணிமையில்,மெல்போர்ன்நகர குழந்தைகள் ஆஸ்பத்திரியில் இருதயத்தை இயற்கை நிலையில் வைக்க ஒருமணிநேரம் ஆபரேஷன் நடந்தது. குழந்தை பிழைத்துக் கொள்வதற்கு 50 சத விதம் வாய்ப்புஇருப்பதாக மருத்துவர்கள் கருதுகிறார்கள்.

பிரம்படி படலம்

பொர்த்துக்கீசிய கிழக்காபிரிக்க நகரான மொசாம் பக்கில், ஒரு பெண் உள்பட எழுவருக்கு தலா 100 பிரம்படி கொடுக்கப் பட்டது. அருகில் உள்ள நகர் ஒன்றில் ஓர் அரசியல் கட்சிக்கு அவர்கள் ஆதரவு தேட முயன்ற குற்றத்திற்காக அரசாங்க அதிகாரியின் ஆணைப்படியே 'இந்தப் பிரம்படிபடலம்' நடந்ததாம்.

உலோக மரம்

கோடை காலத்திலும் கொட்டும் மழைக் காலத்திலும் பசுமை குறையாமல்—வன்ணம் கலையாமல் காட்சி தரும் இரண்டு மரங்கள் லெனின்கிராடிலுள்ள பூங்கா ஒன்றில் இருக்கின்றன. இம்மரங்கள் இவ்வாறு விளங்குவதற்கு என்ன காரணம் தெரியுமா? அவை இரண்டும் உலோகத்தால் செய்யப்பட்டவையாம்.

7 லட்சத்து 77 ஆயிரம் பிரதிகள் விற்ற நாவல்

உலகப் புகழ்பெற்ற மாக்ட்வைன் என்ற அமெரிக்க எழுத்தாளர் ஆண்டியும் அரசனும் என்ற ஒரு நாவல் எழுதியிருக்கிறார். அந்நூல் பெயர்க்கப்பட்டு போலந்தில் வெளிப்பட்டது. ஆறு பதிப்புக்களாக 7 லட்சத்து 77 ஆயிரம் பிரதிகள் விற்றிருக்கின்றனவாம்.

மாணவர் தேர்ச்சிச் சங்கம்

காரைநகர், பாலாவோடை தமிழ் கலவன் பாடசாலை மாணவர் தேர்ச்சிச்சங்கம் கடந்த 20-5-60-ல் பாடசாலை மண்டபத்தில் திரு. ச. சுந்தையா ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது.

சங்க மாணவர்கள் ஓதிய தேவாரத்துடன் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றன. நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக திரு. க. ஆறுமுகம், ஆசிரியர் தலைவராகவும் செல்வன் வே. குலசிங்கம் செயலாளராகவும், செல்வி. சி. சாரதாமணி பொருளாளராகவும், தெரிவுசெய்யப்பட்டனர்.

தமிழ் இலக்கிய சங்கம்

கொழும்பு, கொட்டாஞ்சேனை, புனித பெனடிற் கல்லூரித் தமிழ் இலக்கிய சங்கப் பொதுக் கூட்டம் மேற்படிக் கல்லூரி நூல் நிலையத்தில், 1-6-60 அன்று திரு. நா. ஹரிரத்தின ஜோதி தலைமையில் நடைபெற்றது.

தலைவரின் தலைமையுரையைத் தொடர்ந்து சென்னை மாணவ மன்றச் செயலாளரும், பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மன்றத் தலைவருமான திரு. வேழ வேந்தனுரை சபையோருக்கு திரு. தெ. ஈஸ்வரன் அறிமுகம் செய்து வைத்தார்.

திரு. வேழவேந்தனுர் எழுத்துக்கலை என்னும் விடயம் பற்றிச் சொற்பொழிவாற்றுகையில், "இலங்கையிலிருந்தே தேமதுரத் தமிழ் மொழியைக் கேட்க முடிகின்றது. இந்தியாவில் ஆகாஷ் வாணி என வட மொழியில் விளம்பும்போது ஈழ வானொலியில் இலங்கையில் இருந்து இலங்கை வானொலி எனக் கூறுவதைக் கேட்கும் போது இன்புறுகின்றேன். செந்தமிழ் மொழியைச் செழிப்படையச் செய்யப் பாடுபடும் ஈழத் தமிழர்களைப் பாராட்டுகின்றேன்; போற்றுகின்றேன் என்று கூறினர்.

தலைவர் தமது பின்னுரையில் சங்கம் "அந்தநாள்" உபகாரக் காட்சி நடத்திய போது உதவிய அனைவருக்கும் நன்றி நவின்றார்.

வித்துவான் நீ. மே. யோ. வேதநாயகத்தின் சிற்றுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

தமிழரசுக் கட்சிக் கிளை அங்குரார்ப்பணம்

இலங்கைத் தமிழரசுக் கட்சி இணுவில் தெற்குத் தாவடி வடக்குக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டம் சென்ற 30-5-60ல் இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலைமண்டபத்தில் திரு ச. முத்துலிங்கம் (உடுவில் கிராமச் சங்க உறுப்பினர்) தலைமையில் தொடங்கியது.

உடுவில் தொகுதி மாஜி பாராளுமன்ற உறுப்பினரும், தற்போதைய உடுவில் தொகுதி அபேட்சகருமான திரு வி. தர்மலிங்கம் கடந்த பாராளுமன்றக் குறுகிய காலத்திற்குள் இலங்கைத் தமிழரசுக் கட்சி நடந்து கொண்ட முறையும், அக் கட்சி ஈற்றில் செய்த முடிவுகள்பற்றியும் விரிவாக எடுத்துக் கூறினர். பின் திரு ச. முத்துலிங்கம் பேசும்பொழுது மேற்படி கிளையின் அவசியத்தைப்பற்றியும் [illegible] செய்ய வேண்டிய கடமைகள்பற்றியும் பேசினர். பின்

கீழ்காணப்படுவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:-

தலைவர்: கு. கனகரத்தினம் (உடுவில் கி. ச. உறுப்பினர்) உபதலைவர்: ச. தம்பியையா, காரியதரிசி: த. விஞயகமூர்த்தி, உபகாரியதரிசி: அ. ஜெயபாலரத்தினம், தனதிகாரி: வி. நவரத்தினம்.

கீழ்காணப்படுவோர் பல்வேறு வட்டாரங்களிலும் இருந்து நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்:

திருவாளர்கள்: செ. கதிர்காமதாசன், து. கிருஷ்ணசாமி, த. இராசரத்தினம், வ. சற்குருநாதன், இ. பாலசிங்கம், ஐ. இராசரத்தினம், பொ. தியாகராசா, ச. செல்வவிநாயகன், து. சிவசுப்பிரமணியம், சி. நவரத்தினம், த. துரைராசா, க. தில்லையம்பலம் க. கந்தசாமி, வி. செல்வத்துரை.

அருந்ததியர் சமூகத் தந்தைக்கு அனுதாபம்

அருந்ததியர் சமூகத் தந்தையும் பிரபல சமூக ஊழியருமான காலஞ்சென்ற திரு எம். எம். இராஜகோபாலுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு கடந்த 28-5-60ல் கொழும்பு விவேகானந்த வித்தியாலய மண்டபத்தில் அகில இலங்கை அருந்ததியர் சங்கத்தின் ஆதரவில் ஓர் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு சங்கத் தலைவர் திரு மூ. வேலாயுதம் தலைமைவகித்தார்.

திரு இராஜகோபாலின் படத்தை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு எஸ். சோமசுந்தரம் திரைநீக்கம் செய்து வைத்துப் பேசுகையில் கூறியதாவது:-

திரு இராஜகோபால் 1932ல் தனியாக அருந்ததியர் இயக்கத்தை ஆரம்பித்தார். எந்தச் சங்கத்திலும் எல்லா மக்களும் உழைப்பாளிகளாவதில்லை. சமூகாபிமானமும் உணர்ச்சியும் உள்ளவர்கள்தான் சங்கம் மூலமாக சமூக முன்னேற்றத்துக்குப் பணியாற்றுபவர்கள். இந்தப் படிப்பினையைத் தான் திரு இராஜகோபால் நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார். அவர் கனவு கண்ட இலட்சியம் ஈடேறுவதற்கு நீங்கள் எல்லோரும் மிகத் தீவிரமாக பொதுப் பணியாற்ற வேண்டும். வேண்டும்போது எங்களுடைய உதவி உங்களுக்கு நிச்சயம் உண்டு என்று கூறி முடித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ஜனுப் ஏ. அஸீஸ் திரு இராஜகோபாலின் படத்திற்கு மலர்மாலை அணிவித்து சொற்பெருக்காற்றினர்.

மற்றும் திருவாளர்களான டியெம்பி, எம். எஸ். அருள், ஏ. பொன்னையா, மதுரை ஏ. செல்வநாயகம், இரா அதிமணி ஆகியோர்கள் பேசியதும் இணைச் செயலாளர் திரு கே. எம். இராஜுவின் நன்றியுரையோடு கூட்டம் முடிவடைந்தது.

பொலந்நறுவை பெற்றோர் ஆசிரியர் சங்கம்

பொலந்நறுவைப் பகுதியில் உள்ள முத்துக்கல் அரசினர் தமிழ்ப் பாடசாலையின் பெற்றோர்—ஆசிரியர் சங்கத்தின், இவ்வாண்டுப் பொதுக் கூட்டம், புதிய தலைமையாசிரியர் தலைவர் திரு ச. அருளானந்தம் தலைமையில், தற்காலிக பாடசாலை மண்டபத்தில் 23-5-60ல் கூடியது.

ஆங்கு கூடியிருந்த பெற்றோர் சமூகத்திற்கு, தலைமையாசிரியர் பாடசாலை மண்டபத்தின் அவல நிலையை எடுத்துக்காட்டி, பாடசாலை வளர்ச்சியில் பெற்றோர் பணி எவ்வகையில் செயல்பட வேண்டுமென மிக விரிவாக விளக்கித் தமது தலைமையுரையை நிகழ்த்தினர்.

அடுத்து, "பெற்றோர் ஒத்துழைப்பு" என்ற விடயமாக உதவியாசிரியர் திரு கனகரத்தினம் என்பவரும், "எமது கடமை" என்ற பொருள்பற்றி திரு தி. செல்லையாவும், "எமது பாடசாலைத் தேவைகள்" என்ற தலையங்கத்தில் திரு சி. ப. காத்தமுத்துவும் சிறந்த உரைகளாற்றினர்.

பின்பு, புது ஆண்டு சங்க நிர்வாகிகளாக, திரு ச. அருளானந்தம் தலைமையாசிரியர் (தலைவர்) திரு சி. கனகரத்தினம், ஆசிரியர் (செயலாளர்) திரு கா. இராமலிங்கம் (பொருளாளர்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

பாடசாலையில் தோன்றும் பிரச்னைகளை சுமுகமாகத் தீர்ப்பதற்கு உதவும் வகையில் ஐவரைக்கொண்ட ஒரு விசேட ஆலோசனைக் குழுவும் சபையினரால் அமைக்கப்பட்டது.

"தியாகம்"

(10ம் பக்கத் தொடர்ச்சி)

கைக்காகக் காத்திருந்தாள். "வாருங்கள் மூர்த்தி!" அன்பாக வரவேற்றாள் அவள். அவனுடைய உள்ளத்திலே ஒரு தனி நம்பிக்கை ஏற்பட்டது. மேசையில் அவனுக்காகக் காத்திருந்த ஒரு கோப்பை காப்பியைத் தூக்கி அவனிடம் நீட்டி "அருந்துங்கள் மூர்த்தி" என்றாள் காப்பியில் இருந்து ஆவி பறந்துகொண்டிருந்தது. அதைவிட உஷ்ணமாக இருந்தது அவன் இதயத்திலே பாய்ந்து கொண்டிருந்த இரத்தம்.

காப்பியைச் சுவைத்துக் கொண்டே கேட்டான்.

"முடிவுக்கு வந்தாயா சாந்தி......?"

"ஆம்"

"உன் முடிவு நல் முடிவாக இருக்கும் என எதிர்பார்க்கிறேன்"

"என் முடிவு...? ஒரு இரவு முற்றாகக் கண்விழித்து அலசி ஆராய்ந்த முடிவு. எம் இருவருக்கும் என்பது என் தீர்ப்பு. என்னை மன்னித்து விடுங்கள் மூர்த்தி. உங்களை மணக்க நான் சம்மதிக்க முடியாது"

"சாந்தி......! உன் முடிவு தீர்க்கமானதா......?"

"நிச்சயமாக மாற்ற முடியாதது" விம்மல் விக்கல் இவற்றின் நடுவே பிறந்தது பதில். மேசைமேல் குப்புறப் படுத்து விம்மினள்.

"அப்படியானால் உனக்கு இன்னும் என்னிடம் நம்பிக்கையில்லை"!

"இல்லை மூர்த்தி!இந்த உலகத்திலே யாரிடமும் இல் [illegible] மேல் எனக்குண்டு. என் இதயத்தில் உங்களுக்கு இருக்கும் அன்பு வேறு எவருக்குமே கிடையாது. என் உள்ளத்தில் வீற்றிருக்கும் தெய்வம் நீங்கள் தான். ஆனால் நடைமுறையில் கணவன் மனைவியாக வாழ நான் விரும்பவில்லை. என்னை மன்னித்துவிடுங்கள் மூர்த்தி."

இரண்டாம் முறை சிலையாகினன் அவன்.

"காரணம் எதுவாக இருக்கும் என்று சிந்திப்பீர்கள். நீங்கள் நல்லவர். பெற்றார், உற்றார், சமூகம் இவற்றை எல்லாம் துச்சமாக மதித்து என்னைப் பெரிதாக மதித்து வந்திருக்கும் உங்கள் அன்பிற்கு நான் என்றும் கடமைப்பட்டவள். ஆனாலும் சிறிது சிந்தித்துப் பாருங்கள் மூர்த்தி. நாம் இருவரும் சட்டப்படியாகக் கணவன் மனைவியாகவாம் வாழலாம்...... குழந்தைகளும் பெறலாம். ஆனால் நாளைக்குத் தெருவாலே இருவரும் வெளிக்கிடும்போது இந்தக் கேடு கெட்ட சமூகம் எம்மைச் சும்மாவா விடும்......? உங்களைப் பார்த்து இவன்தான் அந்த ஹரிஜனப் பெண்ணைக் கட்டிக் குலத்துக்கே ஈனம் தேடினவன் என்றும் என்னைப்பார்க்கும் போது இவள் தான் மூர்த்தியை மயக்கிய ஹரிஜனப்பெண். அவனுக்கு ஏதோ மருந்து போட்டுவிட்டாள், என்னத்தைக் கண்டு இவளைப் போய்க் கட்டினுனே. என்றும் எங்கள் குழந்தைகளைப் பார்த்து இவை தான் அந்த ஹரிஜனப் பெண்ணின் பிள்ளைகள் என்று கூறி அவர்களை ஒதுக்கி வைப்பார்கள். இவற்றை எல்லாம் கண்டும் கேட்டும் எப்படி நிம்மதியாக வாழ முடியும்......?

"நாங்கள் எங்காவது வெளியூர் சென்று வாழ்ந்தால்......! நிலவுக்கு ஒளித்துப் பரதேசமா......? எங்கள் இருவர் வாழ்க்கையுடனும் இந்த ஜாதிப் பேயே ஒழிந்து விடுமா என்ன......?

"வேண்டாம் மூர்த்தி என் கெதி என் வருங்கால சமுதாயத்திற்கும் ஏற்பட வேண்டாம். இதற்காக என் வாழ்வையே தியாகஞ் செய்கிறேன். இனிமேலும் எங்கள் சமுதாயத்தில் ஜாதி பேதம் இருக்கப்படாது. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்ற பரந்த மனப்பான்மை வளரவேண்டும். என் கடைசி மூச்சு இருக்கும் வரை என் வாழ்வை என் லட்சியத்திற்காகத் தியாகஞ் செய்யத் தீர்மானித்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். இது தான் என் முடிவு......!"

சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவறுமல் பெற்றுக் கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா. 10-00

(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சர்குலேஷன் மனேஜர்
சுதந்திரன்.

தபால் பெட்டி 1183,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகரமான 2-வது வாரம்!

காமினி ❁ மைலன் ❁ நியூசினிமா ❁ தாஜ்மஹால்

(மருதானை) (கொழும்பு) (குருணாகலை) (கல்முனை)



பிரேம் நசீர், ஈ. வி. சரோஜா,
ஏ. கருணாநிதி, எம். என். ராஜம்,
டி. பாலசுப்பிரமணியம்,
வி. ஆர். ராஜகோபால்,
காமினி, ஓ. ஏ. கே. தேவர் ஆகியோர் நடித்த

லலித கலா பிலிம்ஸ் அளிக்கும்

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்

கதை-வசனம்: எஸ். ஐயாபிள்ளை தயாரிப்பு: சி. ஹொன்னப்பபாகவதர்
சங்கீதம்: கே. வி. மகாதேவன் டைரக்ஷன்: எம். ஏ. திருமுகம்

பின்னணி:
பி. லீலா-பி. சுசீலா - ஜமுனாராணி - ராஜேஸ்வரி - சீர்காழிகோவிந்தராஜன் - ராகவன்-எஸ். சி. கிருஷ்ணன்

குதூகலமான 3-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

வெம்பிளி (கண்டி) ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) மொடர்ன் (பதுளை) விஜிதா (மஸ்கேலியா) லக்சுமி (இரத்தினபுரி) தீவொளி (நுவரெலியா)

கருத்தமைந்த கதை—காதுக்கினிய கீதம்
காலத்திற்கு ஏற்ற கலைப் பொக்கிஷம்

சிவாஜி கணேசன் ❁ பி. சரோஜாதேவி
எம். ஆர். ராதா, பத்மினிபிரியதர்சினி
டி. எஸ். பாலையா—எஸ். வி. சுப்பையா
எம். என். நம்பியார், தாம்பரம் லலிதா,
எம். வி. ராசம்மா, சி. கே. சரஸ்வதி முதலியோர் நடித்த

சரவணா பிலிம்ஸ்

பாகப் பிரிவினை

கதை—வசனம்: எம். எஸ். சோலைமலை
திரைக் கதை-டைரக்ஷன்: ஏ. பீம்சிங்
இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி

பின்னணி: டி. எம். சௌந்திரராஜன் —சீர்காழி கோவிந்தராஜன்
பி. லீலா—பி. சுசீலா—ஜமுனாராணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை [illegible] எஸ். டி. சிவநாயகம் அவர்களான் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்கமாவத்த, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 ஜூன் 12-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது.